# திருமாணிகுழி



ஆசிரியர்

**இரா. சிவானந்தம்**

பதிப்பாசிரியர்

முனைவர் **தி.ஸ்ரீ.ஸ்ரீதர்**, இஆப,

முதன்மைச் செயலாளர்(ம)ஆணையர்

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை - 600 008

# திருமாணிகுழி

ஆசிரியர்
இரா. சிவானந்தம்

பதிப்பாசிரியர்
முனைவர் தி.ஸ்ரீ.ஸ்ரீதர், இ.ஆ.ப,
முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர்

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை
சென்னை - 600 008
2010

# BIBLIOGAPHY


| | | |
|---|---|---|
| Title | : | TIRUMAANIKUZHI |
| Author | : | R. Sivanantham |
| Editor | : | Principal Secretary & Commissioner |
| Copy right | : | Tamilnadu State Dept. of Archaeology |
| Subject | : | History |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Publication No | : | 212 |
| Year of Pub. | : | 2010 |
| No.of Pages | : | 134 |
| Type point | : | 11pt |
| Paper used | : | 80 GSM Maplitho |
| Printer | : | The Chennai Printers Industrial Co-operative Society Ltd. 6, Pycrofts Road, Triplicane, Chennai- 600 005 Ph:28446287/89 |
| Publisher | : | State Dept. of Archaeology Tamil Valarchi Valaagam Halls Road, Egmore, Chennai-600 008 |
| Price | : | Rs. 86/- |

முனைவர் **தி.ஸ்ரீ.ஸ்ரீதர்,** இ.ஆ.ப.
முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர்
தொல்லியல் துறை

தமிழ் வளர்ச்சி வளாகம்,
ஆல்சு சாலை, எழும்பூர்,
சென்னை - 600 008.
நாள் : 11-01-2010

# பதிப்புரை

தமிழகத்திலுள்ள கல்வெட்டுகள், தமிழகக் கோயில்களின் கட்டடம், கலை, சிற்பம், ஓவியம், செப்புத்திருமேனிகள் ஆகியவற்றைப் பற்றி விரிவாக மாணவர்கள் கற்க வேண்டி தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை 1973-74-ஆம் ஆண்டு 'கல்வெட்டுப் பயிற்சி நிறுவனம்' ஒன்றினை நிறுவியது. இக்கல்வெட்டுப் பயிற்சி நிறுவனம் ஆண்டுதோறும் முதுகலைப்பட்டம் பெற்ற எட்டு மாணவர்களுக்கு 'கல்வெட்டியல் மற்றும் தொல்லியல்' என்னும் முதுகலைப் பட்டயம் ஒன்றினை வழங்குகிறது. இதுவரை இப்பயிற்சி நிறுவனத்தில் 192 மாணவர்கள் பயின்றுள்ளனர்.

இம்மாணவர்களது பயிற்சி காலத்தில் ஒரு குறிப்பிட்ட கோயிலைத் தேர்ந்தெடுத்து அவ்வூர் மற்றும் அவ்வூர் கோயிலைப் பற்றி விரிவாக ஆய்வுசெய்து ஆய்வேடு ஒன்றினை சமர்ப்பிக்கின்றனர். இவ்வாய்வேடுகளில் இதுவரை 17 ஆய்வேடுகள் நூல் வடிவம் பெற்றுள்ளன.

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையில் கல்வெட்டாய்வாளராக பணிபுரிந்துவரும் திரு. இரா. சிவானந்தம் அவர்கள் 1998-99-ஆம் ஆண்டு இத்துறை கல்வெட்டுப் பயிற்சி நிறவனத்தில் பயின்றபோது, இவர் எழுதிய **'திருமாணிகுழி'** என்னும் ஆய்வேடு தற்போது நூலாக வெளிவருகிறது. இவர் காஞ்சிபுரம் மாவட்டத் தொல்லியல் கையேடு' எனும் நூலினையும் இருபதுக்கும் மேற்பட்ட ஆய்வு கட்டுரைகளை எழுதியுள்ளார்.

இந்நூல் பதிப்பிக்கும் பணியினை மேற்கொண்ட இத்துறை கல்வெட்டாய்வாளர்கள் திரு. கி. சு. சம்பத், திரு. இரா. சிவானந்தம் அவர்களுக்கும் மேனாள் பதிவு அலுவலர் திருமதி அர. வசந்த கல்யாணி அவர்களுக்கும் எனது மனமார்ந்த பாராட்டுகள்.

இந்நூலை வெளிக்கொணர பகுதி-II திட்டத்தின் கீழ் நிதியுதவி அளித்து சிறப்பிக்கும் தமிழ்நாடு அரசுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலினை நல்ல முறையில் டிடிபி செய்து அட்டைப் படம் வடிவமைத்த அச்சுக்கோர்ப்பாளர் திருமதி தே. சத்தியவதி மற்றும் அச்சுப்பிழைத் திருத்தி திரு. ம. ஆ. சங்கர் அவர்களுக்கும் எனது பாராட்டுகள்.

இந்நூல் வரலாறு மாணவர்களுக்கும், வரலாற்று ஆய்வாளர்க்கும் பயனுடையதாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

**தி. ஸ்ரீ. ஸ்ரீதர்**

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | திருமாணிகுழி | 1 |
| 2. | கட்டடக் கலை | 6 |
| 3. | சிற்பங்கள் | 21 |
| 4. | செப்புத் திருமேனிகள் | 44 |
| 5. | கோயில் வாகனங்கள் | 53 |
| 6. | கல்வெட்டுச் செய்திகள் | 55 |
| 7. | கல்வெட்டுகளில் வேளாண்மை | 82 |
| 8. | கல்வெட்டுகளில் சமுதாயம் | 88 |
| 9. | கல்வெட்டுகளில் பொருளியல் | 92 |
| 10. | சிறப்புச் செய்திகள் | 100 |
| 11. | நாள் வழிபாடும், திருவிழாக்களும் | 104 |
| | நூற்பட்டியல் | 105 |
| | நிழற்படங்கள் | 106 |


முன் அட்டை: திருமாணிகுழி கோயில் விமானம்
பின் அட்டை: திருமாணிகுழி கோயில் வாயிற் கோபுரம்,
கோயில் புராண புடைப்புச் சிற்பம்

# திருமாணிகுழி

## ஊர் அமைவிடம்

கடலூர் மாவட்டம், கடலூர் வட்டத்தில் கடலூருக்கு மேற்கே 12 கி.மீ. தொலைவில் கெடிலம் ஆற்றங்கரையின் தெற்கே 'திருமாணிகுழி' என்னும் இவ்வூர் அமைந்துள்ளது. தற்போது கடலூர் என்றழைக்கப்படும் திருப்பாதிரிப்புலியூர் முன்பு 'தென் பாடலிப்புத்திரம்' என்றழைக்கப்பட்டு, சிறந்த சமணத் தலமாக விளங்கியது. புகழ்வாய்ந்த 108 வைணவத் திருத்தலங்களில் ஒன்றான திருவயிந்திபுரம் என்னும் தலத்திற்கு மேற்கே 2 கி.மீ. தொலைவிலும் அட்டவீரட்டானத் தலங்களில் ஒன்றான திருவதிகைக்குக் கிழக்கே 10 கி.மீ. தொலைவிலும் எய்தனூர் என்னும் சிவத்தலத்திற்குத் தெற்கே 2 கி.மீ தொலைவிலும் இவ்வூர் அமைந்துள்ளது. இச்சிவத்தலம் நடுநாட்டில் தேவாரப் பாடல் பெற்ற இருபத்திரண்டில் பதினேழாவதாக விளங்குகிறது.

## ஊரும் பேரும்

திருமால் பிராமண பிரம்மச்சாரியாய் குள்ள உருவங் கொண்டு வாமனனாகச் சென்று மாவலிச்சக்கரவர்த்தி செய்த மங்கள வேள்வியில் மூன்றடி மண் யாசித்துப் பெற்றபின் திருமால் பிரம்மச்சாரியாக இவ்விறைவனை பூசித்ததால் இவ்வூர் திருமாணிகுழி என்ற பெயர் பெற்றது என்பது புராணச் செய்தியாகும். இதில் 'மாணி' என்பது பிரம்மச்சாரியையும், 'குழி' என்பது நிலம் அல்லது இடத்தையும் குறிக்கும். எனவே பிரம்மச்சாரி வழிபட்ட இடம் என்பதினால் 'மாணிகுழி' என்றும் உயர்வுக்காக 'திரு' என்பதனை சேர்த்து திருமாணிகுழி என்ற பெயர் உருவானது என்பது புராணக் கருத்தாகும்.

திருஞானசம்பந்தர் தனது 335-ஆம் பதிகம் 6வது பாடலில்:

மந்தமலர் கொண்டுவழி பாடுசெய்
மாணியுயிர் வவ்வனமாய்
வந்தவொரு காலனுயிர் மாளவுதை
செய்தமணி கண்டனிடமாம்

மலராத மலர்களைக் கொண்டு பூசை செய்த மார்கண்டேயனின் உயிரைக் கவர வந்த ஒரு காலன், 'உயிர்மாள உதைத்த நீலகண்டனாகிய சிவபெருமானின் இடம்' என்று இவ்வூரினைப் புகழ்கிறார். இதில் மாணி என்பது மார்கண்டேயனைக் குறிக்கிறது. மார்கண்டேயன் பிரம்மச்சாரி என்பது அறிந்ததே. மார்கண்டேயனை (மாணி) காப்பாற்ற உதவிய இடம் (குழி) என்பதனால் இவ்வூர் 'உதவிமாணிகுழி' என்ற பெயர் பெற்றது என்பது மற்றொருக் கருத்தாகும். கி.பி. 7-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த திருஞானசம்பந்தர் தனது தேவாரப்பதிகத்திலும், கி.பி. 12-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சோழர் காலக் கல்வெட்டுகளிலும் இவ்வூர் 'உதவிமாணிகுழி', 'உதவிதிருமாணிகுழி' என்றே அழைக்கப்பட்டுள்ளது. இச்செய்திகள் புராண மற்றும் வரலாற்றுச் செய்திகளாகும்.

தஞ்சாவூர் பெரியக் கோயிலில் திருப்பரிசாரகம் செய்வதற்கு மாணிகள் நியமிக்கப்பட்டுள்ளனர் என்பதை அவ்வூர்க் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. இதன்வாயிலாக திருப்பரிசாரகம் செய்பவர்கள் மாணிகள் என்றழைக்கப்பட்டுள்ளனர் என்பதை அறிய முடிகிறது. எனவே கோயிலில் சேவை செய்யும் பிரம்மச்சாரியர்களான திருப்பரிசாரர்களுக்கு வழங்கப்பட்ட ஊர் அல்லது நிலம் என்ற காரணத்தினால் இவ்வூருக்குத் 'திருமாணிகுழி' அல்லது 'உதவி திருமாணிகுழி' என்ற பெயர் பெற்றது எனக் கூறுவது மிகப்பொருத்தமாகும்.

## இலக்கியத்தில் திருமாணிகுழி

### திருஞானசம்பந்தர் தேவாரம்

திருஞானசம்பந்தர் திருமாணிகுழி இறைவனைப் போற்றி ஒரு பதிகம் பாடியுள்ளார். அவர் பாடியுள்ள பாடல்கள் அனைத்திலும் இவ்வூரை உதவிமாணிகுழி என்றே அழைத்துள்ளார். ஒவ்வொரு பாடல்களின் நான்கு வரிகளில் முதல் இருவரிகள் இறைவனைப் பற்றியும் அடுத்த இருவரிகள் திருமாணிகுழி ஊரின் இயற்கை அமைப்பைப் பற்றியும் சிறப்பாகப் பாடியுள்ளார்.

### திருமாணிகுழி இறைவனைப் போற்றுதல்

"பொன்மயமான இமயமலை அரசனது புதல்வியாகிய அம்பிகையை ஒரு பாகத்தில் உடையவர். கங்கை நீர் தங்கும் சடையின் மேல் வன்னிப்பத்திரத்துடன் பொன்னூமத்தைப் பூவை அணிந்த வலியவராகிய சிவபெருமான் மகிழ்ந்து தங்கும் இடம்".

“ஒளி மிகுந்த திருநீற்றை திருமேனியில் பூசி தோலை ஆடையாக அணிந்து தெருக்களில் பெண்கள் உள்ள ஒவ்வொரு வீட்டிலும் இசைப்பாடி வயப்படுத்தும் பேச்சுக்களை பேசும் அரனார் மகிழ்விடம்”.

“அம்பு போன்ற கண்களை உடைய உமாதேவியார் மிகவும் அஞ்ச தூணில் கட்டிய கோபத்துடைய யானையை உரித்தருளிய சிவபெருமான் மேவிய இடம்”.

“நாடோறும் அனுட்டானம் முதலிய நியமமாய்ப் பூண்டவனாய் திருமால் வாமனவடிவங் கொண்டு மிகவும் சித்தம் மனத்தை ஒரு நிலைப்படுத்தி வழிபாடு செய்ய நின்ற சிவலோக நாயகனாகிய சிவபெருமான் இடமாம்”.

“குற்றமில்லா சந்திரனை அணிந்த பெரிய சடைமுடியர் வலிய அசுரர்களின் பழைய திரிபுரங்களை அக்காலத்தில் நாசம் செய்து நல்லவர்களுக்கு அருள் செய்யும் சிவபெருமான் இடம்”.

“மிக்க செருக்குடைய தேவர்கள் நின்று துதி செய்ய சற்று கருணை உடையவராகிய எவரும் உண்ணுவதற்கு அஞ்சிய நஞ்சுதனை உண்டு உய்யும்படி அருள்புரிந்த உத்தமனாகிய சிவபெருமானது இடமாம்”.

“முன் யோசனை சிறிதும் இல்லாமல் அழகுபொருந்திய சிறந்த கயிலாய மலையை எடுக்கத் தொடங்கிய உடனே அழிக்க முடியாத வலிமை வாய்ந்த திறமையுடைய இராவணனை நெரித்து பின் அருள் புரிந்த சிவபெருமான் இடமாம்”.

“தேடும் பிரம்மனுடன் திருமாலும் உணராத விதம் நிமிர்ந்தும் தலையில் இதழ்போல் தவழ்கின்ற பிறைச்சந்திரனையும் மணம் வீசுகின்ற பொன்னூமத்தையும் கொன்றை மாலையையும் சடையையும் உடைய எம் ஈசன் இடமாம்”.

“மொட்டைத்தலை சமணர்களாகிய அறிவிலிகளும் பேதமையின் முதிர்ந்த பௌத்தர்களும் புத்தியற்றவர்களும் முயன்று

செய்த வினைகளே பயன்தரும் அதற்கு குறைவன வேண்டா என்று சொல்லும் உருட்டியவிழி உருளும் முட்டைபோல தமக்கென ஓர் உறுதி இல்லாத அவர்கள் சொன்ன சொற்களால் அருள் செய்யாதா இறைவன் என வெகுவாக புகழ்ந்துள்ளார்.

## திருமாணிகுழி இயற்கைவளக் காட்சி

"இளம் வள்ளைக் கொடிகள் வரம்பின் மீது படர்ந்த சேற்றையடைய வயலில் கன்னி வாளை மீன்கள் இளஎருமைகள் தங்கி படிந்து வீட்டிற்கு சேரும் உதவிமாணிகுழியே".

"மகரந்தப் பொடிகள் மிக்க தாமரை மணம் வீச வண்டுகள் ஒலிக்கும் ஓசை மிகுந்த கடல் சூழ்ந்த இவ்வுலகு திருமாணிகுழியே".

"வாசனை மிக்க சோலை புடை சூழ இரத்தினங்கள் பதித்த வீடுகளின் வரிசை உயர்ந்து அழகு பொருந்திய வேர்க்கு அரசனாகிய இந்திரனது நகரமாகிய அமராவதி என்னும்படி நன்கு நிலைபெற்ற உதவிமாணிகுழி".

"கொத்துகனியே மலர்ந்த மலர்களுடைய சோலையில் சிறந்த மயில்கள் நடனமாடுவதை பார்த்து வரிவண்டுகள் சுற்றி ஒத்த இசைகளைப் பாடுகின்ற உதவிமாணிகுழியே".

"மணம் மிகுந்த மெல்லிய கூந்தலையுடைய மாந்தர்கள் மாளிகைகளில் தங்கி அழகு பொருந்திய ஊஞ்சலின் மீது இனிமையாக இசை பாடி அருளுகின்ற உதவிமாணிகுழியே".

"சந்தனமரங்களோடு கரிய அகிற் கட்டைகளையும் சுமந்து மலையினின்றும் இறங்கி தடாகங்களில் பூத்த சிறந்த மலர்களையும் கொணர்ந்து திருக்கெடில நதியின் மீது மோதும் தண்ணீர் வயலிற் பாய்வதனால் எய்திய மணம் பரவுகின்ற உதவிமாணிகுழியே".

இசையை பாடிக் கொண்டிருக்கும் வண்டு பல மலர்களையும் கிளறி தேனைக் குடிக்க வளம் நிறைந்த பசுமை சோலையினிடத்து சிறந்த பலா மரங்களின் இனிய கனிகள் தேனைச் சொறிந்து மணங்கமழ்கின்ற உதவிமாணிகுழியே".

"இசை பொருந்திய மெல்லெனப் பேசும் சொற்களையும் அணிகலன்கள் நிறைந்த பருத்த தணங்களையும் பவளம் போன்ற வாயையும் அழகு பொருந்திய ஒளி வாய்ந்த நெற்றியையுடைய மடந்தையர் கையால் குடந்து நீராடும் உதவிமாணிகுழியே".

"மட்டைகளையுடைய தென்னைகளின் இளநீர்கள் முதிர்ந்த வாழையில் விழுந்த வழியே வரிசையாகவுள்ள கமுகின் சோலைகளின் குலைகளில் உள்ள காய்கள் உதிரும்படியாக எற்றித்தாக்கும் உதவி மாணிகுழியே".

"பலபொருள்களை அடித்துக் கொண்டு வருகின்ற குளிர்ச்சி பொருந்திய கெடில நதியின் ஓடும் தண்ணீர் சூழ்ந்த உதவி மாணிகுழி மேல் அந்திக் காலத்தில் தோன்றும் பிறைச்சந்திரனை அணிந்த எனது தலைவனாகிய சிவபெருமானது திருவடிகளை இடைவிடாது தியானிக்கும் அழகிய சீர்காழியில் அவதரித்தருளியவரும் சந்தம் நிறைந்த இனிய தமிழை அறிந்து உணர்ந்த ஞானசம்பந்தனது சொற்களாகிய இப்பதிகத்தை இசையை தொடங்கி பாடுவோர் எவற்றினும் உயர்ந்ததாகிய முக்தியுலகத்தை உடமையாகப் பெறுவர்".

திருஞானசம்பந்தர் தனது பாடல்களில் திருமாணிகுழியின் இயற்கைவள காட்சியை வர்ணித்தது போல இன்றும் இவ்வூர் கெடில நதிக்கரையில் பசும் வயல்கள், தடாகம் கொண்டு இயற்கை வளத்துடன் சிறப்புடன் காணப்படுகிறது.

## திருப்புகழ்

அருணகிரிநாதர் அருளிய திருப்புகழில் திருமாணிகுழி இறைவனைப் பாடிய பாடல் ஒன்றும் உள்ளது. இதில் திருமாணிகுழி இறைவனையும் இயற்கையையும் போற்றிப் பாடியுள்ளார்.

"மதிக்கு நேரெனும் வாண் மூகம் வான் மக.
மாணிகொள் குழிக்குள் மேவிய வானோர்க ளேதொழு" என்ற பாடலில் 'மாணி கொள்குழி' என்று இவ்வூரான திருமாணிகுழியைப் பற்றி குறிப்பிட்டுள்ளார்.

## திருஅருட்பா

வள்ளலார் இராமலிங்க அடிகள் இயற்றிய திருஅருட்பா மூன்றாம் திருமுறையில் "ஆற்றமயல் காணிக்குழி வீழ் கடையாருக்கு காண்பரிய மாணிக்குழி வாழ் மகத்துவமே" என்று இப்பாடலில் இவ்வூரை மாணிக்குழி என்றே குறிப்பிட்டுள்ளார்.

# கட்டடக் கலை

## கோயில் அமைப்பு

திருமாணிகுழி வாமனபுரீஸ்வரர் கோயில் கருவறை கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. இக்கோயில் உண்ணாழிகை (கருவறை), அர்த்த மண்டபம், முன் மண்டபம், ஆடவல்லான் (நடராசர்) சபை, சண்டிகேஸ்வரர் சன்னதி என்ற அமைப்பில் உள்ளது. மேலும் முதல் திருச்சுற்று மாளிகையின் தென்புறத்தில் 63 நாயன்மார்கள், ஏழு கன்னிகையர்(சப்தமாதர்கள்), தென்மேற்கில் சோமாஸ்கந்தர் சன்னதி, வடகிழக்கில் பைரவர் சன்னதி, கிழக்கில் நவக்கிரகம், சூரியன் மற்றும் சந்திரன் ஆகிய உருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இரண்டாம் திருச்சுற்றில் தென்மேற்கே விநாயகர், மேற்கே சுப்பிரமணியர், வடமேற்கே இறைவி அம்புசாக்ஷி ஆகியோருக்கெனத் தனித்தனிச் சன்னதிகள் அமைந்துள்ளன. மேலும் மடைப்பள்ளி, வெஞ்சன அறை, கிணறு, ராஜகோபுரம் மற்றும் 22 கால்களைக் கொண்ட மண்டபம் ஆகியவைகளும் உள்ளன. இம்மண்டபத்தின் தெற்குப் பகுதி வழியாகவே கோயிலுக்குள் செல்ல வேண்டும். இம்மண்டபம் இடைக்காலத்தில் உருவாக்கப்பட்டதால் அதன்பிறகே இக்கோயிலுக்குச் செல்லும் வழி தென்புறமாக மாற்றப்பட்டிருக்க வேண்டும். மேலும் இம்மண்டபத்தின் வடக்குப் பகுதியில் உற்சவ மேடை அமைக்கப் பட்டுள்ளது. முதல் திருச்சுற்று மாளிகையின் மேற்குப் புறத்தில் முறையே திருதயுகலிங்கம், திரேதாயுக லிங்கம், துவாபரயுக லிங்கம், கலியுக லிங்கம், விஷ்ணு லிங்கம், தூர்வாசக லிங்கம் என ஆறு லிங்க உருவங்கள் உள்ளன. இவற்றில் விஷ்ணு லிங்கத்திற்குத் தனிச் சன்னதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இக்கோயில் கருவறையில் சிவபெருமான் தேவியுடன் வீற்றிருப்பதாக ஐதீகம் ஆதலால் தனியாக இங்கு பள்ளியறை இல்லை. கருவறை லிங்கத்தின் (மூலவருக்கு) முன் திரையிடப்பட்டுள்ளது. அத்திரையில் உருத்திரர்களில் ஒருவரான பீமருத்திரரின் திருவுருவம் காணப்படுகிறது. இந்த பீமருத்திரருக்கு முதலில் வழிபாடு நடைபெற்ற பிறகே மூலவருக்கு வழிபாடு நடைபெறுகிறது.

## விமானம் அமைப்பு

இக்கோயில் விமானம் அதிட்டானம், சுவர், பிரஸ்தரம், கிரீவம், சிகரம், ஸ்தூபி என்ற ஆறு பெரும் பகுதிகளைக் கொண்டு ஒருதளத்துடன் விளங்குகிறது. பிரஸ்தரம் வரை கருங்கற்களாலும் அதற்கு மேல் செங்கற்கள் மற்றும் சுதையாலும் கட்டடப்பட்டுள்ளது.

**அதிட்டானம் :** இக்கோயில் அதிட்டானம் முறையே உபானம், ஜகதி, குமுதம், கண்டம், பட்டிகை என்ற பகுதிகளைக் கொண்டு விளங்குகிறது. இவற்றில் உபானம் என்னும் கீழ்ப்பகுதி எளிமையாக உள்ளது. அதன்மேல் உள்ள ஜகதிப்படையும் எளிமையாக அமைந்துள்ளது. ஜகதியின் மீது அமைந்துள்ள குமுதப்படை முப்பட்டை வடிவில் உருவாக்கப்பட்டுள்ளது. இக்குமுதப்படை மீதுள்ள கண்டத்தின் இடைஇடையே தூண்களின் பாதங்கள் சிற்பங்களின்றி மிக எளிமையாக உள்ளன. கண்டத்தின் மீதுள்ள பட்டிகைப் பகுதியும் எளிமையாக அமைக்கப்பட்டுள்ளது. ஜகதிப்படையில் கல்வெட்டுகள் உள்ளன.

**சுவர் :** அதிட்டானத்தின் மேல் உள்ள பகுதி சுவர் அல்லது கால் என்று அழைக்கப்படும். இப்பகுதி அரைத்தூண்களையும் தேவக் கோட்டங்களையும் பெற்று விளங்குகிறது. கருவறையின் புறச்சுவரில் பக்கத்திற்கு நான்கு அரைத்தூண்கள் வீதம் நான்கு திசைகளிலும் 16 அரைத்தூண்கள் அலங்கரிக்கின்றன. இத்தூண்கள், கீழ்ப்பகுதி அதன் மேல் உள்ள கண்டகால், கலசம், குடம் ஆகிய பகுதிகளுடன் எண்பட்டை வடிவில் வேலைப்பாடு மிக்கவனவாக திகழ்கின்றன. கலசத்தின மேல் வனப்புடன் விரிந்த கல் தாமரையும் சதுரைப்பலகையும், செங்குத்தான வீரகண்டமும் அதன் மீதுள்ள போதிகை வெட்டுமுனைப் போதிகையாகவும் உள்ளது. இத்தூண்களில் நாகபந்த அமைப்பு இல்லை. இததூண்களின் அமைப்பை நோக்கும் போது கி.பி. 11-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பிற்காலச் சோழர்களின் கட்டடக்கலைக் கலையைச் சார்ந்தது எனலாம்.

கருவறைப் புறச்சுவர்களில் தெற்கு, மேற்கு மற்றும் வடக்கு ஆகிய மூன்று திசைகளிலும் தலா ஒரு தேவகோட்டங்கள் அமைந்துள்ளன. இம்மாடங்களில் முறையே தட்சணாமூர்த்தி, அண்ணாமலையார், பிரமன் ஆகிய உருவங்கள் காட்சியளிக்கின்றன.

**பிரஸ்தரம் :** சுவரின் மேல் உள்ள பிரஸ்தரம் என்னும் கூரைப்பகுதிக் கருவறையை மூடும் அங்கமாக விளங்குகிறது. இக்கூரைப் பகுதியை தளவரிசை என்று எளிதாகக் கூறலாம். மேலும் இதனை இஞ்சம், கபோதகம் என்றும் குறிப்பிடுவதுண்டு. இப்பகுதி போதிகை முதல் யாளிவரி அமைந்துள்ள பகுதி வரையாகும். இக்கூரைப்பகுதி உத்திரம், கம்பு, எழுதகம்(பூதவரி), கபோதகம், வியாளம்(யாளிவரி) என்று பல உறுப்புகளைக் கொண்டுள்ளது. உத்திரப்பகுதிச் சிற்பங்கள் ஏதுமின்றி எளிமையாக அமைந்துள்ளது. அதன்மேல் உள்ள எழுதகப் பகுதியில் பூதகணங்கள் சிறப்பான முறையில் வடிக்கப்பட்டுள்ளன. அதன் மேல்கூரைப் பகுதியில் உள்ள கபோதகத்தின் இடை இடையே நாசிக் கூடுகள் காணப்படுகின்றன. அந்நாசிக் கூடுகளில் உருவங்கள் ஏதுமின்றி எளிமையாகக் காணப்படுகின்றன. கூரையில் கொடுங்கைப் பகுதி அளவோடு காணப்படுகின்றன. கபோதகத்தின் மேல் உள்ள வியாளவரியில் யாளியின் உருவங்கள் காணப்படுகின்றன. கபோகத்தின் மூலைப் பகுதிகளில் மகரத்தலைக் கட்டுகள் மட்டும் உள்ளன.

**கிரீவம் :** கிரீவம் என்று அழைக்கப்படும் கழுத்துப் பகுதி நான்கு பட்டைகளை உடைய நாகரமாக விளங்குகிறது. வேதிப்படையின் நான்கு மூலைகளிலும் கருங்கற்கலால் ஆன குந்து நந்திகள் எழிலாக அமைந்துள்ளன. கீரிவ கோட்டங்களில் தட்சணாமூர்த்தி, திருமால், நான்முகன், அர்த்தநாரீஸ்வரர்(மாதொருபாகன்) ஆகியோரின் சுதை உருவங்கள் காணப்படுகின்றன.

**சிகரம் :** கிரீவத்தின் மேல் உள்ள சிகரம் நாகர சிகரமாக அமைந்துள்ளது. சிகரத்தின் மீது மகாபத்மம் விரிந்து வனப்பூட்டுகிறது.

**ஸ்தூபி / முடி :** சிகரத்தின் மீதுள்ள மகாபத்மத்தின் மேல் உலோகத்தால் ஆன 'புனித குடம்' எனும் ஸ்தூபி அமைந்துள்ளது.

**அர்த்தமண்டபம்**

கருவறையின் முன் உள்ள அர்த்தமண்டபம் செவ்வக வடிவில் உள்ளது. அர்த்தமண்டபத்தில் தூண்கள் எதுவும் இல்லை. கருவறையும் அர்த்தமண்டபமும் ஒரே அளவில் உள்ளன. அர்த்த மண்டபத்தின் தெற்கு தேவகோட்டத்தில் விநாயகர், வடக்கில் துர்கை ஆகிய உருவங்கள் காணப்படுகின்றன. அர்த்தமண்டபத்திற்கும் முன்மண்டபத்திற்கும் இடையே தெற்குபுறமாக அந்தராளம் (இடைநாழி) உள்ளது

## முன் மண்டபம்

அர்த்தமண்டபத்தின் முன்புறம் முன்மண்டபம் பரந்து விரிந்து காட்சியளிக்கிறது. அர்த்தமண்டபத்திற்கு முன்பு சதுர வடிவ முடையதாகச் சுற்றுச் சுவருடன் காணப்படுகிறது. இதன் அளவு கருவறையைவிட இருமடங்கு விரிவுடையதாகக் காணப்படுகிறது. இம்மண்டபத்தினை நான்கு வட்டக் கால்கள் தாங்கி நிற்கின்றன. இத்தூண்களின் போதிகை வெட்டுப் போதிகையாகக் காணப்படுகின்றன. முன்மண்டபத்தின் வடபுறத்தில் ஆடவல்லானான நடராசர் சபை உள்ளது. முன்மண்டபத்தின் வெளிப்புறத்தில் யாளிவரிகள், பூதவரிகள் நன்கு சித்தரிக்கப்பட்டுள்ளன. கொடுங்கையில் உள்ள கூடுகளில் லிங்கத்திற்கு பால் சொரிந்து நிற்கும் பசு, மார்கண்டேயன் லிங்கத்தைத் தழுவிப் பிடித்திருக்கும் காட்சி, கண்ணப்ப நாயனார் லிங்கத்தினை வணங்கும் காட்சி, உமை இறைவனை வழிபடும் காட்சி ஆகியன செதுக்கப்பட்டுள்ளன.

## திருநிலைக்கால்

முன்மண்டபத்தின் திருநிலைக்கால் செவ்வக வடிவில் அமைந்துள்ளது. திருநிலைக்காலின் பக்க முனைகளில் பூவிதழ்கள் பத்மவரியாகக் காணப்படுகின்றன. முன்மண்டப வாயிலின் இரு பக்கத்தினையும் வேலைப்பாடுடன் கூடிய அரைத்தூண்கள் அலங்கரிக்கின்றன. வாயிலின் மேல்பகுதியில் உள்ள மகரதோரணத்தின் நடுவே உமையை மகேஸ்வரன் அணைத்து நிற்கும் காட்சி நன்கு சித்தரிக்கப்பட்டுள்ளது. இச்சிற்பத்தில் சிவனின் மேலிரு கைகளில் மழுவும் மானும் உள்ளன. கீழ் வலதுகை உமையின் மார்பிலும் இடதுகை தோளின் மீதும் உள்ளன. உமை தனது வலதுகையில் நீலோற்ப மலர் ஏந்தியும் இடது கை தொங்கும் கரமாகவும் காட்சியளிக்கிறாள்.

## கோயில் புராண (ஸ்தல ஐதீகம்) புடைப்புச் சிற்பம்

திருநிலைக்காலுக்கு இடப்புறச் சுவரில் ஸ்தல ஐதீகம் எனும் கோயில் புராணம் புடைப்புச் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன. இறைவனின் சன்னதியில் எலி உருவமெடுத்து நெய்யை உண்ட மாவலி அரசனுக்கு எதிர்பாரதவிதமாகத் தோன்றிய விளக்கு ஒளியின் காரணமாகச் சுபத்தி நிலை ஏற்பட்டது. இக்காட்சியே முதல் காட்சியாகச் செதுக்கப்பட்டுள்ளது.

சுக்ராச்சாரியருக்கும் கருடனுக்கும் இடையே போர் நடப்பது இரண்டாவது காட்சியாகும். (இப்போரின் விளைவாகவே கருட நதி உருவானது என்றொரு கருத்துள்ளது. இந்த கருடநதியின் பெயரே கெருடநதி என்றும், பின்னர் கெடில நதி என்று பெயர் திரிந்தது என்பது புராணச் செய்தியாகும்)

வாமனன் மண்ணை ஓரடியாகவும் விண்ணை ஓரடியாகவும் அளக்கும் நிலை மூன்றாவது சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளது.

நான்காவது சிற்பம் திருமாலாகிய வாமனனுக்கு மாவலி மன்னன் மூன்றடி மண் தாரை வார்த்துக் கொடுத்தலைச் சுக்கிராச்சாரியார் தடுக்கும் நிலை.

இறுதியாக வாமனனாகச் சென்று மாவலியை அழித்த திருமால் தன்னுடைய பிரம்மகத்தி தோஷம் நீங்க இறைவனைப் பூசித்தலாகும். இப்புடைப்புச் சிற்பங்கள் எழிலுடன் செதுக்கப்பட்டுள்ளன.

## தட்சணாமூர்த்தி மண்டபம்

இக்கோயில் கருவறையின் தென்புறத்தில் தென்முகக் கடவுளான தட்சணாமூர்த்தி அமைந்துள்ளப் பகுதி தட்சணாமூர்த்தி மண்டபம் என்று அழைக்கப்படுகிறது. இது கருவறையைப் போன்று உபானம், ஜகதி, குமுதப்பட்டை பட்டி, வேதிகை போன்ற பகுதிகளைக் கொண்டுள்ளது. இம்மண்டபம் மிகவும் பிற்காலத்தில் கட்டப்பட்டதாகும்.

## சோமாஸ்கந்தர் சன்னதி

இச்சன்னதி முதல் திருச்சுற்றின் தென்மேற்குப் பகுதியில் கிழக்குத்திசை நோக்கி அமைந்துள்ளது. இச்சன்னதியின் உட்புறம் சோமாஸ்கந்தர் தொகுதி செப்புப் படிமம் மேடை மீது வைக்கப்பட்டு வழிபாட்டில் உள்ளது. இச்சன்னதியின் அதிட்டானம் முதல் கபோதகம் வரையானப் பகுதி வெள்ளைக்கற்களால் கட்டப்பட்டுள்ளது. இதன் உபானம், ஜகதி, சிலம்புக் குமுதம், கண்டம், பட்டிகை, வேதிகை ஆகிய பகுதிகளைக் கொண்டு எளிமையாகத் திகழ்கிறது. இதுவும் பிற்காலத்தில் கட்டப்பட்டப் பகுதியாகும்..

## விஷ்ணுலிங்கம் சன்னதி

முதல் திருச்சுற்றுமாளிகையின் மேற்குபுறத்தில் திருதயுக லிங்கம், திரேதாயுகலிங்கம், துவாபரயுகலிங்கம், கலியுகலிங்கம்,

விஷ்ணுலிங்கம், தூர்வாசகலிங்கம் என ஆறு லிங்கங்கள் அமைந்துள்ளன. இதில் விஷ்ணுலிங்கத்திற்குத் தனிச் சன்னதி உள்ளது. இச்சன்னதியில் உபானம், பத்மம், சிலம்புக் குமுதம், கண்டம், பட்டி ஆகிய அமைப்புடன் கூடியச் சிறிய முன் மண்டபம் உள்ளது. இம்மண்டபமும் பிற்காலத்தில் எழுப்பப்பட்டதாகும்.

## ஆடவல்லான் (நடராசர்) சபை

முன்மண்டபத்தின் வடக்கே தென் திசையை நோக்கி நடராசர் சபை அமைந்துள்ளது. இச்சபை நீள் சதுர வடிவத்தைக் கொண்டுள்ளது. இம்மேடையில் ஆடவல்லானான நடராசர், சிவகாமி, மாணிக்கவாசகர் ஆகிய செப்புத் திருமேனிகள் இருந்தன. இவை தற்போது பாதுகாப்புக் கருதித் தனியறையில் வைக்கப்பட்டுள்ளன.

கி.பி. 11-ஆம் நூற்றாண்டு கட்டட அமைதியில் உள்ள இச்சபைக்கு விமானம் ஏதுமில்லை. இது உபானம் ஜகதி, முப்பட்டை குமுதம், பட்டி, சுவர், பிரஸ்தரம் ஆகிய கட்டட அமைப்பைக் கொண்டுள்ளது. இதன் வெளிப்புறச் சுவரில் தேவகோட்டம் ஒன்று அமைந்துள்ளது. ஆனால் இக்கோட்டத்தில் உருவம் ஏதுமில்லை. இச்சபையின் வெளிப்புற ஜகதி, குமுதம், சுவர் ஆகியப் பகுதிகளில் கல்வெட்டுகள் உள்ளன. பிரஸ்தரத்தில் பூதவரி மற்றும் யாளிவரிகள் நல்ல முறையில் செதுக்கப்பட்டுள்ளன.

## சண்டிகேஸ்வரர் சன்னதி

இக்கோயிற் முதல் திருச்சுற்றுப் பாதையில் வடதிசையில் சண்டிகேஸ்வரருக்குத் தனிச் சன்னதி அமைக்கபட்டுள்ளது. அதிட்டானம் முதல் கபோதகம் வரை கருங்கல்லாலும், ஏனைய பகுதி செங்கல் மற்றும் சுதையாலும் கட்டப்பட்டுள்ளது. சண்டிகேஸ்வரர் சன்னதி ஒரு தளவிமானத்தை உடையதாகும். இதன் கிரீவமும் சிகரமும் வட்ட வடிவமாகக் காணப்படுகிறது. இச்சிகரத்தின் மீது பூக்கள் மற்றும் ஆபரணங்கள் அலங்கரிக்கப்பட்ட அமைப்பில் உள்ளது. இச்சன்னதியும் தற்காலத்தில் கட்டப்பட்டதாகும்.

## முதல் திருச்சுற்று

இக்கோயிற் கருவறையைச் சுற்றி வலம் வருவதற்கு அகன்ற திருச்சுற்றுப்பாதை அமைக்கப்பட்டுள்ளது. தென்புறச்சுற்றில் சிற்பங்களைக் கொண்டத் தூண்களால் ஆன மண்டபம் அமைந்துள்ளது. இத்திருச்சுற்றுக் கிழக்கு மேற்காக 60 அடி நீளமும் தெற்கு வடக்காக 40 அடி அகலமும் கொண்டுள்ளது.

## திருச்சுற்று மாளிகை

முதல் திருச்சுற்றுப் பிரகாரத்தை ஒட்டித் திருச்சுற்று மாளிகைப் பத்தி எழுப்பப்பட்டுள்ளது. திருச்சுற்று மாளிகை மேற்குப் பகுதியிலிருந்து வடக்குப் பகுதிவரை வந்து கிழக்கு பகுதிவரை முடிந்துள்ளது. தெற்குப் பகுதியில் திருச்சுற்று மாளிகை இல்லை. தென்பகுதியில் திருச்சுற்று மாளிகை இல்லாமல் மதில் சுவரே உள்ளது. தென் திருச்சுற்றுமாளிகைப் பகுதியில் 63 நாயன்மார்கள் உருவங்களும், சப்தமாதர்கள் உருவங்களும் காணப்படுகின்றன. 63 நாயன்மார்களின் தொடக்கத்தில் விநாயகர் உருவமும், அதையடுத்து நால்வர் உருவங்களும் அமைக்கப்பட்டு அதனை தொடர்ந்து 63 நாயன்மார்களின் உருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

திருச்சுற்றுமாளிகை மேற்கு பகுதியில் 7 தூண்களும் தெற்குப்பகுதியில் 13 தூண்களும் கிழக்குப் பகுதியில் 5 தூண்களும் அமைந்துள்ளன. இத்தூண்கள் வெட்டுப் போதிகையுடன் கூடிய உருளைத் தூண்களாகக் காணப்படுகின்றன. இவை சோழர் காலக் கலையைப் பிரதிபளிக்கின்றன. திருச்சுற்று மாளிகையில் வடகிழக்குப் பகுதியில் வாகனம் வைக்கும் இடம் உள்ளது. இதிலும் வெட்டுப் போதிகையுடன் கூடிய 6 உருளைத் தூண்கள் காணப்படுகின்றன.

திருச்சுற்று மாளிகையின் மேற்குப் பகுதியில் ஆறு லிங்கங்கள், உதிரி சிற்பங்கள், நால்வர் உருவங்கள், பாலதண்டாயுதபானி, கெஜலட்சுமி ஆகிய உருவங்கள் உள்ளன. வடக்கில் பைரவர் சன்னதியும், கிழக்கில் நவகிரகம், சூரியன், சந்திரன் ஆகியன தனித்தனி மேடைகளில் வைக்கப்பட்டுள்ளன.

திருச்சுற்று மாளிகையை ஒட்டி 20 அடி உயர மதில் சுவர் எழுப்பப்பட்டுள்ளது. மேற்குப் பகுதி வெளி மதில் சுவரில் கல்வெட்டுகள் உள்ளன.

## இரண்டாம் திருச்சுற்றுப் பாதை

ஸ்ரீசெல்வ விநாயகர், ஸ்ரீசுப்ரமணியர், அம்புஜாக்ஷிம்மன் சன்னதிகளை சுற்றி வருவதற்கு ஏற்ற வகையில் திருச்சுற்று மதிலும், வெளிமதில் சுவருக்கும் இடையே ஆறு போல அமைந்து நீண்டும் விரிந்தும் இரண்டாம் திருச்சுற்று காணப்படுகிறது. இத்திருச்சுற்றில் தென்கிழக்கில் மடப்பள்ளியும் வெஞ்சன அறையும் அமைந்துள்ளன.

இத்திருச்சுற்றின் மேற்குப் பகுதியில் சுப்ரமணியர் சன்னதிக்கும் அம்புசாக்ஷிக்கும் இடையே தலவிருட்சமான சரக் கொன்றை மரம் உள்ளது. இத்திருச்சுற்றின் வடபகுதியில் கிணறு உள்ளது.

## நந்தி மண்டபம்

இரண்டாம் திருச்சுற்றின் கிழக்குப் பகுதியில், கருவறை மூலவரை நோக்கி மேற்காக நந்தி மண்டபம் அமைந்துள்ளது. இந்த நந்தி அமைந்துள்ள கல் மேடை நான்கு தூண்களைக் கொண்டுள்ளது. நந்தி சிறிய மேடை மீது நான்கு கால்களையும் மடக்கி வாலை பின்னங்கால்களுக்கு இடையே மறைத்துள்ளது.

இதன் முகம் நன்கு நீண்ட உருண்ட முகத்துடன் உள்ளது. விரிந்த புருவமும், உருண்டை வடிவமான பருத்த விழிகளும், பக்கங்களில் விரிந்த காதும், புடைத்த நாசியும், அடர்ந்த பிடரியும், கழுத்தில் மணிகள் கோர்த்த மாலை அலங்கரிக்கின்றன. கொம்புகள் இரண்டையும் மணிகளால் ஆன மாலை அழகு செய்கின்றன. மேல் உடலில் அழகான ஆடை அணிவிக்கப்பட்டு மிகவும் எழிலாக அமைந்துள்ளது.

## கொடிக்கம்பம்

நந்தி மண்டபத்தை அடுத்து பின்னால் நன்கு உயர்ந்த நிலையில் செம்பாலானக் கொடிக்கம்பம் உள்ளது. உயர்ந்த கல்மேடையின் மீது கும்பமும் அதன் அடுத்த பகுதி நான்கு பட்டையும் அதற்கு மேல் உருளை வடிவ அமைப்பிலும் அமைந்துள்ளது. மேல் பகுதியில் குறுக்கு நெடுக்காக மூன்று சட்டங்கள் உள்ளன. அதில் 15 மணிகள் காணப்படுகின்றன. அந்த மரச்சட்டத்தின் மீது மூன்று சிறிய ஸ்தூபிகளும் இறுதியாக மேற்கு நோக்கி சிறு நந்தி ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளன.

கொடிக்கம்பத்தில் நான்கு பட்டையில் வடக்குப் பகுதியில் வள்ளி, தெய்வானை, சுப்ரமணியர் ஆகிய மூவரும் நின்ற நிலையில் உள்ளனர். சுப்ரமணியரின் மேல் வலது கையில் வஜ்ஜிராயுதமும் மேல் இடது கையில் சூலமும் ஆயுதங்களாக உள்ளன. கீழ் வலதுகை அபய முத்திரையுடனும் கீழ் இடது கை வரத முத்திரையுடனும் அருள் பாலிக்கிறார். வள்ளி, தெய்வானை இருவரும் ஒரு கையில் மலரும் மற்றொரு கை தொங்கும் நிலையிலும் உள்ளன.

மேற்குப் பகுதியில் விஷ்ணு லிங்கத்தினை வணங்கும் காட்சி சித்தரிக்கப்பட்டுள்ளது. விஷ்ணுவின் மேல் வலது கையில் சக்கரமும் மேல் இடது கையில் சங்கும் கீழ் இரண்டு கைகளும் இறைவனை தொழுது நிற்கும் காட்சியாகச் சித்தரிக்கப்ட்டுள்ளன.

கிழக்கில் ரிஷப வாகனத்தில் உமையுடன் சிவன் அமர்ந்திருக்கும் காட்சி உள்ளது. சிவனின் மேல் வலது கையில் மழுவும், மேல் இடது கையில் மானும், கீழ் வலது கை அபய முத்திரையும் கீழ் இடது கை வரத முத்திரையுடனும் காட்சியளிக்கிறார். உமையின் வலது கை அபய முத்திரையும் இடது கை வரத முத்திரையுடன் அருள் பாளித்த நிலையில் வடிக்கப்பட்டுள்ளது. கொடிக் கம்பத்தை அடுத்து நந்தி பீடத்திற்கு சமமான மேடையில் பலி பீடம் அமைக்கப்பட்டுள்ளது.

## இராஜகோபுரம்

கோயில் என்றதும் மக்கள் நினைவில் முதலில் வருவது கோபுரமாகும். தமிழகக் கோயில்களில் பெரும்பாலும் வானைத்தொட்டு நிற்கும் வகையில் வானளாவிய கோபுரங்கள் காணப்படுகின்றன. கோயிலைச் சுற்றி மதிலை அமைத்து ஒரு புறம் பெரிய வாயில் அமைத்து அவ்வாயிலின் மேல் பெரிய கோபுரத்தை கட்டி மகிழ்ந்தனர். இந்த கோபுரத்திற்கு ஸ்தூல லிங்கம் என்று பெயர்.

கற்கோயில்கள் முதலில் குடைவரை கோயில்கள், ஒற்றைக் கற்கோயில்கள், கட்டடக் கோயில்கள் என்று படிப்படியாக உயர்ந்தன. வாயிற் கோபுரம் உருவாக்கும் பழக்கம் கட்டடக் கோயில்களில் தான் தோன்றியது. முதன்முதலில் மாமல்லபுரக் கடற்கரைகோயில்களில் இந்த கோபுரம் உருவாகத் தொடங்கியது. அங்கு மதில் சுவரில் கட்டப்பட்ட வாயிலின் மேல் சிறிய சாலை வடிவிலான கோபுரம் தோன்றியது. பின்னர் இக்கோபுர அமைப்புப் படிப்படியாக உய்ர்ந்தது. இராஜராஜசோழன் காலத்தில்கூட கோபுரமானது கோயில் கருவறையைவிட குறைவாக கட்டப்பட்டது. விஜயநகர பேரரசு காலத்தில் கருவறையைவிட வாயில் கோபுரங்களை உயரமாக கட்டத் தொடங்கினர். இதன் பின்னர்தான் கோபுரங்கள் உயரமாக கட்டத் தொடங்கப்பட்டது. உதாரணமாக சிதம்பரம் நடராஜர் கோயில் கோபுரம், காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயில் கோபுரங்களைக் கூறலாம்.

ஆதலால் இதனை இராயர்கள் கட்டியதால் இராயர் கோபுரங்கள் என அழைக்கப்பட்டன. பின்னர் அரசர் கோபுரம் என்றும் இராஜா கோபுரம் என்றும் மருவி தற்போது இதனை இராஜகோபுரம் என்று அழைக்கின்றனர்.

## திருமாணிகுழி இராஜகோபுரம்

திருமாணிகுழி வாமனபுரீஸ்வரர் கோயில் திருமதிலின் கிழக்கு வாயிலில் வானுயர்ந்து நிற்கும் இராஜகோபுரத்தைக் காணலாம். இக்கோபுரம் ஐந்து நிலைகளுடன் அமைந்து மேலே செல்லச்செல்ல குறுகியும் நீண்ட சதுரவடிவம் போல காணப்படுகிறது. கோபுரத்தின் முகத்துவாரும் முகச்சாலையும் உயர்ந்து விளங்குகிறது. இக்கோபுரம் உபபீடம் முதல் பிரஸ்தரம் வரை கருங்கல்லாலும் மேல் பகுதி செங்கல்லும் சுண்ணாம்பு காரையும் கொண்டு எழுப்பபப்பட்டுள்ளது.

கோபுரத்தின் கல் பீடமானது முகப்பீடம், அதிட்டானம், கால், பிரஸ்தரம் ஆகிய அங்கங்களைக் கொண்டு திகழ்கிறது. அதிட்டானம் என்ற பகுதி ஜெகதி, முப்பட்டை குமுதம், கண்டம், பட்டிகை ஆகிய உறுப்புகளைக் கொண்டுள்ளது. அதன் மேல் உள்ள சுவர் பகுதி அரைத்தூண்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளன. அரைத்தூண்கள் ஒவ்வொன்றும் கால், இடைக்கட்டு, கலசம், தாடி, குடம், பத்மம், பலகை, வீரகண்டம், வெட்டுப்போதிகை ஆகிய உறுப்புகளைக் கொண்டுள்ளது. இக்கோபுரம் ஐந்து நிலைகளிலும் கர்ணகூடு, அகாரை பஞ்சரம், சாலை ஆகிய பித்திகள் மாறி மாறி இருபுறமும் அமைந்துள்ளன. இக்கோபுரத்தின் மூன்று நிலைகள் ஒரே அமைப்பில் காணப்படுகின்றன.

இக்கோபுரத்தின் ஐந்து நிலைகளில் முதல் மூன்று நிலைகளின் கிழக்கு மற்றும் மேற்கு பகுதிகளில் முகச்சாலையும் அதன் இருமங்கிலும் துவாரபாலகர் சுதைசிற்பங்கள் காணப்படுகின்றன. மேலே உள்ள நான்கு மற்றும் ஐந்தாவது முகச்சாலைகளின் இருபுறமும் துவாரபாலகிச் சிற்பங்கள் அமைந்துள்ளன.

இக்கோபுரத்தின் கிழக்கு நுழைவு பகுதி முதல் நிலையில் துவாரபாலகருக்கு இடது பகுதி கர்ணகூடுகளில் விநாயகரும் துர்கை சிற்பமும் அமைந்துள்ளன. வலது பகுதி கர்ணகூடுகளில் மாகேஸ்வரி மற்றும் கௌமாரி இடம் பெற்றுள்ளனர். முதல் நிலை வடக்கு பகுதியில்

பிரம்மாவும், தெற்கு பகுதியில் தட்சணாமூர்த்தி சிற்பமும் காணப்படுகின்றன.

கிரீவத்தின் நான்கு மூலைகளையும் சிவ கணங்கள் காட்டப்பட்டுள்ளன. உச்சியில் சிகரம் அமைக்கப்பட்டுள்ளன. சிகரத்தில் உள்ள வண்டிக்கூடு போன்ற அமைப்பு “பண்டியல் எனப்படும்” சிகரத்தின் பக்கங்களின் மகரநாசிப்பகுதி வனப்போடு காட்சி அளிக்கின்றன. சிகரத்தின் மீது ஐந்து ஸ்தூபிகள் எனும் கலசங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

### ஸ்ரீசெல்வ விநாயகர் சன்னதி

இக்கோயிலில் இரண்டாம் திருச்சுற்றின் தென்மேற்கு திசையில் கிழக்கு திசை நோக்கி ஸ்ரீசெல்வ விநாயகர் சன்னதி அமைந்துள்ளது. இச்சன்னதியில் நான்கு கரங்களுடன் கூடிய இடம்புரி விநாயகர் வழிபாட்டில் உள்ளார். இச்சன்னதி அதிட்டானம் முதல் கபோதகம் வரை கல்லால் கட்டப்பட்டுள்ளது. அதற்கு மேல் உள்ள பகுதி செங்கல்லும் சுதையாலும் கட்டப்பட்டுள்ளது. இதில் அதிட்டானம், உபபீடம், ஜகதி, முப்பட்டை குமுதம், கண்டம், பட்டி, சுவர், கிரீடம், ஸ்தூபி, அனைத்தும் சிவன் கோயில் விமானத்தை ஒத்தே உள்ளது.

### ஸ்ரீசுப்ரமணியர் சன்னதி

இக்கோயிலில் இரண்டாம் திருச்சுற்று மேற்குப் பகுதியில் கிழக்கு திசையை நோக்கி இச்சன்னதி அமைந்துள்ளது. இச்சன்னதியில் சுப்ரமணியர் பன்னிரண்டு கைகளுடன் ஆறு முகத்துடன் மயில் வாகனத்தில் மீது அமர்ந்துள்ளார். அவரது இருபக்கங்களிலும் வள்ளி தெய்வானை ஆகிய இரு தேவியர் உள்ளனர். இத்தேவியர் ஒரு கையில் நீலோற்ப மலரையும் மற்றொரு கை டோலகஸ்த முத்திரையுடனும் காட்சியளிக்கின்றனர்.

இச்சன்னதி அம்புசாட்சியம்மன், விநாயகர் சன்னதியை போன்றே ஒரு தளவிமானத்தைக் கொண்டுள்ளது. அதிட்டானம் முதல் பிரஸ்தரம் வரை கல்லாலும் மேல்பகுதிச் சுதையாலும் கட்டப்பட்டுள்ளது. கிரீவத்தின் நான்குப் பகுதியிலும், சுப்ரமணியர் வள்ளிதெய்வானையின் சுதை சிற்பங்கள் காணப்படுகின்றன.

**ஸ்ரீஅம்புசாட்சியம்மன்**

அம்மன் சன்னதி இக்கோயிலின் இரண்டாம் திருச்சுற்றின் வடமேற்குப் பகுதியில் ஸ்ரீசுப்ரமணியர் சன்னதியை அடுத்து அமைந்துள்ளது. இச்சன்னதி கருவறை (உ ண்ணாழிகை), அர்த்தமண்டபம், முன்மண்டபம் எனும் அமைப்பில் உ ள்ளது. இக்கோயில் கல்வெட்டில் திருக்காமக்கோட்டம் என்ற குறிப்பு காணப்படுவதால், திருக்காமக்கோட்டம் என்பது அம்மன் சன்னதியைக் குறிப்பதாகும். எனவே அம்மன் சன்னதி கி.பி. 11-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது எனலாம்.

**உண்ணாழிகை விமான அமைப்பு:** இச்சன்னதியின் விமானம் உபபீடம், அதிட்டானம், சுவர், பிரஸ்தரம், கிரீவம், சிகரம், ஸ்தூபி எனும் அங்கங்களை கொண்டுள்ளது. இவ்விமானத்தின் ஒவ்வொரு அங்கமும், சிவன் கோயிலின் கட்டட அமைப்பை ஒத்து விளங்குகிறது. இக்கோயில் உபபீடம் முதல் பிரஸ்தரம் வரை கருங்கல்லாலும் மேல் உள்ள விமானம் தளப்பகுதிக் செங்கல்லும் சுதையும் கொண்டு எழுப்பப்பட்டுள்ளது.

**அதிட்டானம் :** இக்கோயில் உபபீடத்தின் மேலுள்ள அதிட்டானம் முறையே உபானம், ஜகதி, குமுதம், கண்டம் ஆகிய பகுதிகளாகக் கொண்டுள்ளது. அதிட்டானத்திலுள்ள குமுதம், சிவன் கோவிலுள்ளது போன்று முப்பட்டைக் குமுதமாக விளங்குகின்றது.

**சுவர் :** அதிட்டானத்தின் மேல் உள்ள பகுதி சுவர் அல்லது கால் என்று அழைக்கப்படும். இப்பகுதி அரைத்தூண்களையும் தேவகோட்டங்களையும் பெற்று விளங்குகிறது. இத்தூண்களின் கீழ் பகுதியும் அதன் மேல் உள்ள கடை கலசம், குடம் ஆகிய பகுதிகளும் நான்கு பட்டை வடிவில் உள்ளன. கலசத்தின் மேல் வனப்புடன் விரிந்து கல்தாமரையும் சதுரப்பலகையும் செங்குத்தான வீர கண்டமும் அதன் மேல் உள்ள போதிகை வெட்டுப் போதிகையாக உள்ளது. கருவறை புறச்சுவர் தெற்கு, மேற்கு, வடக்கு ஆகிய மூன்று திசைகளில் தேவகோட்டங்களில் மாஹேஸ்வரி, வைஷ்ணவி, பிராமி ஆகிய இறை உருவங்கள் காட்சியளிக்கின்றன.

**பிரஸ்தரம் :** சுவரின் மேல் உள்ள பிரஸ்தரம் எனும் கூரைப்பகுதி கருவறையை மூடும் அங்கமாக விளங்குகிறது. கூரைப்பகுதி சிவன்

கோயிலைப் போன்றே உள்ளது. இக்கூரைப்பகுதி உத்திரம், கம்பு, எழுதகம்(பூதவரி), கபோதகம், வியாளம்(யாளிவரி) எனப் பல உறுப்புகளைக் கொண்டு விளங்குகிறது. அதன் மேல் உள்ள எழுதகப் பகுதியில் பூதகணங்கள் சிறப்பான முறையில் வடிக்கப்பட்டுள்ளன.

கூரைப்பகுதியில் உள்ள கபோதகத்தில் இடைஇடையே நாசிக் கூடுகள் அமைக்கப்பட்டுள்ளன. கபோதகத்தின் மேல் உள்ள வியாளவரியில் யாளியின் உருவங்கள் காணப்படுகின்றன. இக்கோயில் விமானம் அடித்தளம் முதல் கூரைவரை கருங்கல் கட்டடமாகவும் அதற்கு மேல் உள்ள விமானப்பகுதிச் செங்கல் சுதையும் கொண்ட கட்டடமாகவும் காணப்படுகிறது. கருவறைக்கு மேல் உள்ள விமானம் ஒரு தள விமானமாக அமைக்கப்பட்டுள்ளது.

**கிரீவம் :** இச்சன்னதியின் கிரீவம் என்று அழைக்கப்படும் கழுத்துப் பகுதி நான்குப் பட்டைகளை உடைய நாகரமாக அமைந்துள்ளது. வேதிப்படையின் நான்கு மூலைகளில் குந்து சிம்மங்கள் அமைந்துள்ளன. கிரீவ கோட்டங்களில் மாஹேஸ்வரி, வைஷ்ணவி, பிராமி ஆகிய உருவங்கள் காணப்படுகின்றன.

**சிகரம் :** கிரீவத்தின் மேல் நாகர சிகரம் அமைந்துள்ளது. இச்சிகரத்தின் மீது மகாபத்மம் விரிந்து காணப்படுகிறது.

ஸ்தூபி : சிகரத்தின் மீதுள்ள மகாபத்மத்தின் மேல் உலோகத்தால் ஆன ஸ்தூபி என்னும் புனிதகுடம் ஒன்று அமைந்துள்ளது.

### அர்த்தமண்டபம்

கருவறையின் முன் உள்ள அர்த்தமண்டபம் கருவறையை ஒத்த அளவில் அமைந்துள்ளது. அர்த்தமண்டபத்தில் தூண்கள் எதுவும் இல்லை. அர்த்தமண்டபத் தேவகோட்டத்தில் தெற்கில் உருவம் எதுவும் இல்லை. ஆனால் வடக்கில் துர்கை உருவம் அமைந்துள்ளது.

### முன்மண்டபம்.

அர்த்தமண்டபத்தை அடுத்து முன்மண்டபம் சதுர வடிவுடையதாகச் சுற்றுச்சுவருடன் காணப்படுகிறது. இது கருவறையைவிட சற்று பெரியதாக அமைந்துள்ளது. இம்மண்டபத்தில் நான்கு மிகச்சிறப்பான சிம்ம தூண்கள் அமைந்திருக்கின்றன. முன்மண்டபத்தின் தென்மேற்கு மூலையில் விநாயகர் உருவமும்

வடமேற்கு மூலையில் தண்டாயுதபானி உருவமும் காணப்படுகின்றன. முன்மண்டபத்தின் வடகிழக்கு மூலையில் பைரவர் சிற்பம் ஒன்று அமைந்துள்ளது.

## முக மண்டபம்

முன்மண்டபத்தினை அடுத்து முகமண்டபம் அமைந்துள்ளது. முகமண்டபத்தில் 8 தூண்கள் அமைந்துள்ளன. இத்தூண்கள் விஜயநகர காலக் கலை அமைப்பையொட்டி அமைந்துள்ளது. இம்மண்டபத்தை அலங்கரிக்கும் எட்டுத் தூண்களும் சித்திரக்கால் வகையைச் சார்ந்தவையாகும். இத்தூண்களின் சதுரப்பட்டைகளில் பல்வகை உருவங்கள் புடைப்புச் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன. அவைகளாவன,

- எழில் மிகு இலைக்கருக்குகள்
- பூக்கள் நிறைந்த கொடிக்கருக்குகள்
- மயில் மீது சுப்ரமணியர் அமர்ந்திருக்கும் காட்சி
- குந்து சிம்மம் உருவம்
- விநாயகர் சிற்பம்
- வால் மற்றும் கேடயம் ஏந்திய வீரன் உருவம்
- நடனமாடும் குள்ள பூதம்
- அழகிய அன்னத்தின் உருவம்
- சந்திரன் சிற்பம்
- பிட்சாடனர் சிற்பம்
- நடன மங்கையின் உருவம்
- சுதையின் மீது கால் வைத்து நிற்கும் வீரனின் காட்சி
- முனிவர் கையை தலைக்கு மேலே உயர்த்தி வணங்கும் காட்சி
- விநாயகர் நிற்கும் காட்சி
- உணவு எடுத்துச் செல்லும் குள்ள பூதம்
- உட்கார்ந்திருக்கும் நாய் உருவம்

## நந்தி மண்டபம்

சிவன் கோயிலைப் போன்றே அம்மன் சன்னதியின் எதிரே நந்தி வாகனம் அம்மனை நோக்கி அமைந்துள்ளது. நான்கு தூண்கள் கொண்ட மண்டபத்தில் நந்தி இரண்டு கால்களை மடித்து அமர்ந்துள்ளது.

நந்தியை அடுத்து நன்கு உயர்ந்த செப்பு கவசத்தால் ஆன கொடிக்கம்பம் கல்மேடையின் மீது அமைக்கப்பட்டுள்ளது. இக்கொடிக்கம்பத்தின் அடித்தளம் பத்மத்தின் மீதும், அதையடுத்து கும்பத்தின் மீது நான்குப் பட்டை வடிவமும், அதற்கு மேல் உருளை வடிவிலும் கொடிக்கம்ப அமைப்பு உள்ளது. இக்கொடிக்கம்பத்தின் உச்சியில் மூன்று ஸ்தூபிகள் உள்ளன. நான்கு பட்டைகளில் மேற்கு புறத்தில் அம்மன் சிவனை மலரிட்டு பூசிக்கும் காட்சி, தெற்கில் விநாயகர் நிற்கும் காட்சி, கிழக்கில் அம்மன் நான்கு கைகளுடன் நின்ற நிலையில் உள்ள காட்சி, அம்மனின் மேல் வலது கையில் மழுவை போன்ற ஆயுதமும் மேல் இடது கையில் பாசமும் ஆயுதங்களாக உள்ளன. கீழ் இடது கை டோல முத்திரையில் அமைந்துள்ளது. கிழக்கில் வள்ளி தெய்வானையுடன் சுப்ரமணியர் காட்சியளிக்கிறார்.

# சிற்பங்கள்

## தேவகோட்டச் சிற்பங்கள்

வாமனபுரீஸ்வரர் கோயில் கருவறைப் புறச்சுவரில் உள்ள தேவகோட்ட மாடங்களில் தெற்கு, மேற்கு, வடக்கு ஆகிய திசைகளில் முறையே ஆலின் கீழ் அமர்ந்து அறம் உரைக்கும் அண்ணலான தட்சணாமூர்த்தி, அடிமுடிகாணா அண்ணலான லிங்கோத்பவமூர்த்தி, திசைமுகனான நான்முகன் ஆகியோரின் உருவங்கள் அமைந்துள்ளன. மேலும் அர்த்தமண்டப தேவகோட்டங்களில் தெற்கே விநாயகரும் வடக்கே வடவாயில் செல்வியான துர்கையும் அமைந்துள்ளன.

## *தட்சணாமூர்த்தி*

தட்சணாமூர்த்தியினுடைய உருவம் ஞான தட்சணாமூர்த்தி, யோக தட்சனாமூர்த்தி, வியாக்யான தட்சணாமூர்த்தி, வீணாதர தட்சணாமூர்த்தி என நான்கு வகைப்படும். சிவனது குரு மூர்த்தமே தட்சணாமூர்த்தி எனப்படும். ஞான உபதேசம் செய்யும் நிலை ஞான தட்சணாமூர்த்தி எனவும், யோகம் மேற்கொள்ளும் நிலை யோக தட்சணாமூர்த்தி எனவும், வியாக்யானஞ் செய்யும் நிலை வியாக்யான தட்சணாமூர்த்தி எனவும், இசையை உபதேசிக்கும் நிலை வீணாதர தட்சணாமூர்த்தி எனவும் பெயர் பெறும். பெரும்பாலும் சிவாலயங்களில் கருவறையின் தென்புறத்தில் ஞான தட்சணாமூர்த்தியின் சிற்ப வடிவம் அமைக்கப்படுவது வழக்கம்.

இக்கோயிலில் தட்சணாமூர்த்தியின் உருவம் கருவறையின் தென்புறச் சுவரில் உள்ள தேவ கோட்ட மாடத்தில் அமைந்துள்ளது. ஆலமரத்தின் கீழ் வீராசனத்தில் அமர்ந்து சனகாதி முனிவர்களுக்கு தத்துவம் போதிக்கும் தட்சணாமூர்த்தியின் உருவம் சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளது. கயிலை மலை மேல் அமர்ந்துள்ள சிவனது வலது திருவடி தாழ்ந்து அபஸ்மாரன் முதுகில் அமைந்துள்ளது. இடக்கால் வலக்கால் தொடை மீது மடித்து தூக்கி வைத்த நிலையில் காணப்படுகிறது.

அறம் உரைக்கும் அண்ணலின் நான்கு கைகளில் மேல் வலக்கை படமெடுத்தாடும் பாம்பை பிடித்துள்ளது. மேல் இடக்கை அனல் தண்டினைப் பற்றியுள்ளது. கீழ் வலக்கை சின் முத்திரையை காட்டுகிறது. கீழ் இடக்கை சுவடி ஏந்தி உள்ளங்கை மடிந்த நிலையில் தொடை மேல் உள்ளது. தட்சணாமூர்த்தியின் தலைமுடி சடா பாரத்துடன் உள்ளது. அவ்வாறு தலையின் கீழ்பக்கங்களில் இருந்து சுருண்ட முடிகள் தாழ் சடையாக வனப்புடன் தோள் வரை வீழ்ந்து பொலிவூட்டுகிறது.

மேல் நெற்றியில் நெற்றிப்பட்டமும் நெற்றியின் நடுவே வட்டமான திலகமும், செவி மடல்களில் செவிப்பூவும், வலது காதில் மகர குண்டலமும், இடது காதில் பத்ரகுண்டலமும், கழுத்தில் மணிவடமும் கற்கள் பதித்த அட்டிகையும், தோள்பட்டைகளில் வாகுமாலையும், முன்கைகளில் மணி வளைகளும், இடையிலிருந்து தொடைவரை ஆடையும், கால்களில் தண்டையும் இவ்வுருவை அணி செய்கின்றன.

பரந்த முகமும் கீழ் நோக்கிப் பார்வை செலுத்தும் மலர்ந்த கண்களும் எடுப்பான மூக்கும், சனகாதி முனிவர்களுக்கு தத்துவம் போதிக்கும் நிலையில் மெல்ல திறந்த வாயும், வனப்பான அங்கங்களும் எழிலான உடற்கட்டும் கொண்ட நிலையில் இவ்வுருவம் வடிக்கப்பட்டுள்ளது.

திருவடியின் கீழ் உள்ள அபஸ்மாரன் சிறு குழந்தையைப் போல் படைக்கப்பட்டுள்ளான். அபஸ்மாரன் வலது காலை நன்கு மடக்கி இடது கால் சிறிது மடக்கி இரண்டு கைகளையும் நிலத்தில் நன்கு மடக்கியும் தலை சற்று தூக்கி தட்சணாமூர்த்தி நோக்கும் திசையான தென்புறத்தினை கீழ்புறமாக பார்க்கும் நிலையில் உள்ளான்.

தத்துவம் போதிக்கும் அண்ணலின் முன்புறம் வயது முதிர்ந்து தலையில் முடியும், முகத்தில் தாடியும் தரித்து தத்துவம் கற்கும் நிலையில் சனகாதி முனிவர் நால்வரின் சிற்பங்களைக் காணலாம். இவர்களது வலது கையில் அக்கமாலை இடது கையில் சுவடி ஏந்தி இரு கால்களையும் மடித்த நிலையில் வீற்றிருக்கின்றனர். இவர்களது தலைகளில் உருமாறும், நெற்றி கழுத்துகளில் உருத்திராட்ச மாலையும் இடையில் ஆடையும் தரித்துள்ளனர்.

அறம் உரைக்கும் அண்ணலின் பின்புறம் உள்ள முதிர்ந்த ஆலமரத்தைச் சுற்றிலுமுள்ள அடர்ந்த இலைகளின் நடுவே விரிந்த மலர்கள் அமைந்து வனப்பூட்டுகின்றன. இச்சிற்பம் கி.பி. 11-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சோழர் கால கலையமைதியில் காணப்படுகிறது.

### லிங்கோத்பவர்

இவ்வுருவம் கருவறையின் மேற்கு தேவகோட்டத்தில் காணப்படுகிறது. லிங்கத்திலிருந்து அடியும் முடியும் காணா அண்ணலாகச் சிவபெருமான் வெளிப்படும் காட்சி இங்கு சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளது. லிங்கோத்பவரை அண்ணாமலை என்றும் அழைக்கப்படுவது மரபு. இந்த லிங்கத்தின் மேல் நெற்றியில் முடி தேடி முன் வருவன் என முனைந்து செல்லும் அன்னமும், லிங்கத்தின் கீழ் அடிதேடி அறிவல் எனச் சென்ற வராகம் பூமியை நோக்கும் நிலையில் மிகவும் சிறப்பான முறையில் காட்டப்பட்டுள்ளது.

ஒளிப்பிழம்பாக வெளிப்படும் சிவனது நான்கு கரங்களில் மேல் கரங்கள் மழுவையும் மானையும் பற்றியுள்ளன. கீழ் வலக்கரம் அபய முத்திரைக் காட்டி அருள் பாலிக்கிறது. இடக்கரம் தொடைமீது அமைந்துள்ளது. இறைவன் தலையில் சடை மகுடம், காதுகளில் மகர குண்டலம், கழுத்தில் சரப்பளி மாலை, முப்புரிநூல், உதரபந்தம், தோள்வளையம், காப்பு, இடைக்கச்சை ஆகியன சிவனது உடலை அழகு செய்கின்றன.

மேலும் லிங்கோத்பவர் அமைந்துள்ள தேவ கோட்டத்தின் இடது மற்றும் வலது புறங்களில் விஷ்ணு மற்றும் பிரம்மாவின் சிற்பங்கள் முழு அளவில் வடிக்கப்பட்டுள்ளன. பிரம்மா, விஷ்ணு ஆகிய இருவரும் இறைவனை கைகுவித்து வணங்கும் நிலையில் உள்ளனர். இதுவும் கி.பி. 11-ஆம் நூற்றாண்டு சோழர் காலக் கலைப்பாணியாகும்.

### பிரம்மா

இக்கோயில் கருவறை புறச்சுவரில் வடக்கு தேவ கோட்டத்தில் இவ்வுருவம் அமைந்துள்ளது. தாமரை பீடத்தின் மீது நான்கு கைகளுடன் நேராக நின்ற நிலையில் பிரம்மாவின் வடிவம் வைக்கப்பட்டுள்ளது.

வலது மேல் கையில் உருத்திராட்ச மாலையும் இடது மேல் கையில் கெண்டியும் ஏந்தியுள்ளார். கீழ் வலக்கை அபய முத்திரையில் அமைந்துள்ளது. இடக்கை தாழ் கையாக நீண்டு தொடை மீது அமைந்துள்ளது.

பிரம்மாவின் மூன்று தலைகளை சடாமகுடம் அலங்கரிக்கின்றது. காதில் மலர்க்குண்டலங்கள், மணிகள் கோத்தமாலை, கண்டசரம், முப்புரிநூல், உதரபந்தம், கேயூரம், கம்பு, கீர்த்திமுக இடைக்கச்சை, கழல், பாதசரம் ஆகியன இவ்வுருவை அணிசெய்கின்றன.

இமை மூடிய கண்களும் சற்று பெருத்த மூக்கும் குவிந்த சிறிய வாயும் எளிய மேலுடலும் பளுவான கீழாடை கணுக்கால் வரை தரித்து அழகுடன் நிற்கின்றது. இச்சிற்பம் கி.பி. 11-ஆம் நூற்றாண்டு சோழர் காலக் கலையாகும்.

**விநாயகர்**

இவ்வுருவம் பத்ர பீடத்தின் மீது வலது காலை ஊன்றி இடது காலைச் சற்று முன் வைத்து நின்ற நிலையில் நான்கு கைகளுடன் காட்சியளிக்கிறது. மேல் வலக்கை கடக முத்திரையில் மழுவைப் பற்றியுள்ளது. அவ்வாறே இடக்கை பாசக் கயிற்றைச் செங்குத்தாக பிடித்துள்ளது. கீழ் வலக்கை ஒடிந்த தந்தத்தைப் பற்றியுள்ளது. கீழ் இடக்கை மோதக உருண்டையை ஏந்தியுள்ளது.

மானிடவுடலும், யானை முகமும் கொண்ட விநாயகரின் துதிக்கை இடமாக வளைத்து இடக்கையிலுள்ள மோதகத்தைப் பற்றுகிறது. விநாயகரின் தலையினை கரண்ட மகுடம் அலங்கரிக்கிறது. மகுடத்தின் மேல் முத்து குஞ்சங்கள் அணி செய்கின்றன.

கழுத்தில் கல் மணிகள் பதித்த பட்டையான சரப்பளியும் இடது மார்பில் பூணூலும் மேல் வயிற்றில் உதரபந்தமும் முன் கையில் காப்பும் இடையிலிருந்து மேல் தொடைவரை ஆடையும் இடையின் பக்கங்களில் சரிந்து தொங்கும் ஆடைக்கட்டும் கால்களில் தண்டையும் இவ்வுருவை அழகு செய்கின்றன. சதுரமாகப் பரந்த யானை முகமும், நெற்றியில் திலகமும் தூக்கியப் புருவமும் விரிந்த கண்களில் கூர்மையான பார்வையும் வலப்புறம் ஒடிந்த தந்தமும் மடிப்புடையத்

துதிக்கையும் அளவான மார்பும் சற்றுப் பெருத்த தொந்தியும் சதைப் பற்றுள்ள குட்டையான அங்கங்களும் கொண்ட நிலையில் காணப்படுகிறது.

யானை முகத்தான் காதுகள் இலை வடிவாகப் பக்கங்களில் விரிந்தும், செவிப் பூக்கள் அணி செய்யக் காட்சியளிக்கிறது.

இச்சிற்பத்தின் உடற்கட்டும் நிற்கும் நிலையும், ஆடை அணிகள், ஆயுதங்கள் ஆகியவற்றின் தன்மைகளைக் கொண்டு கி.பி. 11-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கலை வடிவமாக கருதலாம். கோயிலின் அர்த்தமண்டப தென் திசைக் கோட்டத்தில் வெளியில் இச்சிற்பம் அமைக்கப்பட்டுள்ளது.

**விஷ்ணு துர்கை**

வடவாயில் செல்வி என்று அழைக்கப்படும் துர்கை உருவம் அர்த்தமண்டபத்தின் வடக்கு புறச்சுவர் தேவகோட்ட மாடத்தில் அமையப்பெற்றுள்ளது. உயர்ந்த தாமரை பீடத்தின் மீது நான்கு கைகளுடன் நேராக நின்ற கோலத்தில் காட்சியளிக்கிறது.

துர்கையின் மேல் வலக்கை சக்கரமும் மேல் இடக்கை சங்கும் பற்றியுள்ளன. கீழ் வலக்கையில் தாமரையும் கீழ் இடக்கை கதை மீது வைத்திருக்கிறது.

துர்கையின் தலையில் வேலைப்பாடுமிக்க ஜடாமகுடம் உள்ளது. மேல் நெற்றியில் நெற்றிப் பட்டமும், காதுகளில் மகரக்குழைகளும், கழுத்தில் கண்டசரமும் மணிவடமும், மார்பில் மலர் முகப்புடைய தொங்கலும், தனங்களின் மீது குஜபந்தமும், மேல் மார்பில் உதரபந்தமும், முன் கைகளில் கைவளையமும் இடையின் இருபக்கங்களிம் அழகிய ஆடைக்கட்டும் கால்களில் தண்டையும் அணி செய்ய அழகே உருவான விஷ்ணு துர்க்கையின் உருவம் எடுப்பாகப் படைக்கப்பட்டுள்ளது.

துர்கையின் வசீகர முகம், விரிந்த நெற்றி, கோடிட்ட புருவம், நீண்ட மூக்கும் காதுகள் நன்கு நீண்டும் அளவான அங்கங்கள் யாவும் கொண்ட இத்துர்கைச் சிற்பம் கி.பி.11-ஆம் நூற்றாண்டு சோழர் காலக் கலையை நன்கு வெளிப்படுத்துகிறது.

**சண்டிகேஸ்வரர்**

இவ்வுருவம் திருச்சுற்றின் வடதிசையில் சண்டேஸ்வரருக் கென்று தனியாக உள்ள சிறு சன்னதியில் அமைந்துள்ளது. இச்சிற்பம் செவ்வக வடிவான உயர்ந்த இருக்கை மீது இடது காலை மடித்து வலது காலை தொங்கவிட்டு பாத இருக்கை மீது வைத்திருக்கிறது. வலது கையில் கோடாரியை ஒத்த மழுவும் இடது கை தொடை மீது வைத்துள்ளது.

தலையை உயர்ந்த ஜடாபாரம் அலங்கரிக்கிறது. காதில் மகர குழைகள் அணி செய்கின்றன. கழுத்தில் கண்ட சரமும், நீண்ட மணி வடமும் அணி செய்கின்றன. மார்பில் புரிநூலும், மேல் வயிற்றில் மெல்லிய உதர பந்தமும், முன்கையில் காப்பும், இடையில் ஆடையும் காலில் கழலும் அழகுறச் செய்கிறது. நீண்ட மூக்குடன் கூடிய இச்சிற்பத்தின் அமைப்பும், அழகுற அளவுமுறையும் ஆடையும் அணிகளும் கி.பி. 11-ஆம் நூற்றாண்டு சோழர் காலக் கலையை வெளிப்படுத்துகிறது.

**சாஸ்தா**

கருவறை திருச்சுற்றின் தென் மேற்கு திசையில் சோமாஸ்கந்தர் சன்னதியின் இடதுபுற தேவகோட்டத்தில் விநாயகரும், வலதுபுற தேவகோட்டத்தில் சாஸ்தாவும் அமைந்துள்ளன.

சாஸ்தாவின் உருவம் சதுர மேடைமீது இடது காலை குத்திட்டு மடக்கி வலது கால் தொங்கவிட்ட நிலையில் உள்ளது. பாதம் பாத இருக்கைமீது வைத்துள்ளது. இடுப்புடன் இடது காலைச் சேர்ந்து யோகப் பட்டம் கட்டப்பட்டுள்ளது. இடது கை இடது கால் முட்டியின் மீதுள்ளது. தலைவிரிசடையுடன் காதுகளில் பத்ரகுண்டலங்களும் கழுத்தில் சரப்பளி, மார்பில் புரிநூலும் அணி செய்கின்றன. திறந்த கண்களுடன், நீண்ட பருத்த மூக்குடன் தடித்த புருவத்துடன் இவ்வுருவம் உள்ளது. இது பிற்காலச் சிலையாகும்.

**பைரவர்**

இக்கோயிலின் முதல் திருச்சுற்றின் வடகிழக்கில் தென் திசையை நோக்கிப் பைரவர் சன்னதி அமைந்துள்ளது. இது சதுர வடிவமான சிறிய கருவறையில் உள்ளது. கருவறை நடுவே

சதுர் புஜ பைரவர் வடுக(நாய்) வாகனத்தோடு தாமரை பீடத்தின் மேல் நின்ற கோலத்தில் காட்சியளிக்கிறார். இடது மேற்கைகளில் உடுக்கையும் நாகமும் காட்டப்பட்டுள்ளன. கீழ் கைகளில் வலக்கை நீண்ட கதாயுதத்தின் மேல் அமைந்துள்ளது. இடக்கை கபாலக்கிண்ணத்தை ஏந்தி நிற்கிறது. ஆடை அணியாத அழகரான பைரவரின் உருவம் கரிய நிறக் கல்லில் பொலிவோடு அமைந்து பாங்குறக் காட்சியளிக்கிறது. காதில் மகர குண்டலமும் தலையில் நீண்ட ஜுவாலை மகுடத்திலும் காட்சியளிக்கிறது.

கழுத்தில் சரப்பளி, தட்டமாலை, முப்புரிநூல், வயிற்றில் உதரபந்தம் காட்டப்பட்டுள்ளது. இச்சிற்பமும் கி.பி. 11-ஆம் நூற்றாண்டு சோழர் கால கலை அமைப்பில் உள்ளது.

### சப்தமாதர்கள் (ஏழு கன்னிகள்)

சப்தமாதர்களின் உருவங்கள் நீண்ட செவ்வக வடிவிலானக் கருங்கல்லில் செதுக்கப்பட்டுள்ளது. இவ்வுருவங்கள் திருச்சுற்றின் தென் மேற்குப் பகுதியில் 63 நாயன்மார்களை அடுத்து வைக்கப்பட்டுள்ளது. சப்தமாதர்கள் உருவங்கள் தனித்தனியான சிற்பங்களாக பல இடங்களில் காணப்படும். ஆனால் இங்கு ஒரே கல்லில் புடைப்புச் சிற்பங்களாக சப்தமாதர் உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

**பிராமி :** சப்தமாதர்களில் முதலில் பிராமி உருவம் செதுக்கப் பட்டுள்ளது. செவ்வக இருக்கை மீது இடது காலை மடித்து வலது காலை தொங்கவிட்டு நான்கு கைகளுடன் அமர்ந்த கோலத்தில் அமைந்துள்ளது. மேல் வலக்கையில் அக்கமாலையும் மேல் இடக்கையில் கெண்டியும் கீழ் வலது கை அபயகரமாகவும் கீழ் இடதுகை வரதமாகவும் உள்ளன. வரதமாக அமைந்துள்ள கை சிறிது சேதாரம் அடைந்துள்ளது. மூன்று தலைகளுடன் உள்ள பிராமி சிற்பம் மூன்று தலைகளுக்கும் பொதுவாக இரண்டு காதுகள் உள்ளன. காதுகளில் மகர குண்டலங்கள் அணி செய்கின்றன. பிராமியின் தலை உயர்ந்த சடாமகுடம் அலங்கரிக்கிறது.

கழுத்தில் கண்டசரமும் காரையும் சவடியும் அலங்கரிக்கின்றன. முன் கைகளில் மூன்று வளைகளும். இடையிலிருந்து முழங்காலுக்கு கீழ்வரை ஆடையும் அமைதி தவழும் உருவமாக அமைந்துள்ளது.

**மாகேஸ்வரி :** பிராமி உருவத்துக்கு அடுத்த நிலையில் மாகேஸ்வரி உருவம் செதுக்கப்பட்டுள்ளது. இவ்வுருவம் செவ்வக இருக்கை மீது இடது காலை மடித்து வலது காலை தொங்கவிட்டு அமர்ந்த கோலத்தில் காணப்படுகிறது. வலது மேல் கை மழுவைப் பற்றியும், இடது மேல் கை பாயும் மானை பற்றியும் காட்சியளிக்கின்றன. வலது கீழ்க்கை அபய முத்திரையிலும் இடது கீழ்க் கை வரதமாகவும் அமைந்துள்ளன. ஜடாபாரம் தலையை அலங்கரிக்கிறது. சடையும் விரிந்து தொங்கும் நிலையில் உள்ளது.

தனங்களின் மீது குஜபந்தம் கட்டப்படவில்லை. மார்புக்கு கீழே வயிற்றில் சன்னவீரம் அணி செய்கிறது. மேல் கைகளில் இலைகருக்கு முகப்புடைய தோள்வளையும் முன் கைகளில் மூன்று கைவளையும் இடையிலிருந்து முழங்காலுக்கு கீழ்வரை ஆடையும் காணப்படுகிறது.

அமைதியான தோற்றமுடைய இத்தேவியின் தலையை அலங்கரிக்கும் சடாமுடியையும், கைகளில் ஏந்தியுள்ள மழு மான் ஆகியவற்றைக் கொண்டும் இதனை சப்தமாதர்களில் ஒருவரான மாகேஸ்வரியின் சிற்பமாகக் கருதலாம்.

**இந்திராணி :** சப்தமாதர்களில் பிராமி, மாகேஸ்வரியை அடுத்து மூன்றாவது சிற்பமாக இந்திராணி உருவம் செதுக்கப்பட்டுள்ளது. இவ்வுருவம் செவ்வக இருக்கைமீது இடது காலை தொங்கவிட்டு நான்கு கைகளுடன் அமர்ந்த கோலத்தில் உள்ளது.

வலது மேல்கை அங்குசத்தையும் இடது மேல்கை சக்தி சூலத்தையும் கீழ் வலதுகை அபய முத்திரையிலும் கீழ் இடது கை வரத முத்திரையுடனும் காட்டப்பட்டுள்ளது. தலையில் கரண்ட மகுடம் காணப்படுகிறது. சற்று விரிந்த சடை காணப்படுகிறது. தனங்களில் குஜபந்தம் காட்டப்பட்டுள்ளது.

காதுகளில் மகரகுண்டலங்களும் கழுத்தில் பட்டையான காரையும் மார்பில் சன்னவீரமும் முன் கைகளில் கைவளையும் இடையில் ஆடையும் அலங்கரிக்கின்றன. அங்குசம் ஏந்திய இத்தேவியின் உருவம் சப்தமாதர்களில் ஒருவரான இந்திராணியின் உருவமாகும்.

**வைஷ்ணவி :** சப்தமாதர்களில் நான்காவதாக செதுக்கப்பட்டுள்ள உருவம் வைஷ்ணவி. இடது காலை மடக்கி வலது காலை தொங்கவிட்டு அமர்ந்த நிலையில் நான்கு கைகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. வலது மேல் கையில் சக்கரமும் இடது மேல் கையில் சங்கும் உள்ளன. கீழ் வலது கை அபய முத்திரையுடனும் கீழ் இடது கை வரத முத்திரையுடனும் காட்சியளிக்கிறது.

தலையில் நீண்ட கிரீடமகுடம் அலங்கரிக்கிறது. காதுகளில் மகர குண்டலங்களும் கழுத்தில் கண்டசரமும், காரையும், சவடியும் அலங்கரிக்கின்றது. தனங்களின் மீது குஜபந்தம் கட்டப்பெற்றுள்ளது. மார்பு கீழ் வயிற்றில் சன்னவீரம் அணி செய்கிறது. அமைதியான இத்தேவியின் தலையை நீண்ட கிரீடமகுடமும் கைகளில் சக்கரமும், சங்கும் அலங்கரிக்கிறது. இதனைக் கொண்டு சப்தமார்களில் ஒருவரான வைஷ்ணவி சிற்பம் எனலாம்.

**வராகி :** சப்தமார்களில் எழுவர்களில் நான்காவதாக வைஷ்ணவியை அடுத்து ஐந்தாவதாக வராகி உருவம் செதுக்கப்பட்டுள்ளது. இவ்வுருவம் செவ்வக இருக்கை மீது இடது காலை மடித்து வலது காலை பீடத்தின் மீது தொங்கவிட்டு நான்கு கைகளுடன் அமர்ந்த கோலத்துடன் செதுக்கப்பட்டுள்ளது.

இதன் தலையில் கிரீட மகுடம் அலங்கரிக்கிறது. வலது மேற்கையில் அங்குசம் இடது மேற்கையில் பாசம் ஆகிய ஆயுதங்கள் காட்டப்பட்டுள்ளன. கீழ் வலது கை அபய முத்திரையுடனும் கீழ் இடது கை வரத முத்திரையுடனும் அமைந்துள்ளன. இவ்வுருவம் பன்றி முகமும் மனித உடலுடன் கூடிய உருவமாகக் காணப்படுகிறது. தனங்களில் குஜபந்தம் காணப்படுகிறது.

கழுத்தில் கற்கள் பதித்த காரையும் மார்பில் சன்னவீரமும் மேல் கைகளில் இலைக்கருக்கு முகப்புடைய தோள் வளையும் இடையிலிருந்து முழங்காலுக்கு கீழ் வரை மடிப்புடைய ஆடையும் காட்டப்பட்டுள்ளன. பன்றி முகமும் மனித உடலுடன் கொண்ட இத்தேவியை சப்தமார்களில் ஒருவரான வராகியாகக் கருதலாம்.

**கௌமாரி :** சப்தமாதர்களில் பிராமி, மாகேஸ்வரி, இந்திராணி, வைஷ்ணவி, வராகியை அடுத்து ஆறாவதாக கௌமாரி சிற்பம்

செதுக்கப்பட்டுள்ளது. இவ்வுருவம் இடது காலை மடக்கி வலது காலை தொங்கவிட்டு நான்கு கைகளுடன் அமர்ந்து இருக்கும் நிலையில் உள்ளது.

தலையில் கரண்ட மகுடம் அலங்கரிக்கின்றது. வலது மேற்கையில் வஜ்ஜிராயுதம், இடது மேற்கையில் சக்தி ஆயுதம் காணப்படுகிறது. கீழ் வலது கை அபய முத்திரையுடன் கீழ் இடது கை வரத முத்திரையுடன் காட்சியளிக்கிறது.

கழுத்தில் மூன்று பட்டையுடைய மாலை அணிந்து சிறப்பாக காணப்படுகிறது. தனங்களில் குஜபந்தம் கட்டப்பட்டுள்ளது. காதுகளில் மகரகுண்டலங்கள் அலங்கரிக்கின்றன. கைகளில் கைவளையும் இடையிலிருந்து முழங்காலுக்கு கீழ் வரை ஆடையும் அலங்கரிக்கப் பெற்றுள்ளன. இத்தேவியின் கரண்ட மகுடம் கைகளில் வஜ்ஜிராயுதம் சக்தி ஆயுதத்தையும் கொண்டு சப்தமாதர்களில் ஒருவரான கௌமாரி எனக் கருதலாம்.

**சாமுண்டி :** ஒரு கல்லில் செதுக்கப்பட்டுள்ள சப்தமாதர்களில் பிராமி, மாகேஸ்வரி, இந்திராணி, வைஷ்ணவி, வராகி, கௌமாரியை அடுத்து இறுதியில் ஏழாவதாக சாமுண்டி உருவம் செதுக்கப்பட்டுள்ளது. இவ்வுருவம் இடது காலை மடித்து வலது காலை தொங்கவிட்டு அமர்ந்து நான்கு கைகளுடன் செதுக்கப்பட்டுள்ளது. தலை விரிந்த ஜ்வாலை மகுடத்துடன் காணப்படுகிறது. வலது மேற்கையில் உடுக்கையும் இடது மேற்கையில் பாசமும் கீழ் வலது கையில் திரிசூலமும் கீழ் இடது கையில் கபாலத்தையும் கொண்டுள்ளது.

காதில் வட்டக் குண்டலங்கள் அணி செய்கின்றன. கழுத்தில் கல் பதித்த கழுத்தணியும் தனங்களில் நாகபந்தம் கட்டப்பட்டுள்ளது. தலையில் விரிந்த ஜ்வாலை மகுடமும் கைகளில் உடுக்கை, பாசம், திரிசூலம், கபாலம் பெற்றிருப்பதைக் கொண்டு இவர் சப்தமாதர்களில் ஒருவரான சாமுண்டி எனலாம்.

**நவக்கிரக மண்டலம்:**

திருமாணிகுழி வாமனபுரீஸ்வரர் கோயிலின் திருச்சுற்று மாளிகையில் வடகிழக்குப் பகுதியில் அதாவது நுழைவு வாயிலின்

வலதுபுறத்தில் நவக்கிரக மண்டலத்தைக் காணலாம். இங்கு சூரியன், சந்திரன், அங்காரகன், புதன், வியாழன், சுக்கிரன், சனி, ராகு, கேது ஆகிய ஒன்பது கோள்களும் உயர்ந்த மேடை மீது வழிபாட்டில் உள்ளன.

தமிழ் மக்கள் பண்டைய நாள் முதல் கோள்கள் ஒன்பதின் அடிப்படைத் தத்துவத்தை நன்கு அறிந்திருந்தனர். கி.பி. 7-ஆம் நூற்றாண்டு முதல் ஒன்பது கிரகங்களும் சமய சிறப்புப் பெற்றுத் திகழ்கின்றன. இவற்றை ஒன்பது கோள்கள் என்று தமிழிலும் நவக்கிரகங்கள் என்று வடமொழியிலும் அழைக்கின்றனர்.

நவக்கிரகங்களில் சூரியன் முதன்மையானவன், இவன் ஞாயிறு என்று போற்றப்படுபவன். சிவப்பு நிறமுடையவன் ஜோதி வடிவானவன். இரண்டு கைகளை உடையவன். செந்தாமரை மலரை இரு கைகளில் தாங்கி நிற்பவன் ஏழு குதிரைகள் பூட்டிய ஒரே சக்கரத்துடன் கூடிய அழகிய தேரை உடையவன். தாமரை மலரை இருக்கையாகக் கொண்டவன். பத்ம ராகக் கற்கள் இழைக்கப்பெற்ற கிரீடமுடையவன். மனதைக் கவரும் தோற்றமுடையவன் என்றெல்லாம் சிற்ப நூல்கள் சூரியனின் அமைப்பினை விவரிக்கின்றன. நவக்கிரகங்களில் தலைமையானவன் சூரியனே. நவக்கிரக மண்டலத்தில் சூரியனை நடுவில் வைத்து எட்டு திசைகளிலும் மற்றுமுள்ள எட்டு கிரகங்களை அமைப்பது வழக்கம்.

கிழக்கில் சந்திரன், தெற்கில் வியாழன், மேற்கில் புதன், வடக்கில் சுக்கிரன் தென்கிழக்கில் செவ்வாய், தென்மேற்கில் சனி, வடமேற்கில் ராகு, வடகிழக்கில் கேது ஆகியவற்றை அமைத்து வழிபட வேண்டுமென 'சில்பரத்தினம்' எனும் ஆகமநூல் கூறுகிறது.

இரண்டாவது கோளான சந்திரன் மென்மையான ஆடையை உடையவன். இரண்டு கைகளுடையவன். அல்லி மலர்களை இரு கரங்களில் ஏந்தி நிற்பவன்.

செவ்வாய் எனப் போற்றப்படும் பூமியின் மகனாகிய அங்காரகன் ஆட்டை வாகனமாக உடையவன் புத்தகத்தையும் சக்தியையும் ஏந்தி நிற்பவன்.

புதன் கோள்களில் சிறந்தவன் சிங்கத்தை வாகனமாக உடையவன் மஞ்சள் நிறமான ஆடையை அணிந்தவன். இவனது கரங்களில் வாளும் கேடயமும் அல்லது கதாயுதமும் காணப்படும். இவன் சந்திரனின் குமாரனாகக் கருதப்படுபவன்.

ஐந்தாவது கோளான வியாழ பகவான் 'தேவகுரு' என்றும் 'பிருகஸ்பதி' என்றும் போற்றப்படுவன். இவனது கரங்களில் அக்க மாலையும் தண்டமும், கமண்டலமும் காணப்படும்.

சுக்கிரன் ஆறாவது கோளாக கருதப்படுகிறான்.

ஏழாவது கோளான சனி பகவான் கறுப்பு உடையவன். காகத்தை வாகனமாகக் கொண்டவன். இவனது கைகளில் வில், சூலம், பாம்பு முதலியவை காணப்படும்.

எட்டாவது கோளான ராகு சிங்காசனத்தில் அமர்ந்தவன். இவனது கைகளில் கத்தி, கேடயம், சூலம், கூப்பிய கரங்களுடன் காணப்படுவான்.

ஒன்பதாவது கோளான கேது பல வடிவங்களை உடையவனாக செம்பழுப்பு நிறத்தை உடையவன். கழுகினை வாகனமாகக் கொண்ட இவனது கரங்களில் கதாயுதம் காணப்படும்.

இவ்வொன்பது கோள்களில் பெரும்பாலன கோள்களின் ஒரு கை வரத முத்திரையில் அமைப்பது வழக்கம் என்று சிற்ப நூல்கள் வாயிலாக அறிகிறோம்.

இக்கோயிலில் உள்ள ஒன்பது கோள்களில் சிலவற்றிற்கு உரிய திசைகளில் இல்லாமல் காட்சியளிக்கின்றன. இங்குள்ள நவக்கிரக மேடையில் நடுவில் சூரியனும் கிழக்கில் சுக்கிரனும் தெற்கில் செவ்வாயும், மேற்கில் சனியும் வடக்கில் (வியாழன்) குருவும், தென் கிழக்கில் சந்திரனும், தென்மேற்கில் கேதுவும், வடமேற்கில் ராகுவும், வடகிழக்கில் புதனுமாக எட்டுத் திசைகளின் கிரகங்களும் அமைந்து விளங்குகின்றன. இந்நவக்கிரகங்க சிற்பங்கள் பிற்காலத்ததைச் சார்ந்தது.

**சூரியன் :** சூரியன் உருவம் இரண்டு கைகளுடன் நின்ற கோலத்தில் காணப்படுகிறது. இரண்டு கைகளிலும் தாமரை மலரைக் கொண்டுள்ளது. சூரியனின் தலையைச் சுற்றிலும் ஒளிவட்டம் காணப்படுகிறது. கிரீட

மகுடம், குண்டலம், கண்டசரம், புரிநூல், தோள்வளை, உதரபந்தம், காப்பு அணி செய்கின்றன. இடுப்பில் இருந்து முழங்காலுக்கு கீழ் வரையான ஆடை சூரியனை அலங்கரிக்கின்றன. நவக்கிரக மண்டலத்தில் நடுவே தோன்றும் சூரியன் கிழக்கு திசையை நோக்கியுள்ளது.

**சந்திரன்:** இவ்வுருவம் நவக்கிரக மண்டலத்தின் தென்கிழக்கு திசையில் மேற்கு திசை நோக்கியவாறு காணப்படுகிறது. இரண்டு கைகளில் அல்லி மலரை தாங்கி நேராக நின்ற நிலையில் காட்சியளிக்கிறது. சந்திரனின் தலையைச் சுற்றிலும் ஒளிவட்டம் காணப்படுகிறது. தலையில் கிரீட மகுடம், குண்டலம், கண்டசரம், மணிவடம், காப்பு, உதரபந்தம் இடைக்கச்சை யாவும் சந்திரனை அழகு செய்கின்றன.

**செவ்வாய் (அங்காரகன்):** அங்காரகனின் இவ்வுருவம் நான்கு கைகளுடன் நேராக நின்ற கோலத்தில் தெற்கு திசையை நோக்கிய வண்ணம் காணப்படுகிறது. வலது மேற்கை திரிசூலத்தை பிடித்துள்ளது. இடக்கை நாகம் சுற்றிய உடுக்கையைக் கொண்டுள்ளது. கீழ் வலக்கை அபய முத்திரையுடனும் கீழ் இடக்கை கதையின் மேல் அமைந்துள்ளது. கிரீட மகுடம், மகரக்குழைகள், கண்டசரம், பதக்கம் கோத்த மணிவடம், கேயூரம், காப்பு, இடைக்கச்சை ஆகிய அணிகளும் ஆடையும் செவ்வாயை அலங்கரிக்கின்றன.

**புதன்:** இவ்வுருவம் நவக்கிரக மண்டலத்தில் வடகிழக்குத் திசையில் அமைந்துள்ளது. நான்கு கைகளுடன் நேராக நின்ற நிலையில் கிழக்கு நோக்கிய வண்ணம் காணப்படுகிறது. புதனின் மேற்கைகளில் இரண்டு அம்பு, கத்தி ஆகிய ஆயுதங்களை ஏந்தியுள்ளன. கீழ் வலது கை அபய முத்திரையுடனும் கீழ் இடது கை வரத முத்திரையுடனும் அருள் பாலிக்கிறது. கிரீட மகுடம், மகர குண்டலம், கண்டசரம், மணிவடம், உதரபந்தம், சன்னவீரம் ஆகிய அணிகள் அணிந்து இடுப்பில் இருந்து முழங்காலுக்கு கீழ் வரை ஆடை தரித்துள்ளது.

**வியாழன் (குரு):** குருபகவானின் இவ்வுருவம் நவக்கிரக மண்டலத்தில் வடக்கு திசையில் இரண்டு கைகளுடன் நின்றநிலையில் வடக்கு திசை நோக்கி அமைந்துள்ளது. வியாழனின் கைகள் இரண்டிலும் அம்பு, வில் ஏந்தியுள்ளன. கரண்ட மகுடம், மகர குழைகள், கண்டசரம், மலர்பதக்கம் கோத்த மணிவடம், கேயூரம், காப்பு, உதரபந்தம், இடைக்கச்சை ஆகிய அணிகலன்கள் குருபகவானை அலங்கரிக்கின்றன.

**வெள்ளி (சுக்கிரன்):** இவ்வுருவம் நவக்கிரக மண்டலத்தின் கிழக்கு திசையில் இரண்டு கைகளுடன் நின்ற கோலத்தில் காணப்படுகிறது. சுக்கிரனின் வலது கையில் கத்தி ஆயுதத்தையும் இடது கையில் தாமரையும் உள்ளன. தலையில் கிரீட மகுடம், மகர குழைகள், கண்டசரம், புரிநூல், கேயூரம், காப்பு உதரபந்தம், இடுப்பில் இருந்து முழங்காலுக்கு கீழ் வரை ஆடையும் அலங்கரிக்க சுக்கிரனின் உருவம் கிழக்கு நோக்கி காணப்படுகிறது.

**சனிபகவான்:** சனிபகவான் நான்கு கைகளுடன் திரிபங்க நின்ற நிலையில் மேற்கு திசையில் மேற்கு நோக்கி அமைந்துள்ளது. சனியின் மேல் வலது கையில் அங்குசம், மேல் இடது கையில் பாசமும் பற்றியுள்ளன. கீழ் வலக்கை அபய முத்திரையும், கீழ் இடக்கை வரத முத்திரையும் காணப்படுகிறது. தலையில் கிரீட மகுடம், காதில் மகர குழைகள், கழுத்தணி கண்டசரம், சன்னவீரம் ஆகிய அணிகளைப் பெற்று திகழ்கிறது. இடையில் இருந்து முழங்கால் வரை கீழாடை அலங்கரிக்கிறது.

**ராகு:** இவ்வுருவம் நவக்கிரக மண்டலத்தின் வடமேற்கு திசையில் காணப்படுகிறது. இரண்டு கைகளும் தொங்கிய வண்ணம் தெற்கு திசை நோக்கிய நிலையில் காணப்படுகிறது. தலையில் கிரீட மகுடம் தலையை அலங்கரிக்கிறது. இங்குள்ள நவக்கிரகங்களில் ராகு, கேது மட்டும் இரண்டு கைகளும் கீழ் நோக்கிய திசையில் காணப்படுகின்றன. தலை மீது ஐந்து நாகம் ஒன்று கவிழ்ந்து நிழல் கொடுக்கிறது. மகரக்குழைகள் காதிலும், கண்டசரம், இடைக்கச்சை இடையிலிருந்து முழங்காலுக்கு கீழ் வரையிலும் ராகுவை அலங்கரிக்கின்றன.

**கேது:** இவ்வுருவம் நவக்கிரக மண்டலத்தின் தென்மேற்கு திசையில் காணப்படுகிறது. கேதுவின் மேலுடல் மானிட வடிவிலும் கீழுடல் பாம்பின் வடிவிலும் அமைந்துள்ளது. தலையில் கிரீட மகுடம், காதுகளில் மகரக் குழைகளும் அலங்கரிக்கின்றன. இரண்டு கைகளும் கீழ் நோக்கி தொங்கும் நிலையில் உள்ளது. இக்கேது உருவம் தெற்கு நோக்கி அமைக்கப்பட்டுள்ளது.

### துவாரபாலகர் 1

வாமனபுரீஸ்வரர் கோயிலின் அர்த்தமண்டப வாயிலின் தென் திசையில் நிற்கும் துவாரபாலகர் சிற்பம் தன் இடது காலை தரையில் ஊன்றி வலது காலைக் காதாயுதத்தின் மீது வைத்துக் கொண்டு கிழக்கு திசையை நோக்கி நான்கு கைகளுடன் காட்சியளிக்கிறது.

வாயில்காப்பன் எனும் துவாரபாலகரின் மேல் வலதுகை விஸ்மய முத்திரையில் வியக்கும் கரமாகவும் மேல் இடது கை தளிர்கையுடனும் கீழ் வலது கை சூசி முத்திரை (சுட்டும் கை) கீழ் இடதுகை கதை மீது அமைந்துள்ளது.

தலையில் சுருண்ட கேசங்கள் அலங்கரிக்கும் உயர்ந்த சடைமுடியும் பக்கங்களில் விரிந்த சுருண்ட தாழ்சடையும் அலங்கரிக்கின்றன. மகுடத்தின் முன்புறம் இரு மகரங்களின் நடுவே கீர்த்தி முக அணியும் மேல் நெற்றியில் முத்துக்கள் அலங்கரிக்கும் நெற்றிப்பட்டமும் இரண்டு காதுகளிலும் பாம்பு குண்டலங்கள் அவலங்கரிக்கின்றன.

துவாரபாலகரின் கழுத்தில் பொன் கற்கள் பதித்த பட்டையான சரப்பளியும், மலர்ப்பதக்கம் கோத்த இரட்டைவட முத்துமாலையும் மற்றும் மலர்ப்பதக்கம் உடைய முப்புரியும் அடிவயிற்றில் உதரபந்தமும் கைகளில் மூன்று காப்புகளும் அணி செய்கின்றன.

இடையில் இடைக்கச்சையும் கால்களில் அணிச்சரமும் இரண்டு கால்களுக்கிடையே கர்ஜிக்கும் சிங்கம் தன் வாலை நன்கு மேலே சுற்றி ஆக்ரோஷமாக செதுக்கப்பட்டுள்ளது.

சதுரமான பரந்த முகமும் அகன்ற நெற்றியில் தூக்கிய புருவமும் அச்சமூட்டும் விரிந்த கண்களும் திறந்த வாயின் பக்கங்களில் வளைந்த கடைவாய் (சிங்கப்பல்) பற்களும் கொண்டு இக்கற்சிற்பம் மிகவும் கம்பீரமாகத் தோற்றமளிக்கிறது.

### துவாரபாலகர் 2

இக்கோயில் அர்த்தமண்டப வாயிலின் இடதுபுறமான திசையில் மற்றொரு வாயிற்காவலர் உருவம் காணப்படுகிறது. இவ்வுருவம் வலது

காலை தரையில் ஊன்றி இடது காலை கோடாரி போன்ற மழுவின் மீது காலை வைத்து நான்கு கைகளுடன் காட்சியளிக்கிறது. மேல் வலது கை தாடகஹஸ்தம் (அடிக்கும் கை) மேல் இடது கை தளிர்க்கை (பல்லவ ஹஸ்தம்) கீழ் வலது கை சூசி ஹஸ்தம் (சுட்டும் கை) கீழ் இடது கை கஜஹஸ்தம் முத்திரைகளில் அமைந்துள்ளன.

வாயிற் காவலரின் இவ்வுருவம் கூரிய கடைவாய்ப் பற்களுடன் திறந்த வாயும் புடைத்த மூக்கும், விரிந்த கண்களுடன், தூக்கிய புருவங்களுடன் காட்சியளிக்கிறது.

தலையில் உயர்ந்த சடை மகுடமும், நெற்றியில் முத்துப்பட்டையும் அலங்கரிக்கின்றன. கற்கள் பதித்த மூன்று கை வளைகளும், மேல் வயிற்றில் உதரபந்தம், வலது கை பெருவிரலில் மோதிரமும் இடைக்கச்சை இலைக்கருக்குகளையுடைய ஆடைக்கட்டுகள் வளைந்து உள்ளன. இவர் திடமான உடலமைப்பும் வலுவான திரண்ட அங்கங்களும் பெற்று விளங்குகிறார்.

### மாஹேஸ்வரி - அம்மன் சன்னதி

இச்சிற்பம் அம்மன் சன்னதி கருவறையின் வெளிப்புற தெற்குப்புற தேவகோட்டத்தில் நான்கு கைககளுடன் சமபங்க நின்ற நிலையில் அமைந்துள்ளது. கைகளில் மேல் வலது கை மழுவையும் மேல் இடது கை சரபத்தையும் ஆயுதங்களாக கொண்டுள்ளது. கீழ் வலது கை தாமரை மலரைப் பற்றியும் கீழ் இடது கை தொடை மீது வைத்திருக்கும் நிலையில் உள்ளது.

தலையில் கரண்ட மகுடத்துடன் காதில் விரிபூ ஒன்றும் தனங்களுக்கு இடையே குஜபந்தம் இல்லை. கழுத்தில் மூன்று மணி மாலைகள் அலங்கரிக்கின்றன. மார்பில் புரிநூலும் இடையில் கட்டப்பட்ட இடை, கணுக்கால் கால்வரை அழகுடன் அலங்கரிக்கின்றன.

### வைஷ்ணவி - அம்மன் சன்னதி

அம்மன் சன்னதி கருவறை புறச்சுவரின் மேற்குப்புற தேவகோட்டத்தில் சமபங்க நிலையில் நான்கு கைகளுடன் நின்றநிலையில் காணப்படுகின்றது. மேல் வலது கையில் சக்கரமும் மேல் இடது கைகளில் சங்கும் கீழ் வலது கை அபய முத்திரையுடனும் கீழ் இடது கை தொடை மீது வைத்த நிலையில் காணப்படுகிறது.

காதில் பத்திர குண்டலங்களும் தோள்களில் தோள் மாலையும் கைகளில் வளையல்களும் அலங்கரிக்கின்றன. தனங்களில் குஜபந்தம் இல்லை. கழுத்தில் முத்துக்கோர்த்த மணி மாலையும் காதில் மணிகள் கோர்த்த மணிச்சரமும் அணி செய்கிறது. முப்புரிநூலும் உயர்த்திய புருவமும், விரிந்த கண்களும் சற்று கூர்மையான மூக்கும் சிறப்பான முறையில் செதுக்கப்பட்டுள்ளன.

## பிராமி - அம்மன் சன்னதி

அம்மன் சன்னதி கருவறையின் வடக்குப்புற தேவகோட்டத்தின் மூன்று முகத்துடன் சமபங்க நிலையில் நான்கு கைகளுடன் நின்ற நிலையில் பிராமி சிற்பம் அமைந்துள்ளது.

மேல் வலது கையில் அக்க மாலையும் மேல் இடது கையில் கெண்டியும் இடம்பெற்றுள்ளன. கீழ் வலது கை அபய முத்திரையும் கீழ் இடது கை தொடைமீதும் வைத்திருக்கின்றது.

காதுகளில் மலர்க்குண்டலங்களும் தோள்களில் தோள் மாலையும் கழுத்தில் சரப்பளியும் மலர்ச்சரம் கோர்த்த மணி மாலையும் அலங்கரிக்கின்றன. புரிநூல் அணிவிக்கப்பட்டு இடையில் கட்டப்பட்ட ஆடை கணுக்கால் வரை அணி செய்கிறது.

## துர்கை - அம்மன் சன்னதி

அம்மன் சன்னதியில் அர்த்தமண்டபத் தெற்குப்புற தேவகோட்டத்தில் சிற்பம் எதுவும் காணப்படவில்லை. ஆனால் அர்த்தமண்டபம் தேவகோட்டத்தின் வடக்குப்புற தேவகோட்டத்தில் இடது காலை ஊன்றி வலது காலை சற்று முன் வைத்து எருமைத் தலையின் மீது திரிபங்க நிலையில் நான்கு கைகளுடன் நின்ற நிலையில் துர்கை சிற்பம் அமைந்துள்ளது.

மேல் வலது கை சக்கரமும் இடது கை சங்கும் பற்றியுள்ளன. கீழ் வலது கை அபய முத்திரையும் கீழ் இடது கை தொடைமீது வைத்திருக்கும் நிலையில் அமைந்துள்ளது. தலையில் கிரீட மகுடமும், காதில் மகரகுண்டலமும், காதில் காதுப்பூவும், நெற்றியில் நெற்றிப்பட்டமும், கழுத்தில் மணிமாலைகளும், தோள்களில் தோள் மாலையும் அலங்கரிக்கின்றன.

கைகளில் பதக்கங்களுடன் கூடிய வளைகளும் இடையில் கட்டப்பட்ட ஆடை கணுக்கால் வரை அணி செய்கின்றன. தனங்களுக்கு இடையே குஜபந்தம் இல்லை. உயர்த்திய புருவமும், விரிந்த கண்களுடன் அழகுடன் துர்கை சிற்பம் காட்சியளிக்கிறது.

## சண்டிகேஸ்வரி

அம்மன் சன்னதியில் திருச்சுற்றின் வடக்குப்புறத்தில் சண்டிகேஸ்வரிக்கு என்று தனிச் சிற்றாலயம் உள்ளது. இச்சிற்பம் இடதுகாலை மடக்கி வலது காலை தொங்கவிட்டு பாத இருக்கை மீது அமர்ந்து இரண்டு கைகளுடன் தெற்கு நோக்கி அமர்ந்துள்ளது. இடதுகை தொடை மீதும் வலதுகை மலர் ஏந்தியும் உள்ளது. தலையில் கிரீட மகுடம் அலங்கரிக்கின்றது. சற்றுப் பெருத்த மூக்குடன் விரிந்த கண்களுடன் அமைந்துள்ளது.

## திருச்சுற்றுப் பாதை தூண் சிற்பங்கள்

சுவாமி சன்னதி திருச்சுற்று கிழக்குப் பகுதியில் இருந்து தெற்குப் பகுதியில் சோமஸ்கந்தர் சன்னதி வரை உள்ள மண்டபத்தில் அழகிய சித்திரத் தூண்கள் அலங்கரிக்கின்றன. இத்தூண்களின் மேலும் கீழும் நடுவிலும் உள்ள சதுரப்பட்டைகளில் தெய்வ உருவங்கள், தேவர், மானிடர், பறவைகள், பூக்கள், இலைக்கருக்குள், கொடிக்கருக்குள், கும்பம், ஊர்வன, பறப்பன யாவும் புடைப்புச் சிற்பங்களாக இடம் பெற்றுள்ளன. இதில் தென்மேற்கு மூலையில் அமைந்துள்ள சோமாஸ்கந்தர் சன்னதியின் முன்பு மண்டபத்தின் மேற் கூரையில் நான்கு சித்திர வேலையுடன் உள்ள பூவின் நடுவில் வாழைப்பூ தொங்குவது போன்று மேற்கூரை கல்லில் செதுக்கப்பட்டு இயற்கையாக தொங்குகிறது.

இத்தூண்களின் சதுரப்பட்டைகளில் பல வகை உருவங்கள் புடைப்புச் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன. இத்தூண்களின் அமைதியை உற்று நோக்கும் போது விஜயநகர ஆட்சியாளர்களின் கலையைச் சார்ந்தது என்று கூற இயலும். ஏனெனில் தூண்களின் போதிகைகள் நன்கு வளர்ச்சியுற்று வாழைப்பூ வளர்ச்சி தொடக்க

நிலையில் உள்ளதை காண்கிறோம். மேலும் தூண்களில் நாக பந்தம் காணப்படுகிறது. ஆதலால் இதனை விஜயநகர கால தூண்கள் என கூறலாம். இத்தூண்களில் உள்ள சிற்பங்களாகவன:

* பூக்கள் நிறைந்த கொடிக்கருக்குள்
* எழில் மிகு இலைக்கருக்குகள்
* வனப்பூட்டும் விரிந்த மலர்கள்
* சதுரப்பட்டையின் நடுவே தோன்றும் வட்டங்கள்
* மலர்ந்த அடுக்குகளைக் கொண்ட விரிந்த தாமரை
* நடைபயிலும் அழகிய அன்னம்
* இலைக்கருக்குகளைப் பற்றி நிற்கும் அழகிய அன்னம்
* இரண்டு கால்களை தூக்கி நிற்கும் சிம்மம்
* கதையுடன் வாலைமேல் உயர்த்திய நிலையில் அனுமன்
* அழகிய நிர்வான நிலையில் பைரவர் உருவம்
* அமர்ந்த நிலையிலுள்ள குந்து விநாயகர்
* தாரை ஊதும் வீரன்
* உணவு எடுத்துச் செல்லும் குள்ள பூதம்
* உட்கார்ந்த நிலையில் இந்திராணி
* எச்சரிக்கும் கையுடன் கூடிய துவாரபாலகர்கள்
* குழல் ஊதும் கிருஷ்ணன்
* பின்னி பிணைந்திருக்கும் நாகங்கள்
* மயில் வாகனத்துடன் நின்ற நிலையில் சுப்ரமணியர் உருவம்
* மரத்தின் மீது கிருஷ்ணன் அமர்ந்திருத்தல், மரத்தின் கீழ் ஆடையில்லாத ஒரு பெண் மரத்தை பிடித்துக் கொண்டிருக்கும் நிலை.
* அஞ்சலித்து நிற்கும் அரன் உருவம்
* சங்கு ஊதும் மனித உருவம்
* உட்கார்ந்து அஞ்சலித்த நிலையில் அரசன் உருவம்
* லிங்கத்தின் மீது நிற்கும் அன்னத்தின் உருவம்
* குரங்கு உட்கார்ந்து தின்னும் காட்சி

* உட்கார்ந்த நிலையில் குள்ள பூதம்
* கேடயமும் வாளும் ஏந்தியிருக்கும் வீரன் உருவம்
* வேலைப்பாடு மிக்க பூர்ண கும்பம்
* நின்று கொண்டு வீணை மீட்டும் பெண் உருவம்
* கைகளை கீழே தரையில் ஊன்றி கால்களை நன்கு வளைத்து தலைமீது வைத்து நடனமாடும் மங்கை உருவம்
* தடியை ஊன்றி உடலை வளைத்து நின்று கொண்டு தடித்த துணியால் தலை முதல் கால் வரை பின்புறமாக மறைந்து நிற்கும் ஆணின் உருவம்
* ஆடையின்றி நடனமாடும் நடன மங்கை
* கையில் தடி மற்றும் நீர்ப்பானையுடன் தலை முதல் கால் வரை தடித்த துணியால் பின்னால் மறைத்து அணிந்திருக்கும் ஆணின் உருவம்

### முக மண்டபம்

இம்மண்டபத்தில் மொத்தம் 22 தூண்கள் காணப்படுகின்றன. இம்மண்டபத்தின் வடக்கு, கிழக்குப் பகுதிகள் சுவரால் அடைக்கப் பட்டுள்ளன. இதன் திறந்த தெற்குபுற வாயில் வழியாக கோயிலின் கருவறைக்கு செல்லும் வழியாகும். சோழர் காலத்தில் நுழைவு வாயில் கிழக்கு புறமாக இருந்துள்ளதை அறியமுடிகிறது.

### முக மண்டபத் தூண் சிற்பங்கள்

* கொடிக்கருக்குகள்
* பூரண கும்பம்
* வனப்பூட்டும் விரிந்த மலர்கள்
* அடிமுடிகாணா அண்ணலின் உருவம்
* விநாயகர் உருவம்
* இலைக்கருக்கை அலகால் பற்றி நிற்கும் அன்னம் ஆகிய சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன.

### சுதைச் சிற்பங்கள்

திருமாணிகுழி கோயிலில் வாமனபுரீஸ்வரர் சுவாமி சன்னதி நடராசர் சன்னதி, விஷ்ணுலிங்கம் சன்னதி, சண்டிகேஸ்வரர் சன்னதி, பைரவர் சன்னதி, சோமாஸ்கந்தர் சன்னதி, ஸ்ரீ செல்வ விநாயகர் சன்னதி, ஸ்ரீசுப்ரமணியர் சன்னதி, ஸ்ரீஅம்புஜாக்ஷிஅம்மன் சன்னதி என்ற சன்னதிகள் இருந்தாலும் நடராஜர் சன்னதி, விஷ்ணுலிங்கம் சன்னதி, பைரவர் சன்னதி, சோமாஸ்கந்தர் சன்னதி ஆகிய சன்னதிகளில் அதிட்டானம் முதல் பிரஸ்தரம் வரை உள்ள அமைப்பே உள்ளன. இதற்கு மேல் உள்ள விமானப் பகுதி ஏதும் இல்லை ஆதலால் இங்கு சுதைச் சிற்பங்கள் ஏதுமில்லை. சண்டிகேஸ்வரர் சன்னதி ஒரு தளத்தை கொண்ட வேசர சிகரமாக அமைந்திருந்தாலும் அதில் சுதைச் சிற்பங்கள் ஏதும் அமைக்கப்படவில்லை.

சுவாமி சன்னதி, ஸ்ரீசெல்வ விநாயகர் சன்னதி, ஸ்ரீசுப்ரமணியர் சன்னதி, ஸ்ரீஅம்புஜாக்ஷி அம்மன் சன்னதி, இரண்டாம் திருச்சுற்று கிழக்கில் உள்ள இராஜகோபுரம் ஆகியவற்றில் சுதை சிற்பங்கள் காணப்படுகின்றன.

### விமானச் சிற்பங்கள்

வாமனபுரீஸ்வரர் கோயில் கருவறைக்கு மேல் ஒரு தளமாக உள்ள விமானத்தின் கிரீவத்தில் உள்ள நான்கு சாலைகளின் நான்கு சுதைச் சிற்பங்கள் அமைந்துள்ளன. விமானக் கோட்டத்தின் சாலையில் முன்புறம் இக்கருவறையில் இறைவனும், இறைவியும் இருப்பதாக கருதுவதை ஒட்டி மாதொரு பாகனாக அர்த்தநாரீஸ்வரர் காட்சி தரும் சிற்பத்தை காணலாம்.

தெற்கு கோட்டத்தில் ஆலின் கீழ் அமர்ந்து அறம் உரைக்கும் அண்ணல் வீராசனத்தில் அமர்ந்து காட்சியளிக்கிறார். சிவனின் இருபக்கங்களிலும் இரு முனிவர்கள் காட்டப்பட்டுள்ளனர்.

மேற்கு திசையில் உள்ள சாலையின் முன்புறம் திருமால் ஐந்து தலை பாம்பின் கீழ் அமர்ந்து இரண்டு கைகளுடன் காட்சியளிக்கிறார். வலது கை வரத முத்திரையுடன் இடது கை சுதை மீது வைத்திருப்பது போல செதுக்கப்பட்டுள்ளது. திருமாலின் இருமருங்கிலும் நில மகளும், பூமகளும் கைகளில் நீலோற்பல மலரை ஏந்தி சூழ அமர்ந்த கோலத்தில் காட்டப்பட்டுள்ளனர்.

வடதிசையில் உள்ள சாலையில் நான்முகன், சரஸ்வதி, சாவித்திரி ஆகிய இரு தேவியருடன் வீற்றிருக்கின்றார். பிரம்மாவின் நான்கு கைகளில் மேல் வலது கை அக்கமாலையும் மேல் இடது கை மழுவையும் ஏந்தியுள்ளது. கீழ் வலது கை அபய முத்திரையுடன், கீழ் இடது கை வரத முத்திரையுடன் அருள்பாலிக்கிறார். தேவியர் இருவரும் ஒரு கையை தொடை மீதும் மற்றொரு கை மலர் ஏந்தியும் காட்சியளிக்கின்றனர்.

ஸ்ரீசெல்வ விநாயகர் சன்னதியின் கிரீவத்தில் உள்ள நான்கு சாலைகளிலும் நான்கு விநாயகர் சிற்பங்கள் ஒரே மாதிரியாக அமைக்கப்பட்டுள்ளன. பீடத்தின் மீது நான்கு கைகளுடன் அமர்ந்திருக்கும் காட்சியாக உள்ளது. மேல் வலது கையில் மழுவும் மேல் இடது கையில் பாசமும், கீழ் இடது கையில் தந்தமும், கீழ் இடது கையில் மோதகம் ஏந்திய நிலையில் நான்கு சிற்பங்களும் ஒரே அமைப்பில் அமைக்கப்பட்டுள்ளன.

ஸ்ரீசுப்ரமணியர் சன்னதியில் தெற்கு சாலையில் ஸ்ரீசுப்ரமணியர் வள்ளி, தெய்வானையுடன் நான்கு கைகளுடன் நின்ற நிலையில் காட்சியளிக்கிறார். மேல் வலது கைகளில் வஜ்ஜிராயுதமும், மேல் இடது கையில் நீலோற்ப மலரும் கீழ் வலது கையில் அபய முத்திரையும் கீழ் இடது கை வரத முத்திரையும் அருள் பாலிக்கிறது.

மேற்கு சாலையில் ஸ்ரீ சுப்ரமணியர் சமபங்க நிலையில் நான்கு கைகளுடன் தனித்து நின்று காட்சியளிக்கிறார். மேல் வலது கையில் வஜ்ஜிராயுமும், மேல் இடது கையில் அக்கமாலையுடனும் கீழ் வலது கை மலர் ஏந்தியும் கீழ் இடது கை தொடைமீது வைத்திருக்கும் நிலையில் அமைந்துள்ளது.

வடக்கு சாலையில் வள்ளி. தெய்வானையுடன், ஸ்ரீசுப்ரமணியர் மயில் முன்பு நின்று அபயமுத்திரையுடன் காட்சியளிக்கிறார்.

கிழக்கு சாலையில் ஸ்ரீசுப்ரமணியர் சமபங்க நிலையில் நான்கு கைகளுடன் தனித்து காட்சியளிக்கிறார். மேல் கைகளில் வஜ்ஜிராயுதமும், சூலமும், ஆயுதங்களாக கொண்டுள்ளார். கீழ் கைகளில் அபய, வரத முத்திரையுடனும் காட்சியளிக்கிறார். இவை பிற்கால சுதைச் சிற்பங்களாகும்.

## இராஜகோபுரச் சிற்பங்கள்

இராஜகோபுரத்தில் ஐந்து நிலைகள் உள்ளன. மூன்று சாலைகளில் இருமருங்கிலும் துவார பாலகர்கள் கிழக்கு பகுதியிலும் மேற்கு பகுதியிலும், சுதை சிற்பங்கள் அமைந்துள்ளது. மேலே உள்ள இரண்டு சாலைகளில் இருமருங்கிலும் துவாரபாலகர்கள் மேல் கைகள் அடிக்கும் கையான தாடஹஸ்த முத்திரையுடன் பல்லவ ஹஸ்தத்துடன் அமைந்துள்ளனர். கீழ் கைகள் அச்சுருத்தும் தர்ஜனி முத்திரையுடன் கஜஹஸ்தத்தில் கதை மீது உள்ளன.

இரண்டு மற்றும் மூன்றாம் சாலையில் உள்ள துவாரபாலகர்கள் மேலே உள்ள கைகளில் மழு, பாசமும், கீழ் உள்ள கைகளில் தர்ஜனி முத்திரையும் கதை மீதும் வைத்திருக்கின்றன.

மேலே உள்ள நான்கு மற்றும் ஐந்தாவது சாலைகளில் துவாரபாலகிகள் சுதை சிற்பங்கள் நான்கு கைகளுடன் சமபங்க நிலையில் நின்றநிலையில் மேல் கைகளில் மழு, பாசமும் கீழ் கைளில் சுதை மீதும் தர்ஜனி முத்திரையுடன் சித்தரிக்கின்றன.

வடக்குப் பகுதி முதல் நிலையில் பிரம்மா நான்கு கைகளுடன் தாமரை மீது அமைந்திருக்கும் சுதை சிற்பம் காணப்படுகிறது. மேல் வலது கையில் அக்கமாலையும் மேல் இடது கையில் மலரும் கீழ் வலது கை வியாக்யான முத்திரை கீழ் இடது கையில் ஏடும் காணப்படுகிறது.

தெற்கு பகுதி முதல் நிலையில் தட்சணாமூர்த்தி சுதை சிற்பம் காணப்படுகிறது. அரசமரத்தின் கீழ் தியானத்துடன் அமர்ந்துள்ளார். மேல் வலதுகை பாம்பையும் மேல் இடதுகை அக்னியையும் பற்றியுள்ளன. கீழ் இரண்டு கைகளில் யோக நிலையில் இரண்டு கைகளும் தொடைமீது ஒன்றின் மீது ஒன்று வைத்திருக்கும் காட்சியாக உள்ளது.

கிழக்குப் பகுதி முதல் நிலையில் விநாயகரும், துர்கை பத்து கைகளுடன் நிற்கும் காட்சி, அம்மன் இரண்டு கைகளுடன் நிற்கும் காட்சி, கௌமாரி மயில் வாகனத்துடன் கூடிய காட்சியாக சுதைச் சிற்பங்கள் வைக்கப்பட்டுள்ளன.

# செப்புத் திருமேனிகள்

## நடராசர்

திருமாணிகுழி கோயிலுள்ள கலைச் செல்வங்களில் நடராசர் படிமமும் அன்னை உருவமும் குறிப்பிடத்தக்கவை. இவ்வாலயத்திலுள்ள ஆடும் கூத்தன் என்னும் ஆடல்வல்லான் என்றழைக்கப்படும் நடராசனின் அழகிய செப்புத் திருமேனி சதுரமான பீடத்தின் மீதல்லாமல் தாமரை இருக்கையின் மீது முயலகன் வலது காலை நீட்டி இடது காலை மடித்து கர முகத்தை தூக்கி கவிழ்ந்து கிடக்கிறான். அவன் முதுகில் ஆடும் பெருமான் தன் வலது திருவடியைக் குறுக்கை வளைத்து ஊன்றி இடது திருவடியை மேலே நன்கு தூக்கி முன்பக்கம் விசிறிய நிலையில் நான்கு கைகளை விரித்து ஆடுகிறார்.

இவரது மேல் வலக்கை தமரு முத்திரையில் உடுக்கையை பிடித்துள்ளது. மேல் இடக்கை அர்த்த சந்திர முத்திரையில் அமைந்து சுடர்விட்டு எரியும் தீ அனலை ஏந்தி நிற்கிறது. கீழ் வலக்கை மார்பில் பக்கவாட்டில் நீண்டு அபய முத்திரை காட்டி அருள்பாலிக்கிறது. கீழ் இடக்கை மார்புக்கு குறுக்காக நீண்டு கஜ ஹஸ்த (வேஷ முத்திரை) முத்திரை காட்டுகிறது.

ஆடும் பெருமானின் பரந்த முகம் மிடுக்காகத் திகழ்கிறது. ஆடல்வல்லானின் தலைக்கோலம் சடை மகுடமாக அமைந்து அழகு செய்கிறது. மகுடத்தின் இருபுறமும் வரிசைகளாகக் காட்டப்படாமல் சாதாரண சடையாகவே அமைந்துள்ளன.

ஒலிக்கும் பாதசலங்கை, காலிலும், எளிய தோளாடை இடுப்பிலும், சரிந்து தொங்கும் இடைக்கட்டு, மெல்லிய உதரபந்தம் மேல் வயிற்றிலும், புரிநூல் மார்பிலும், சவடி கண்டிகை மணிவடம் கழுத்திலும், மணிவரை முன்கையிலும், இலைக்கருக்கு முகப்புடைய தோள்வளை மேற்கையிலும், மகரக் குழை காலிலும், இரத்தின பட்டம் நெற்றியிலும் அமைந்து ஆடல்வல்லானை அழகு செய்கின்றன.

ஆடும் சிவனின் அழகும் அங்கங்களின் அசைவும், அழகிய முகமும் மிடுக்கான பார்வையும் ஆடைகளின் தன்மையும் கொண்டு இப்படிமம் 16-ஆம் நூற்றாண்டு எனலாம். ஆடல்வல்லானின் அழகிய வட்ட வடிவமைந்த திருவாசியை சுற்றிலும் 20 சுடர்கள் காட்டப்பட்டுள்ளன. அண்டம் மீது ஆடும் அழகிய பெருமானின் ஆனந்தக் கூற்று இச்சிலையின் ஒவ்வோர் அசைவிலும் அழகிலும் காண முடிகிறது.

### சிவகாமி

திருமாணிகுழி நடராச பெருமானின் அருகில் சிவகாமி அழகே உருவாக இரு கைகளுடன் நின்ற கோலத்தில் தனிப் பீடத்தில் வடிக்கப்பட்டுள்ளார். நடராசனின் திருமேனி சதுர பீடம் அல்லாமல் நேரடியாக தாமரை பீடத்தின் மீது நிற்பது போன்று இல்லாமல் சிவகாமியின் திருமேனி சதுரப் பீடத்தின் மீது உள்ள தாமரை இருக்கையின் மீது இரு கால்களை ஊன்றி திரிபங்க நிலையில் தோன்றும் சிவகாமியின் இடை வலப்புறம் ஒயிலாக வளைந்து வலது கால் சற்று முன் வைத்து நிற்கிறது. சிவகாமியின் வலது கை மலரைப் பிடிக்கும் பாவனையில் கடக முத்திரையில் அமைந்துள்ளது. இடது கை டோல முத்திரையில் தாழ்கரமாக நின்றுள்ளது.

நெற்றியைச் சுற்றிலும் இரத்தினப்பட்டம், வனப்பூட்ட காதுகளில் மகரக் குழைகள் அலங்கரிக்க கழுத்தில் மணிசரமும் கற்கள் பதித்த அட்டிகையும், மார்பில் புரிநூலும் மேற்கையில் தோள் வளையும், முழங்கையில் வளையும், முன் கையில் காப்பும் கை வளையும், இடையில் இருந்து முழங்காலுக்குக் கீழ் வரை எளிய இடைக்கச்சை எழில் கூட்ட இடைவார், கால்களில் காப்புமாக முடி முதல் அடி வரை அணிகலன்கள் தரித்துச் சிவகாமி படிமம் அழகின் திருவுவமாகக் காட்சியளிக்கிறது. இப்படிமம் 16-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது.

### மாணிக்கவாசகர்

பாண்டிய நாட்டில் திருவாதவூரில் தோன்றித் திருவாசகம் தந்த வாதவூர் அடிகளுக்கு இங்கு செப்புத் திருமேனி காணப்படுகிறது. இப்படிமம் சதுரமான பீடத்தின் மீதுள்ள தாமரை இருக்கை மேல் இரு

கால்களையும் ஊன்றி நின்ற கோலத்தில் காணப்படுகிறது. மாணிக்கவாசகரது வலக்கை அக்கமாலையை பற்றி சின் முத்திரை காட்டுகிறது. இடக்கை ஏடு ஏந்திய நிலையில் காட்டப்பட்டுள்ளது.

மாணிக்கவாசகரது தலையைச் சுற்றிலும் சுருண்ட கேசங்கள் அழகு செய்கின்றன. காதுகள் அணியின்றி நீண்ட தொள்ளைக் காதுகளாக நீண்டுள்ளன. மார்பில் உருத்திராட்ச மணிகள் கோர்த்த நீண்ட மாலை வனப்போடு வீழ்ந்துள்ளது. மார்பில் புரிசால் அணி செய்கிறது. இடையில் சிறிய ஆடை அணிந்து எளிமையாக காணப்படுகிறார்.

## திருஞானசம்பந்தர்

சீர்காழியில் தோன்றிய திருஞானசம்பந்தரான ஆளுடைய பிள்ளையை இங்கு இளம் பிள்ளையாக இடையில் ஆடையின்றி வனப்புடன் வடித்துள்ளனர். இப்படிமம் சதுரமான பீடத்தின் மீதுள்ள தாமரை இருக்கையில் இடது காலை சற்று வைத்து வலது தொடையை நன்கு தூக்கி முழங்காலை சற்று வளைத்து பாதம் கீழ் நோக்கி செங்குத்தாக நோக்கி வைத்து இரண்டு கைகளுடன் நடன கோலத்தில் காணப்படுகின்றது.

சம்பந்தரின் வலக்கை மேல் நோக்கி சூசி முத்திரை காட்டுகிறது. இடக்கை நன்கு நீட்டிய டோலஹஸ்த முத்திரையுடன் உள்ளது.

இவரது உயர்ந்த தலைக்கோலம் சடை மகுடமாக அமைந்து அழகு செய்கிறது. நீண்டு வடிந்த காதுகளில் அணியின்றி கழுத்தில் கற்கள் பதிகச் சரப்பளி அணிந்து முன் கைகளில் மணிவளையும் ஆடையற்ற இடையில் அரைஞாணும் சதங்கை வாரும் காலில் தண்டையும் அணிந்து காட்டப்பட்டுள்ளன.

ஞானக் குழந்தையின் முகத்தில் இளமை தவழ்கிறது. இளமைக் கோலத்தை வெளிப்படுத்தும், அழகும், ஆடையற்ற உருவும் அங்கங்களின் அமைப்பும் நேரில் கண்டுகளிக்கத்தக்கவை.

## பிரதோஷ நாயகர் - நாயகி

இச்செப்புத் திருமேனிகள் ஒரே சதுர மேடையின் மீது தனித்தனியான இருக்கையில் நாயகரும் நாயகியும் நின்ற நிலையில் காட்சியளிக்கின்றனர். நாயகர் தாமரை இருக்கையின் மீது வலது காலை நன்கு ஊன்றி இடது காலை சற்றுத் தளர்த்தி நான்கு கைகளுடன் நின்ற கோலத்தில் காட்சியளிக்கிறார். மேல் வலக்கை மழுவாயுதத்தைக் கத்தரி முத்திரையில் செங்குத்தாக பற்றி உள்ளது. கீழ் வலது கை அபய முத்திரை காட்டி அருள் பாலிக்கிறது. உயர்ந்த சடா மகுடம் தலையை அலங்கரிக்கிறது. வேலைப்பாடுமிக்கக் சிவனது சடைமுடியின் முன்புற பக்கங்களில் மலர்ந்த பூரிமங்கள் தைக்கப்பட்டுள்ளன.

சிவனின் நெற்றியைச் சுற்றிலும் முத்துப்பட்டம் அழகு செய்கிறது. நீண்ட செவிகளில் வலப்புறம் மகரக்குழையும் இடப்புறம் வட்டக் குழையும் வனப்பூட்டுகின்றன. அகன்ற தோள் பட்டையில் தோள் மாலை சரிந்துள்ளது. முன்கைகளில் காப்பும், கை வளையும், கழுத்தில் பொற்சரடு, மணிச்சரம், சரப்பளி, சவடி முதலிய அழகிய அணிகள் அலங்கரிக்கின்றன. மார்பில் சன்னவீரமும் மேல் வயிற்றில் கற்கள் பதித்த உதரபந்தமும் அணிசெய்கின்றன.

இடுப்பிலிருந்து கணுக்கால் வரை உடலை ஒட்டிய மெல்லிய ஆடை அணிசெய்கிறது. இடைக்கட்டு முடிச்சு கால முட்டிக்கீழ் வரை நன்கு தொங்குகிறது. இடையைச் சுற்றிலும் இடைவார், அம்மனின் செப்புத் திருமேனி தாமரை இருக்கையின் மீது இடது காலை ஊன்றி வலது காலை சற்று வளைத்து இடையை இடப்புறமாக வளைத்து இரண்டு கைகளுடன் நின்ற கோலத்தில் காணப்படுகிறது.

அம்மனின் முடியை அலங்கரிக்கும் அழகிய கரண்ட மகுடமும், நெற்றியைச் சுற்றி முத்துப்பட்டமும் நீள் செவிகளில் வட்டக்குழைகளும் மெலிந்த தோள்களில் வழிந்தோடும் வாகு மாலையும் கழுத்தை அலங்கரிக்கும் கண்டசரம், கற்கள் பதித்த சரப்பளியும் முன்கைகளில் வளையும் கச்சையற்ற குவிந்த தனங்களுக்கிடையே புரிநூலும், கொடியிடையைச் சுற்றிலும் அழகு சேர்க்கும் ஆடைக்கட்டும்,

இடைவாரும், இடையிலிருந்து உடலை ஒட்டி முழங்காலுக்குக் கீழ் வரை அழகு செய்யும் வேலைப்பாடுமிக்கக் கீழாடையும் இடையின் பக்கங்களில் வழிந்தோடும் ஆடைக்கட்டும் பாதங்களில் பொலிவூட்டும் பாதசரமும், சதங்கையும் அன்னையின் அழகுக்கேற்ப மிகப்பொருத்தமாக வடிக்கப்பெற்றுள்ளது.

## சந்திரசேகரர்

இப்படிமம் தாமரை இருக்கை மேல் நான்கு கைகளுடன் நின்ற கோலத்தில் காட்சியளிக்கிறது. சிவனின் மேல் வலக்கை மழுவைப் பற்றியுள்ளது. இடக்கை மானைப் பிடித்துள்ளது. கீழ் வலக்கை அருள்பாலிக்கும் அபய முத்திரை காட்டுகிறது. இடக்கை வழங்கும் கரமாக வரத முத்திரையுடன் அருள்பாலிக்கிறது.

நீள் சடைமுடி தலையிலும், வட்டமாக சிறச்சக்கரம் பின் தலையிலும், இரத்தினப்பட்டம் நெற்றியிலும், வலது காதில் மகர குழையும், இடது காதில் வட்ட குழையும் அலங்கரிக்கிறது. தோளில் மெல்லிய தோள் மாலை வீழ்ந்துள்ளது.

சிவனது கழுத்திலும், மார்பிலும், மெல்லிய கண்டசரம் பொற்சரடு, உத்திராட்ச மணி மாலை, இடது தோளைப் புரிநூல் அணி செய்கிறது. இடைக்கச்சை முட்டி வரை அலங்கரிக்கிறது. இடையைச் சுற்றிலும் இடைமணியும் அரைப்பட்டிகையும் இடைவாரும், காலில் கழலும் இவ்வுருவை அணிசெய்கிறது.

நீள் வட்டமுகம், அகன்ற நெற்றி, செங்குத்தாக தோன்றும் நெற்றிக்கண், உயர்ந்த புருவம், அருள்பாலிக்கும் விரிந்த கண்கள் எடுப்பான நீண்ட மூக்கு, குவிந்த வாய், திரண்ட தோல், விரிந்த மார்பு, பாயும் மான் மழு ஆகியவைக் கொண்டு திகழும் சந்திரசேகரர் செப்புத் திருமேனி நுட்பமான வேலைப்பாடுடன் திகழ்கிறது.

## சந்திரசேகர அம்மன்

இப்படிமம் தாமரை இருக்கை மேல் திரிபங்கியாக நின்ற கோலத்தில் இரு கைகளுடன் காட்சியளிக்கிறது. உமையின் வலது கை கடக முத்திரையிலும், இடது கை தாழ் கையாக டோல முத்திரையிலும் அமைந்துள்ளது.

தலையில் கேசபந்தமும், சிரச்சக்கரம் பின் தலையிலும், நெற்றியில் இரத்தினப்பட்டமும், காதில் மகர குழைகளும், கழுத்தில் கண்ட சரம் சரப்பளியும், மார்பில் புரிநூலும், மேற்கையில் தோள்வளையும், முன் கைகளில் கைவளையும், காப்பும், இடையில் இடைக்கச்சை கணுக்கால் வரையும், கணுக்காலில் கழலும் காலில் பாதச்சரமும் இவ்வம்மனை அழகுசெய்கிறது.

**சோமஸ்கந்தர்**

இப்படிமக்குழு தனித்தனியான தாமரை இருக்கையில் குமரனுடன் சிவனும் உமையும் அம்மை அப்பனாகத் தோன்றும் தெய்வீகக் குடும்பமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

இடது காலை மடித்து வலது காலை பீடத்தின் முன்புறம் தாழத் தொங்கவிட்டு நான்கு கைகளுடன் சுகாசனத்தில் வீற்றிருக்கும் சிவனது மேல் வலக்கை மழுவாயுதத்தை கத்தரி முத்திரையில் சற்று சாய்வாக பற்றியுள்ளது. மேல் இடக்கை பாயும் மானை ஏந்தியுள்ளது. கீழ் வலக்கை அபய முத்திரையுடன் அருள்பாலிக்கிறது.

சிவனது நெற்றியைச் சுற்றிலும் முத்துப்பட்டம் அழகு செய்கிறது. நீள் செவிகளில் வலப்புறம் மகரகுழையும் இடப்புறம் வட்டக் குழையும் வனப்பூட்டுகிறது. அகன்ற தோள்பட்டையில் தோள் மாலை சரிந்து உள்ளது. மேற்கைகளில் இலைக்கருக்கு முகப்புடைய வேலைப்பாடு மிக்க தோள் வளையும் முன் கைகளில் காப்பும் கைவளையும் அழகு சேர்க்கின்றன. கழுத்தில் பொற்சரடு, மணிச்சரம், சரப்பளி சவடி முதலிய அழகிய அணிகள் அணிசெய்கின்றன.

சிவனது மேல் வயிற்றைச் சுற்றிலும் உதரபந்தம் காட்டப்பட்டுள்ளது. இடுப்பில் உடலை ஒட்டிய தோலாடை அழகுசெய்கிறது. கால்களில் சதங்கை கோர்த்த பாதசரம் அணி செய்கிறது.

சிவனது விரிந்த நெற்றியில் மூன்றாவது கண் செங்குத்தாகக் காட்டப்பட்டுள்ளது. சிவனது முகம் ஆன்மீக அழகு தவழ அருள் சுரக்கும் முகமாக அமைந்துள்ளது. வில் போன்ற வளைந்த புருவமும் கோடிட்ட இமையும் நீண்ட அரைக்கண்களும், நீண்ட நாசியும்,

செவ்வாயும், அகன்ற தோள்களும் விரிந்த மார்பும் நிமிர்ந்த மேலுடலும் நேர்த்தியான அங்கங்களும் அளவோடும் அழகோடும் இப்படிமத்தில் படைக்கப்பட்டுள்ளன.

## உமை

இறைவியின் அமர்ந்த கோலப்படிமம் அழகே உருவாக காட்சியளிக்கிறது. அழகே உருவான உமை தன் மெல்லிடையை மெல்ல வலப்புறம் ஒடித்து, உருண்டு திரண்ட குவிந்த தனங்களோடு கழுத்தை முன்புறம் சாய்த்து வீற்றிருக்கும் எழிற்கோலம் இங்கு செப்பு சிலையாக வடிக்கப்பட்டுள்ளது.

உமையின் வலக்கை மலரைப் பிடிக்கும் பாவனையில் முத்திரை காட்ட அவளது இடதுகை இடப்புறம் நீண்டு பீடத்தில் வைத்திருக்கும் நிலையில் உள்ளது.

உமையின் தலையை கரண்ட மகுடம் அளிக்கின்றது. சுருண்ட கேசங்கள் பின் முதுகில் தாழ் சடையாக வீழ்ந்து வனப்பூட்டுகின்றன. நீண்ட முகம், கோடிட்ட புருவம் கீழ் நோக்கும் மலர்ந்த கண்கள், புன்னகை தவழும் இதழ்களைக் கொண்டு உமை திகழ்கின்றாள்.

மகரக்குழைகள் நீள் செவியிலும் தோள்மாலை தோளிலும் எழில் சிந்துகின்றன. கண்டசரம், முத்துவடம், மணிவடம், சரப்பளி, சவடி ஆகிய அணிகள் கழுத்திலும், மார்பிலும் அணிசெய்கின்றன. மெல்லிய புரிநூல் இளம் தனங்களின் நடுவே வீழ்ந்து கீழ் வயிற்றை அடைகிறது. இடையைச் சுற்றிலும் அரைமணி, இடைவார், மேகலை ஆகியன அணிசெய்ய இடையிலிருந்து முழங்கால் வரை ஆடை அழகிய மேனியை ஒட்டி அலைபோல் அமைந்து அழகுசெய்கிறது.

கடக முத்திரை காட்டும் உமையின் எழில் சிந்துகிறது. அவளது அங்கங்களிலும் அசைவிலும்கூட கலை வளம் பளிச்சிடுவதை காண்கிறோம்.

## விநாயகர்

இப்படிமம் பத்ரபீடத்தின் மீதுள்ள தாமரை இருக்கையின் மீது வலது காலை ஊன்றி இடது காலைச் சற்று முன் வைத்து இடையை

வலப்புறமாக ஒடித்து நின்ற கோலத்தில் நான்கு கரங்களுடன் காட்சியளிக்கின்றது.

மேல் வலக்கை கடக முத்திரையில் அங்குசத்தைப் பற்றியும் மேல் இடக்கை பாசக் கயிற்றைச் சற்று சாய்வாக பிடித்துள்ளது. கீழ் வலக்கை ஒடிந்த தந்தத்தையும் கீழ் இடது கை மோதக உருண்டையை ஏந்தி உள்ளது. மானிட உடலும் யானை முகமும் கொண்ட விநாயகரது துதிக்கை மோதகத்தைத் தொடும் வகையில் இடம் புரியாக வளைந்துள்ளது.

விநாயகரின் தலையை கரண்ட மகுடம் அணிசெய்கிறது. யானை முகத்தானின் காதுகள் இலை வடிவாகப் பக்கங்களில் விரிந்து சரிந்துள்ளன.

மேல் நோக்கி நிமிர்ந்த யானை முகமும் பெருத்த மத்தகமும், துதிக்கையும், காதும், நெற்றியும், தூக்கிய புருவமும், விரிந்த கண்களில் கூர்மையான பார்வையும் ஒடிந்த தந்தமும், அளவான மார்பும் பெருத்த தொந்தியும் சதைப் பற்றுள்ள குட்டையான அங்கங்களும் கொண்ட நிலையில் இவ்வுருவம் காணப்படுகிறது.

**சுப்ரமணியர்**

வள்ளி, தெய்வானையோடு சுப்ரமணியர் நான்கு கைகளுடன் தனித்தனியான தாமரை இருக்கையின் மீது நேராக நின்ற கோலத்தில் வடிக்கப்பட்டுள்ளனர். இவரது மேல் கைகளில் சக்திபடையும், வஜ்ஜிராயுதமும் ஏந்தி நிற்க கீழ் கைகள் அபய, வரத முத்திரையில் அருள்பாலிக்கின்றன.

தலையில் கரண்ட மகுடம் அலங்கரிக்கின்றது. சுப்ரமணியரின் நெடிய உருவமைப்பு திரட்சியான உடல்வாகு உயர்ந்த கரண்ட மகுடம், நீள்வட்ட முகம், தூக்கிய புருவம், விரிந்த கண்கள், எடுப்பான மூக்கு, மலர்ந்த திருவாய், திரண்ட தோள்கள் விரிந்த மார்பு, அளவான அங்கங்கள் அணிகள் நிறைந்த மேலுடல் சுப்ரமணியரை அலங்கரிக்கின்றது.

**வள்ளி, தெய்வானை**

சுப்ரமணியரின் வலப்பாகத்தில் வள்ளி வலப்புறமாக இடையை ஒடித்து இரண்டு கைகளுடன் திரிபங்க நின்ற நிலையில் காணப்படுகிறாள். இடக்கை தாமரை மலரையும் வலது கை டோல முத்திரையும் கொண்டு அமைந்துள்ளன.

தலையில் கரண்ட மகுடம். காதுகளில் வட்டமான மலர்குழையும் நெற்றியும் இரத்தின பட்டமும், கழுத்தில் கண்டசரமும், மார்பில் மணிவடமும், தோளில் வாகுமாலையும், கைவளையும், தனங்களுக்கிடையே குஜபந்தமும் மார்பில் புரிநூலும் இடையிலிருந்து கணுக்காலுக்குக் கீழ்வரை இடைக்கச்சையும், இடைக்கச்சையை சுற்றிலும் மேகலை, இடைவாரும் வனப்புடன் அழகு செய்கின்றது.

இதே போன்று இடப்பாகத்தில் தெய்வானையும், வட்டமுகம், கோடிட்ட புருவம், விரிந்த இமை திறந்த கண்கள், கூரிய மூக்கு, வலது கையில் நீலோற்ப மலர் ஏந்தி தனங்களுக்கிடையே குஜபந்தம் இன்றி அழகே உருவாக இவ்வுருவங்கள் அமைந்துள்ளன.

# கோயில் வாகனங்கள்

**காளை வாகனம் :** இக்கோயிலில் உள்ள காளை வாகனங்களில் சிறியது இரண்டும் பெரியது ஒன்றும் ஆக மூன்று வாகனங்கள் உள்ளன. பெரிய காளை வாகனம் மிக செறிவான வேலைப்பாடு கொண்டு வண்ணம் தீட்டப்பட்டுள்ளது. இதன் குறுகிய கொம்பும், பக்கங்களில் விரிந்த கண்ணும் நிமிர்ந்த கழுத்தும் உறுதியான கால்களும் காணத்தக்கன.

முகத்தை பக்கவாட்டில் திருப்பி நிற்கின்றது. இதன் கொம்பு முனைகளில் குப்பி அலங்கரிக்கின்றன. நெற்றியை சுற்றி மஞ்சள் கற்கள் பதிக்கப்பட்டுள்ளன. இதன் கழுத்தில் சங்கிலி ஒன்றும் கழுத்தில் சதங்கையும் அதன் உடலைச் சுற்றி மணிகள் மாலையாக அணிவிக்கப்பட்டு அதன் கழுத்துப்புறம் கிம்புரி முக பதக்கமும் அணி செய்கின்றன. மூக்குத்துளையில் மூக்கு கயிறும், காதுகள் நன்கு விரிந்து இருக்கும் நிலையில் உள்ளது. உடலின் மேல் பட்டு விரிப்பும் அணிவிக்கப்பட்டுள்ளது.

சிறிய காளை வாகனம் மிகவும் அழகான சிறப்பான முறையில் வண்ணம் தீட்டப்பட்டு உருவாக்கப்பட்டுள்ளது. பக்கவாட்டில் திரும்பி பார்க்கும் நிலையில் நின்று உள்ளது. இதன் சிறிய உருண்ட இரண்டு கொம்புகள் உள்ளன. கொம்புகளுக்கு அணிகள் செய்யப்பட்டுள்ளது. கழுத்தில் கயிறும், மணிகளும், கால்களில் காப்பும் அலங்கரிக்கின்றது.

**குதிரை வாகனம் :** இக்கோயிலில் ஒரு குதிரை வாகனம் உள்ளது. இது பின் கால்களை ஊன்றி முன் கால்களை தூக்கி பாய்ந்து செல்லும் புரவியாக திகழ்கிறது. இதன் இயற்கையான மூக்கும் பிலிரும் வாயும் வரிசையான பற்களும் மிக நேர்த்தியாக அமைந்துள்ளன. குதிரையின் கறுப்பு கண்ணும் வலுவான கால்களும் நீண்ட உடல் வாகும் கொண்ட குதிரையின் மீது மேல் விரிப்பு ஒன்று உள்ளது. செந்நிற வண்ணம் தீட்டப்பட்ட இக்குதிரையின் கழுத்தில் கட்டுமாலை, மணிச்சரம், சதங்கைவார், சிறுமணிவார். நீண்ட உடலைச் சுற்றியுள்ள இடைவார், கால்களில் தண்டையும் அலங்கரிக்கின்றன.

**மயில் வாகனம் :** ஸ்ரீசுப்ரமணியரின் வாகனமான மயில் வாகனங்கள் இரண்டு உள்ளன. இதில் பெரியது ஒன்றும் சிறியது ஒன்றும் உள்ளது. பெரிய மயில் வாகனம் மிகப்பழமையானது. இது மிகவும் சேதமடைந்து இதன் உடல்பாகம் முழுவதும் உடைந்து காணப்படுகிறது. மற்றொரு சிறிய மயில் வாகனம் மிகவும் நேர்த்தியான முறையில் உள்ளது. மயில் சற்று தலையை சாய்ந்து நோக்குகிறது. மயிலின் தோகை விரிக்கப்படாமல் சாதாரண நிலையில் உள்ளது. இதன் இரண்டு இறக்கைகளும் பறக்கத் தொடங்கும் நிலையில் உள்ளது. கழுத்தில் மணிமாலை ஒன்று அணிசெய்கின்றது. கூர்மையான மூக்கும், தலைக்கொண்டை உயர்ந்தும் காணப்படுகிறது.

**மூசிக வாகனம் :** விநாயகர் வாகனமாக மூசிக வாகனம் ஒன்று உள்ளது. இது தலையை நன்கு உயர்த்தி நிற்கிறது. கழுத்தைச் சுற்றிப் பட்டையாக கழுத்து வாரும் மேல் உடலில் வேலைப்பாடு மிக்க மேல் விரிப்பும் பக்கங்களில் இடைவாரும் இது சற்று பெருத்த முகமும் பெருத்த உடலும், நீண்ட வாலும் உள்ளது. இங்குள்ள வாகனங்களில் மிகச் சிறியது இதுவேயாகும்.

**சிங்க வாகனம் :** சிங்க வாகனம் பின் கால்கள் இரண்டும் தரையில் ஊன்றி முன் கால்களை தூக்கி இலைக்கருக்குகள் கடித்து மிகவும் ஆக்ரோஷமாய் பாய்ந்து நிற்கும் காட்சியுடன் மிக நேர்த்தியாக உருவாக்கப்பட்டுள்ளது. நன்கு உருண்டு மிகப் பெரிய விழிகளுடன் பற்கள் மிகவும் கூர்மையாகவும் வரிசையாகவும் உள்ளன. நாக்கு சற்று வளைந்து கர்ஜிக்கும் காட்சியில் உள்ளது. கழுத்தில் சலங்கை அணி செய்கிறது. தலை முடி கழுத்து வரை நன்கு வீழ்ந்திருக்கிறது. வால் நன்கு முறுக்குடன் தூக்கி நிற்கின்றது. கால்களில் நகம் கூர்மையாக தண்டம் அணிவிக்கப்பட்டுள்ளது. உடலில் மேல் விரிப்பு ஒன்று நன்கு அலங்கரிக்கப்பட்டுள்ளது.

**பாம்பு வாகனம் :** ஏழு தலைகளுடன் நன்கு படமெடுத்து சுருட்டி இருக்கும் நிலையில் உள்ளது. பாம்பின் அடியில் ஐந்து தலை பாம்புகளும், யானைகளும், சிங்க தலைகளை உடைய அசுரர்களும், தாங்கி நிற்கும் காட்சியாக உள்ளது. மேலும் யானை, கருடவாகனம், அன்னம் ஆகிய வாகனங்கள் மிகவும் பழமையான நிலையில் பயன்பாட்டில் இல்லாமல் உள்ளன.

# கல்வெட்டுச் செய்திகள்

## முன்னுரை

இக்கோயிலில் உள்ள கல்வெட்டுகள் இப்பகுதிகளை ஆட்சி செய்த அரசுகளின் வரலாற்றுச் செய்திகளையும், அன்றைய சமுதாய நிலையையும், பொருளியல் தன்மையையும், நிர்வாகத்தையும் நன்கு அறிய உதவுகின்றன. எனவே இவ்வூர் கல்வெட்டுகளால் வெளிவரும் கல்வெட்டுச் செய்திகளை விரிவாகக் காண்போம்.

## படியெடுத்த கல்வெட்டுகள்

இக்கோயிலில் மொத்தம் இருபத்தாறு(26) கல்வெட்டுகள் உள்ளன. இக்கல்வெட்டுகள் அனைத்தும் படியெடுக்கப்பட்டு மத்திய தொல்லியல் துறையின் தென்னிந்திய கல்வெட்டுகள் தொகுதி 7-இல் வெளிவந்துள்ளன. 1902ஆம் ஆண்டு இந்திய கல்வெட்டு ஆண்டறிக்கையில் 148 முதல் 170 வரை வெளிவந்துள்ளன.

## கல்வெட்டுகள் உள்ள இடங்கள்

வாமனபுரீஸ்வரர் கோயில் கருவறையின் மேற்குப்புற ஜகதியிலும், அர்த்தமண்டப தெற்குப்புற ஜகதியிலும், சுவரிலும், அர்த்தமண்டப வடக்குபுற ஜகதியிலும், முன்மண்டபத் தெற்குப்புற புறச்சுவர் ஜகதியிலும், சுவரிலும் மற்றும் தெற்குப்புற நடராஜர் சன்னதி தேவகோட்டத்தின் இடது மற்றும் வலதுபுறத்திலும், முன்மண்டப நுழைவு வாயிலின் இடதுபுற ஜகதியிலும், வலப்புற ஜகதி மற்றும் முப்பட்டை குமுதத்திலும் அழகுறச் செதுக்கப்பட்டுள்ளன.

கோயில் திருச்சுற்று மாளிகையின் மேற்குப்புறத்தில் ஒரு கல்வெட்டும், கோயில் நுழைவு வாயிலின் இடதுபுறச் சுவரிலும், வலதுபுறச் சுவரிலும், இரண்டாம் திருச்சுற்று மேற்குப்புறச் சுவரிலும் கல்வெட்டுகள் காணப்படுகின்றன.

## மொழி மற்றும் எழுத்து

இக்கோயிலில் அமைந்துள்ள இரு கல்வெட்டுகள் தெலுங்கு மற்றும் கன்னட மொழியாகும். மற்ற இருபத்து நான்கு கல்வெட்டுகளும் தமிழ் எழுத்தில் அமைந்துள்ளன. இவை தமிழ் மொழிக்

கல்வெட்டுகளாகும். இவை அனைத்தும் பிற்கால சோழர்களின் காலத்தில் அதாவது கி.பி. 11-12-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த எழுத்து அமைதியில் அமைந்துள்ளன. தெலுங்கு மற்றும் கன்னட மொழி கல்வெட்டுகள் ஸ்ரீபிரதாப தேவராயர் கால சக ஆண்டு 1357-ஆம் ஆண்டு கல்வெட்டுகளாகும்.

## ஆண்டுக் குறிப்புகள்

இக்கோயிலில் உள்ள தமிழ்க் கல்வெட்டுகள் அனைத்தும் அரசர்களின் ஆட்சியாண்டுகளைக் குறிக்கின்றன. ஆனால் விஜயநகர அரசர் ஸ்ரீபிரதாப தேவராயர் கல்வெட்டுகள் மட்டும் சக ஆண்டில் குறிக்கப்பெற்றுள்ளன. இக்கல்வெட்டுகளில் காலத்தால் முந்தியது குலோத்துங்க சோழனின் 34-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டாகும். மேலும் இம்மன்னனின் 35,42, 49-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுகள் (தெ.இ.கல்.தொ.7 கல் 779, 781, 776, 785) என மொத்தம் நான்கு கல்வெட்டுகள் உள்ளன. முறையே அவை கி.பி. 1104, 1105, 1112, 1119-ஆம் ஆண்டைச் சார்ந்த கல்வெட்டுகளாகும்.

அதையடுத்து விக்கிரம சோழனின் ஆறு கல்வெட்டுகள் உள்ளன. அவரின் ஆட்சியாண்டுகள் முறையே 3,4,6,11,12,13-ஆம் ஆண்டு ஆட்சியாண்டைச் சேர்ந்தது (தெ.கல்.தொ.7 கல் 774, 775, 783, 772, 788, 784) எனவே இவை கி.பி. 1123, 1124, 1126, 1131, 1132, 1133-ஆம் ஆண்டுக் கல்வெட்டுகளாகும். அதன் பிறகு இரண்டாம் குலோத்துங்க சோழனின் 8-ஆவது ஆட்சியாண்டு கல்வெட்டு (தெ.இ.கல்.தொ.7 கல் 780) ஒன்று மட்டும் அமைந்துள்ளது.

மூன்றாம் குலோத்துங்க சோழனின் கால ஏழு கல்வெட்டுகள் உள்ளன. அவை முறையே 3,7,19,21-ஆம் ஆட்சியாண்டைச் சேர்ந்தவையாகும். (தெ.இ.கல்.தொ.7 கல் 782, 791, 786, 796, 797). மூன்றாம் இராஜராஜனின் 5 மற்றும் 15-ஆம் ஆட்சியாண்டு (தெ.இ.கல். தொ.7 கல் 794, 787) கல்வெட்டுகள் இரண்டும், ஸ்ரீவிக்ரம பாண்டியனின் ஆட்சியாண்டு குறிக்கப்படாத (தெ.இ.கல்.தொ.7கல் 793) கல்வெட்டு ஒன்று உள்ளது.

விஜயநகர அரசர் ஸ்ரீபிரதாபதேவராயர் கல்வெட்டுகள் நான்கு உள்ளன. அவற்றில் தலா தெலுங்கு மற்றும் கன்னடமொழி கல்வெட்டாகும். இது சக வருடம் 1357-ஆம் ஆண்டை குறிக்கின்றது. அதாவது கி.பி. 1435 (1357 + 78).

## முற்றுப்பெறாத குறையான கல்வெட்டுகள்

இக்கோயிலில் அமைந்துள்ள கல்வெட்டுகளில் சில கல்வெட்டுகள் முற்றுப் பெறாத கல்வெட்டுகள் உள்ளன. அவை முறையே விக்கிரமசோழனின் 12,13-ஆவது ஆட்சியாண்டு கல்வெட்டுகள், மற்றும் மூன்றாம் ராஜராஜதேவரின் 15-ஆவது ஆட்சியாண்டு கல்வெட்டு ஆகிய இவை மூன்றும் முற்றுப்பெறாதக் கல்வெட்டுகளாக உள்ளன.

## கட்டடத்துக்குள் மறைந்துள்ள கல்வெட்டுகள்

விக்கிரம சோழனின் 11-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டு கருவறை மேற்குப்புற ஜகதியில் தொடங்கி தட்சணாமூர்த்தி தேவகோட்டத்தில் முடிவடைகிறது. இதன் இறுதிபகுதியில் தட்சணாமூர்த்திக்கென்று சிறிய மண்டபம் பிற்காலத்தில் கட்டியதால் இக்கல்வெட்டு மறைந்துள்ளது. அதேபோல் விக்கிரம சோழனின் 3-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டும் மறைந்துள்ளது. இக்கோயில் கல்வெட்டுகள் எதுவும் சிதைந்த நிலையில் இல்லை. ஆனால் இரண்டாம் திருச்சுற்று மேற்குப்புறத்தில் அமைந்துள்ள கல்வெட்டு மட்டும் மழையாலும், காற்றாலும், சிறிது தெளிவாக தெரியாத நிலையில் உள்ளது.

## அரசகுலங்களும், அரசர்களும்

இக்கோயில் கல்வெட்டுகளை ஆய்வு செய்ததின் மூலம் சோழப் பேரரசு, பாண்டியப் பேரரசு, விஜயநகரப் பேரரசரின் காலத்தியக் கல்வெட்டுகள் உள்ளன என்பதை அறிய முடிகிறது. இதில் சோழப் பேரரசின் பிற்கால சோழர்களான முதலாம் குலோத்துங்கன், விக்கிரம சோழன், இரண்டாம் குலோத்துங்கன், மூன்றாம் குலோத்துங்கன், மூன்றாம் ராஜராஜன் ஆகிய மன்னர்களின் ஆட்சி கால கல்வெட்டுகள் அமைந்துள்ளன. பாண்டிய மன்னன் ஸ்ரீவிக்ரம பாண்டியனின் கல்வெட்டு ஒன்று உள்ளது.

அதனை அடுத்து விஜயநகரப் பேரரசின் ஸ்ரீபிராத தேவராயர் கல்வெட்டுகள் உள்ளன. இப்பகுதி சோழ, பாண்டிய, விஜய நகரப் பேரரசர்களின் ஆட்சிக்குட்பட்டு இருந்தது என்பதை இக்கல்வெட்டுகளின் வாயிலாக அறியலாம். இவ்வூர் கல்வெட்டுகளில் வரும் மன்னர்களைப் பற்றி சிறிய முன்னோட்டத்தினை கீழே காண்போம்.

## முதலாம் குலோத்துங்க சோழன் (கி.பி. 1070 - 1120)

இராஜேந்திரன் என்ற இயற்பெயர் பெற்றிருந்த முதற்குலோத்துங்கன் கீழைச் சாளுக்கியர் மரபினன் ஆவான். முதல் இராஜேந்திரனுடைய மகள் வயிற்றுப் பேரனும், கீழைச் சாளுக்கிய மன்னன் இராஜராஜனுடைய மகனுமான முதலாம் குலோத்துங்கன் இளமைப் பருவத்தைத் தஞ்சையிலேயே கழித்தவன். தமிழில் நல்ல ஆர்வம் கொண்டு வாழ்ந்தவன். ஆகவே அவன் தன்னை சோழ அரசு குமாரனாகவே கருதி வாழ்ந்தான். அதிராஜேந்திரனின் மறைவிற்குப் பின்னர், சோழப் பேரரசைக் காக்கத் திறமையுள்ள வாரிசு இல்லையாதலால் தக்க சமயத்தில் சோழப் பேரரசின் மங்காப் புகழைக் காக்க மன்னர் பட்டம் பெற்று ஆட்சி புரியத் தொடங்கினான்.

வீரராஜேந்திரனுடன் நல்லுறவு வைத்துக் கொண்டு அவனுக்கு பல உதவிகளும் புரிந்துள்ளனான். 1067-ல் மேற்கு சாளுக்கியர்களின் ஆக்கிரமிப்பிலிருந்து வேங்கியை காப்பாற்றி, அப்பகுதியில் சோழப் பேரரசை மீண்டும் நிலை நிறுத்த உதவினான். தன் தந்தையின் ஆட்சிக் காலத்தில் வேங்கி நாட்டில் இளவரசுப் பட்டம் பெற்ற போது 'விஷ்ணுவர்த்தனன்' என்ற பெயர் சூட்டப்பெற்றான்.

கி.பி. 1070-ல் அதிராஜேந்திரன் மகப்பேறின்றி இறந்ததினால், இராஜேந்திரன் (விஷ்ணுவர்த்தனன்) கங்கைகொண்ட சோழபுரத்திற்கு தன்னுடைய பெரும்படையுடன் வந்து (இராசகேசரி) குலோத்துங்க சோழன் என்ற பெயருடன் முடிசூட்டிக் கொண்டு சோழப் பேரரசையும், வேங்கி நாட்டையும் ஆளத் தொடங்கினான். சோழரின் பரம்பரை எதிரியான மேலைச் சாளுக்கியரும் ஏதும் செய்ய இயலவில்லை. இதனால் இவனது ஐம்பது ஆண்டு கால ஆட்சியில் அமைதி குடிகொண்டிருந்தது. மேலைச் சாளுக்கியருடன் நடைபெற்ற போருக்குப் பின் தென்பகுதியிலுள்ள பாண்டியரைத் தாக்க ஐந்து ஆண்டு காலம் தன்னைத் தயார் செய்து கொண்ட குலோத்துங்கன் பாண்டியர் ஐவரையும் வென்று அவர்களை புறமுதுகிட்டு ஓடச் செய்தான்.

கலிங்க நாட்டின் மீது படையெடுத்ததைப் பற்றி குலோத்துங்கனின் 26-ம் ஆண்டு கல்வெட்டும், 42-ம் ஆண்டு கல்வெட்டும் கூறுகின்றன. ஆகவே அவனது காலத்தில் இருமுறை கலிங்கப்படையெடுப்புகள் நடைபெற்றன என்பதை அறியலாம்.

கி.பி. 1118-ல் விக்கிரம சோழனை வேங்கி நாட்டிலிருந்து அழைத்து வந்து கங்கை கொண்ட சோழபுரத்தில் அவனுக்கு இளவரசு பட்டம் சூட்டினான். சோழப் பேரரசிற்கும், சீனாவிற்குமிடையே குலோத்துங்கள் காலத்தில் நெருங்கிய வணிக உறவு ஏற்பட்டது என்பதனை சீனாவில் கிடைக்கும் குறிப்புக்களைக் கொண்டு அறியலாம். கி.பி. 1077-ல் எழுபத்திரண்டு பேர்களைக் கொண்ட குழுவை சோணாட்டிலிருந்து சீனாவிற்கு அனுப்பியதாக சீனாவில் காணப்படும் குறிப்புக்கள் மூலம் தெரிகின்றன.

கி.பி.1090-ல் கடாரத்து மன்னன் வேண்டி கொண்டதிற்கிணங்க நாகப்பட்டினத்திலிருந்த இராஜராஜப் பெரும்பள்ளி, இராஜேந்திர சோழப் பெரும்பள்ளி ஆகிய இரண்டு புத்த விகாரங்களுக்கும் இறையிலியாக சில ஊர்களை அளித்தான். தற்பொழுது கம்போடியா என வழங்கப்படும் அந்நாட்டு மன்னன் குலோத்துங்கனுக்கு காட்சிப் பொருளாகக் காட்டிய கல்லை அவன் பெற்று வந்து தில்லைச் சிற்றம்பலத்தில் வைத்தான் என்று கல்வெட்டு கூறுகின்றது. கம்போச நாட்டு மன்னனாக அப்பொழுது ஆட்சி புரிந்தவன் ஹர்ஷவர்தனாவான்.

கன்னோசி மன்னனின் வடமொழிக் கல்வெட்டொன்று குலோத்துங்கனின் 41-ஆம் ஆண்டில் கங்கை கொண்ட சோழபுரத்தில் வெட்டப்பட்டது. அந்நாட்டு மன்னன் இங்கு வந்தபோது நிவந்தமாக அளித்த செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது. நாட்டின் மேம்பாட்டைக் கருதி நாட்டில் நிலவிய சுங்க வரியை நீக்கினான். அதனால் மக்கள் மிக மனம் மகிழ்ந்து 'சுங்கந்தவிர்த்த சோழன்' என்று அழைத்தனர். 'சுங்கந் தவிர்த்திருள் நீக்கி உலகாண்ட ஸ்ரீகுலோத்துங்க சோழ தேவர்' என்று கல்வெட்டுகளில் குறிக்கப்படுகின்றான்.

இவனது ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற மற்றொரு முக்கிய செயல் நிலங்கள் அனைத்தும் உள்ளவாறு அளந்து நிலவரியை முறைப்படுத்தியதாகும். மேலும் இவனது 16-ம் ஆட்சியாண்டில் அளக்க ஆரம்பித்து இரண்டாண்டுகளில் அளவை முடிக்கப்பட்டது.

சைவ சமயநெறிமுறை பிறமுறை பிறழாது சிவ பெருமானிடத்தில் அதிக ஈடுபாடு கொண்டு வாழ்ந்தான். அவனுடைய சைவ ஈடுபாடு பற்றியே 'திருநீற்றுச்சோழன்' என்று போற்றப்படுகின்றான். சூரிய வழிபாட்டிற்காக இவனே முதல் முதலாக தமிழ்நாட்டில் சூரியனார் கோயிலை கட்டுவித்தான்.

சப்தம விஷ்ணுவர்த்தனன், இராஜேந்திரன், அபயன், சயதரன், ஜெயதங்கன், கரிகாலன், உலகுய்ய வந்தான், விருதராஜ பயங்கரன், இராஜ நாராயணன், மனுகுல தீபன், உபயகுலோத்துமன் போன்ற வேறு சிறப்புப் பெயர்களும் கொண்டு ஆட்சி புரிந்தான். சோழர்களில் 'திரிபுவன சக்கரவர்த்தி' என்ற பட்டம் புனைந்து ஆட்சி செய்த முதல் சோழ மன்னன் இவனேயாகும்.

## விக்கிரம சோழன் (கி.பி. 1118 - 35)

வேங்கி நாட்டு இளவலாக கி.பி. 1089 முதல் கி.பி. 1118 வரை இருந்த விக்கிரம சோழன் குலோத்துங்கனின் பாராட்டுதலைப் பெற்ற புதல்வனாவான். கி.பி. 1118-ம் ஆண்டு சோழ நாட்டின் இளவரசாக முடிசூட்டப்பட்டு 'பரகேசரி' என்ற பட்டம் புனையப் பெற்றான். 'பூமாலை மிடைந்து பொன் மாலை திகழ்' என்றும், 'பூமாது புணரப் புவிமாது வளர' என்றும் இவனது மெய்க்கீர்த்திகள் ஆரம்பமாகின்றன.

கங்கை கொண்ட சோழபுரம் தலைநகராகவும், பழையாறை ((முடி கொண்ட சோழபுரம்) இரண்டாவது தலைநகராவும் இருந்தது. இவனது சமயத் தொண்டு மிகவும் போற்றுதற்குரியது. தன்னுடைய 10-ஆம் ஆட்சியாண்டில் தில்லைச் சிற்றம்பலவனுக்கு பல அரிய திருப்பணிகள் செய்வித்தான். அத்திருப்பணிகள் கி.பி. 1128-ல் முடிவுற்றன. தில்லைச் சிற்றம்பலத்தைச் சூழ்ந்த திருச்சுற்று மாளிகை, கோபுரவாயில், கூடசாலை, பலிபீடம் போன்றவற்றிற்கு பொன்வேய்ந்தான் மற்றும் இறைவன் எழுந்தருளியிருக்கும் திருத்தேரையும் பொன் வேய்ந்து அதற்கு முத்து வடங்கள் செய்து அழகுபடுத்தினான். தில்லைச் சிற்றம்பலத்தைச் சூழ்ந்துள்ள முதல் திருச்சுற்று மாளிகை விக்கிரம சோழன் திருமாளிகை' என்று இவனது பெயரால் அழைக்கப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

இவன் ஒட்டக்கூத்தரை தன் அவைக்களப் புலவராகக் கொண்டிருந்தான். ஒட்டக்கூத்தர் அவனைப்புகழ்ந்து 'விக்கிரம சோழன் உலா' பாடியுள்ளார்.

## இரண்டாம் குலோத்துங்கன் (கி.பி. 1130 - 1350)

விக்கிரம சோழனைப் பின்பற்றி அவனது மகன் இரண்டாம் குலோத்துங்கன் 'இராசகேசரி' பட்டம் புனைந்து அரியணை ஏறினான். 'பூமன்னுபதுமம், 'பூமருவிய புவியேழும்', 'பூமேவு வளர' போன்று தொடங்கும் மெய்க்கீர்த்திகள் இவனது புகழ்பாடுவதாகும்.

"தில்லை திருநகர் சிறப்புடைத்தாகத் திருமுடி சூடிய ஸ்ரீகுலோத்துங்க சோழ தேவர்" என்று கூறுவதால் தில்லை நகர் பல சிறப்புக்களைப் பெற்று பெருநகராக ஆக்கப்பட்டது. தில்லைக் கோயிலும் பல வகைகளில் பெருக்கப்பட்டு சிறப்புடன் சீர்திருத்தப்பட்டது என்பதை தக்கயாகப்பரணி. குலோத்துங்க சோழனுலா ஆகியவற்றின் மூலம் அறியலாம். தில்லைநகருக்கு நாற்பெரும் வீதிகள் அமைத்தான். சிற்றம்பலத்தை அலங்கரித்தான். பேரம்பலத்தையும், உட்கோபுரத்தையும், திருச்சுற்று மாளிகைகயையும் பொன்மயமாக்கினான். மேலும் எழுநிலைக் கோபுரங்கள் அமைத்து, சிவகாமிக் கோட்டம் உருவாக்கினான். திருக்குளம் ஒன்றையும் வெட்டுவித்தான்.

விக்கிரம சோழன் காலத்தில் வெளிநாட்டினரின் அச்சம் அகற்றப்பட்டதால், குலோத்துங்கன் காலத்தில் எவ்வித பூசலும் படையெடுப்பும் காணப்படவில்லை. இதனால் நாட்டில் அமைதி நிலவியது. நிர்வாகம் முறைப்படி காணப்பட்டது. கல்வி வளர்ச்சி அதிக ஊக்கம் பெற்றது. இவனது அவைக்களப் புலவராக ஒட்டக்கூத்தர் விளங்கினார். 'நித்திய கீதப்பிரமோகன்', 'ஞானகெம்பீரன்', 'துரக்வித்யாவிநோதன்' என்று இவனைக் குறிப்பிடும் பெயர்கள் இவனது கல்விப்புலமையை காட்டுகின்றதன்றோ!

## மூன்றாம் குலோத்துங்கன் (கி.பி. 1173 - 1216)

இரண்டாம் இராஜாதிராஜனை அடுத்து அவனது தம்பியான மூன்றாம் குலோத்துங்கன் பரகேசரி பட்டம் புனைந்து ஆட்சி புரியத் தொடங்கினான். சுமார் 40 ஆண்டு காலம் ஆட்சி புரிந்த மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் சோழப் பேரரசு நலிவடைவதற்குரிய அறிகுறிகள் தென்பட்டன. 'புயல் வாய்த்து வளம் பெறுக'. 'மலர் மன்னு பொழிலேழும்'. 'பூமருவிய திசை முகத்தோன்' போன்ற மெய்க்கீர்த்திகளைக் கொண்ட தொடர்கள் இவனை சார்ந்தவைகளாகும்.

**பாண்டிய நாட்டுப் போர் :** இவனது காலத்தில் குலசேகர பாண்டியனின் புதல்வன் விக்கிரம பாண்டியன் சோழ நாட்டில் அடைக்கலம் புகுந்தான். மேலும் சோழன் அளித்த நன்றியை மறந்து வீரபாண்டியன் சிங்கள நாட்டினருடன் சேர்ந்து கொண்டான். உடனடியாக வீரபாண்டியன் மீது போர் தொடுத்து பாண்டிய நாட்டைக் கைப்பற்றி விக்கிரம பாண்டியனை மன்னனாக்கினான்.

பதவியிழந்த வீர பாண்டியன் சேர நாடு சென்று உதவி பெற்றுதன் சிறிய படைகளை ஒன்று சேர்த்து சோழப்படைகளை எதிர்த்தான். ஆனால் நெட்டூர் என்ற இடத்தில் நடைபெற்றப் போரில் சோழப்படைகள் வெற்றி பெற்றன. 'மதுரையும் பாண்டியன் முடித்தலையும் கொண்டருளிய' என்று மூன்றாம் குலோத்துங்கன் குறிப்பிடப்படுகின்றான்.

**ஈழ நாட்டுப் போர் :** வீர பாண்டியனோடு குலோத்துங்கன் போர் புரிந்தபோது, சிங்கள மன்னன் பராக்கிரமபாகு பாண்டியனுக்கு உதவியதை எதிர்த்து, அவன் மீது போர் தொடுத்து வெற்றி பெற்றான். இப்போர் கி.பி.1188-ல் நடைபெற்றிருக்க வேண்டும். இவனது பத்தொன்பதாம் ஆண்டுக் கல்வெட்டின் மூலம் குலோத்துங்கன் வடபுலத்து மன்னர்களான தெலுங்குச் சோழர், பொத்தப்பிச் சோழர் முதலியோரை வென்று காஞ்சியில் வெற்றி முரசோடு அழைத்தான் என அறிகின்றோம்.

## மூன்றாம் இராஜராஜன் (கி.பி. 1216 - 1256)

கி.பி. 1216-ல் மூன்றாம் குலோத்துங்க சோழனின் புதல்வனான மூன்றாம் இராஜராஜன் இளவரசுப் பட்டம் சூட்டப்பெற்றான். 'இராசகேசரி' என்ற பட்டம் பெற்ற இவனைப் பற்றி 'சீர்மன்னி இரு நான்கு திசை விளங்கும்' என்றும், 'சீர்மன்னு மலர் மகளும் சிறந்த தனிநிலைச் செல்வியும்' என்ற மெய்க்கீர்த்திகள் காணப்படுகின்றன. இவனது ஆட்சிக்காலத்தில் சோழப் பேரரசு மிகவும் வலிமையிழந்து காணப்பட்டது. இதற்கு முக்கியக் காரணங்களாவன: அரசியல் அதிகாரிகளும், குறுநில மன்னர்களும் மத்தியிலுள்ள மன்னனின் ஆட்சிக்குக் கட்டுப்படாமல் கலகம் விளைவித்தவையே. வளர்ச்சி பெற்றுவரும் பாண்டியர்கள் தெற்கேயும், ஹொய்சாளர்கள், காகத்தியர்கள் போன்றோர் வடக்கேயும் மிகவும் திறமையுடன் செயல்பட்டு வலிமைமிக்கப் பேரரசை நிறுவி

பொலிவிழந்து வரும் சோழப் பேரரசின் வீழ்ச்சிக்கு மிகவும் அக்கரைக் காட்டினர். கி.பி. 1219-ஆம் ஆண்டு மாறவர்மன் சுந்தர பாண்டியன் சோழ நாட்டின் மீது ஒரு திக் விஜயத்தை மேற்கொண்டான்.

முதலாம் மாறவர்மன் சுந்தர பாண்டியனுடையக் கல்வெட்டொன்று கீழ்கண்டவாறு படையெடுப்பை பற்றிக் கூறுகின்றது. தஞ்சை, உறைந்தை (உறையூர்) ஆகிய சோழ நாட்டின் தலைநகரங்களைத் தரைமட்டமாக்கித் தீ வைத்துக் கொளுத்தினான். அந்நகரங்களிலிருந்த கோபுரங்கள், மண்டபங்கள், அரண்மனைகள் மற்றும் பல கட்டிடங்கள் ஆகியவற்றை இடித்து தரைமட்டமாக்கி, சோழர்கள் மீதிருந்த வெறுப்பைத் தனித்துக் கொண்டதோடு, சோழ வேந்தனையும் அஞ்சி காட்டிற்கு ஓடும்படிச் செய்தான். மேலும் பொன் முடியை அணிந்து கொண்டு பாணர்களுக்கு பல தானங்கள் செய்து தன்னைப் பெருவீரனாக ஏற்கும்படி வீராபிஷேகம் செய்து கொண்டான். பின்னர் தில்லைச் சிற்றம்பலவனை வணங்கி பொன்னமராவதிக்குச் சென்று அங்கு அலங்கரிக்கப்பட்ட அரண்மனையில் தங்கினான். அப்போது அஞ்சி ஓடிய சோழ வேந்தன் தன் மனைவியுடன் அவனை வணங்கி தன் மகனை அவனுக்கு அன்பளிப்பாகக் கொடுத்தான். பின்னர் அவனுக்கு சோழப் பேரரசை மீண்டும் பாண்டியன் அளித்துவிட்டு கொங்குநாடு நோக்கிப் படையெடுத்து வெற்றி கொண்டான். இவ்வாறு சோழப் பேரரசினை வீழ்த்திய பாண்டியன் மீண்டும் சோழருக்கே அளிப்பதற்குக் காரணம் ஹொய்சல மன்னனான இரண்டாம் வல்லாளனும் அவனது மகனான வீர நரசிம்மனும், சோழனுக்கு உதவியாக வந்தமையேயாகும். இதனை 'சோழ ரட்சகன்' 'பாண்டிய கஜகேசரி' என்ற பட்டங்களை அவர்கள் புனைந்து கொண்டதன் மூலம் அறிகிறோம்.

சில ஆண்டுகள் கழித்து பாண்டியருக்கு திறை கொடுக்க இராஜராஜன் மறுத்தான். மீண்டும் பாண்டியன் 1231-ஆம் ஆண்டு சோழ நாட்டின் மீது படையெடுத்து இராஜராஜனை புறமுதுகிட வைத்தான். கத்திய கர்ணாமிர்தம் என்ற கன்னட நூல், "தோல்வியடைந்த சோழன் ஹொய்சள மன்னனின் உதவியைப் பெறும் பொருட்டு வடக்கு நோக்கிச் செல்லும் பொழுது காடவர் குல மன்னனாக கோப்பெருஞ்சிங்கன் அவனை சிறை பிடித்து சேந்தமங்கலம் என்ற இடத்தில் சிறையிலிட்டான்.

இதனையறிந்த வீர நரசிம்மன் ஹொய்சள நாட்டினின்று பெரும்படையுடன் வந்து சோழனை மீட்டதோடு, அவனுடைய நாட்டிற்குப் பெரும் சேதம் விளைவித்தான். இது சோழனுடைய 16-ஆம் ஆண்டில் நடைபெற்றது. அதே சமயத்தில் தன்னுடைய படைகளைக் கொண்டு ஹொய்சள வேந்தன் பாண்டியனையும் தோற்கடித்து, சோழ நாட்டுப் பகுதிகளையும் மீட்டு இராஜராஜனுக்கே அளித்தான்.

## இரண்டாம் மாறவர்மன் விக்கிரமன் (கி.பி. 1250-1276)

இரண்டாம் மாறவர்மன் விக்கிரம பாண்டியன் 1250-இல் முடிசூடினான். இவனது வடமொழி மெய்க்கீர்த்தி 'சமஸ்தபுவனேக வீர' என்று கிரந்தத்தில் எழுதப்பட்டு இருக்கும். திருமாணிகுழி கல்வெட்டிலும் இம்மெய்க்கீர்த்தி இடம் பெற்றுள்ளது. இதில் சரித்திர நிகழ்ச்சிகள் சிலேடையாக சொல்லப்பட்டுள்ளன. தமிழ் மெய்க்கீர்த்தி 'திருமலர்மாது' என்று துடங்கும்.

அரகண்டநல்லூரில் கிடைக்கும் கல்வெட்டு யாண்டு இரண்டுக்கு உரியது. விக்கிரமன் திக்விஜயத்திற்குக் கிளம்பினான் என்றும் சொல்லப்பட்டுள்ளது. திருநாமநல்லூர் கல்வெட்டு யாண்டு இரண்டுக்கு உரியது. 'சமஜ்தபுவனேகவீர' என்னும் மெய்க்கீர்த்தி உள்ளது. காஞ்சீபுரத்தைப் பிடித்து காகதீய மன்னன் கணபதியை தோற்கடித்தான் என்று சொல்லப்பட்டுள்ளது.

திருநெல்வேலி மாவட்டம் குற்றாலம், ஆத்தூர், மதுரை, அழகர் கோவில் ஆகிய ஊர்களில் விக்கிரமனின் 5-ஆம் ஆண்டுக் கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. இவைகளில் 'திருமலர்மாது' என்னும் மெய்க்கீர்த்தி உள்ளது. இக்கல்வெட்டுகளில் விக்கிரமன் கொங்குச் சோழனை மைத்துனன் என்கிறான். இரண்டாம் மாறவர்மன் சுந்தரனும் விக்கிரம சோழனை மைத்துனன் என்கிறான். சுந்தரனும், விக்கிரம பாண்டியனும் சகோதரர்கள் என்பதும் இவர்களது அத்தை மகனே விக்கிரம சோழன் என்பதையும் அறியலாம்.

புவனேகவீரனாகிய விக்கிரமன் சிதம்பரம் சிவகாமி அன்னையின் கோயிலுக்கு பொன் வேய்ந்தான் என்று சிதம்பரம் கல்வெட்டுக் கூறுகிறது.

## கல்வெட்டில் மாணிகுழி

இராஜராஜ சோழன் தனது ஆட்சிக்குட்பட்ட பகுதிகளை 9 வளநாடுகளாகப் பிரித்து ஆண்டு வந்தான். இவ்வூர் கல்வெட்டுகளின் மூலம் சோழ மன்னர்களான முதலாம் குலோத்துங்க சோழன், விக்கிரம சோழன், இரண்டாம் குலோத்துங்க சோழன், மூன்றாம் குலோத்துங்க சோழன், மூன்றாம் இராசராச சோழன், பாண்டிய மன்னன் விக்ரம பாண்டியன், விஜயநகர அரசர் பிரிதாப தேவ மகரராயர் ஆகியோரது ஆட்சிக்குட்பட்டு இவ்வூர் இருந்துள்ளது.

முதல் குலோத்துங்க சோழன் காலத்தில் இவ்வூர் 'விருதராச பயங்கர வளநாடு மேற்கா நாட்டு திருமாணிகுழி' என்றும் 'மேற்கா நாட்டு உதவித் திருமாணிக்குழி' என்றும் அழைக்கப்பட்டுள்ளது. இவ்வூர் விக்கிரம சோழனின் 3-ஆம் ஆட்சியாண்டில் 'விருதராஜ பயங்கர வளநாட்டு மேற்காநாட்டு உதவி திருமாணிகுழி' என்றும் 4-ஆம் ஆட்சியாண்டில் 'விருதராஜ பயங்கர வளநாட்டு மேற்கா நாட்டு விக்கிரம சோழநல்லூர்' என்றும் 11-ஆம் ஆட்சியாண்டு முதல் 'ராஜராஜ வளநாட்டு மேற்காநாட்டு உதவித்திருமாணிகுழி, என்றும் அழைக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் குலோத்துங்க சோழன் காலத்தில் இவ்வூர் 'ஜயங்கொண்ட சோழ வளநாட்டு மேற்காநாட்டு உதவி திருமாணிகுழி' என்று அழைத்துள்ளனர்.

மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்தில் இவ்வூர் 'ராஜராஜ வளநாட்டு மேற்காநாட்டு உதவி திருமாணிகுழி' என்று அழைக்கப்பட்டது. பின்னர் 21-ஆம் ஆட்சியாண்டில் 'விருதுராஜ பயங்கர வளநாட்டு மேற்கா நாட்டு உதவி திருமாணிகுழி' என்று அழைக்கப்பட்டது.

மூன்றாம் இராஜராஜன் காலத்தில் இத்திருமாணிகுழி 'ராஜராஜ வளநாட்டு மேற்கு நாட்டு உதவித் திருமாணிகுழி' என்று அழைக்கப்பட்டது.

பாண்டிய மன்னன் ஸ்ரீ விக்ரமபாண்டியன் காலத்தில் இப்பகுதி 'நடுவில் மண்டலத்து திருமாணிகுழி என்று அழைக்கப்பட்டது.

விஜயநகரப் பேரரசின் அரசர் பிரதாப தேவராயர் காலத்தில் இவ்வூர் 'திருமாணிகுழி' என்று அழைக்கப்பட்டுள்ளது.

இக்கல்வெட்டுகளின் வாயிலாக இப்பகுதி விருதராஜபயங்கர வளநாடு, ராஜராஜவளநாடு, ஜயங்கொண்ட சோழவளநாடு, ராஜராஜ வளநாடு, விருதராஜ பயங்கர வளநாடு, நடுவில் மண்டலம் என்று பல்வேறு வளநாட்டு பிரிவின் கீழ் இருந்துள்ளது. ஆனால் இப்பகுதி 'மேற்கா நாடு' என்ற நிர்வாகப் பிரிவின் கீழே இருந்துள்ளது.

இவ்வூர் 'திருமாணிகுழி' என்றும் 'உதவி திருமாணிக்குழி' என்றும் விக்கிரம சோழனின் 3-ஆம் ஆட்சியாண்டு முதல் சில ஆண்டுகள் 'விக்கிரம சோழநல்லூர்' என்று அழைக்கப்பட்டுள்ளது. இவ்வூர் கல்வெட்டுகள் மட்டுமின்றி தேவாரத்திலும் இவ்வூர் 'உதவி திருமாணிகுழி' என்றே அழைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

**கல்வெட்டில் குறிக்கப்படும் பிற ஊர்களும் நாட்டுப் பிரிவுகளும் :** இக்கோயில் கல்வெட்டுகளில் காணப்படும் ஊர்களும் அவற்றின் நாட்டுப் பிரிவுகளும் அறிவதன் மூலம் இவ்வூரின் அருகிலுள்ள ஊர்களும், நாடுகளும் தற்போது அதனுடைய பகுதிகளையும் காண்பதற்கு இயலும்.

இராஜராஜ வளநாட்டு மேற்கா நாட்டு வானவன் மாதேவி புர நகரம், கங்கை கொண்ட சோழ வளநாட்டு பட்டாம்பாக்கை நாட்டு, சோழ குலவல்லி நல்லூர், வெய்சாலபாடி நாட்டு திருவயிந்திபுரம், வெய்சாலபாடி நாட்டு கழுக்கலாம்பாக்கம், வெய்சாலபாடி நாட்டு திருவீரட்டானம், விருதாஜபயங்கர வளநாட்டு மேற்கா நாட்டு வானவன்மாதேவிபுரம், இராசராச வளநாட்டு மேற்கா நாட்டு தியாகவல்லி சருப்பேதி மங்கலம், இராசராச வளநாட்டு மேற்கா நாட்டு பாலையூரான ராஜநாராயனசருபேதி மங்கலம், வெசாலிபாடி நாட்டு ஜயங்கொண்ட சோழச் சதுபேதி மங்கலம் மற்றும் ஆலைப்பாக்கம், நெட்டைப்பாக்கம், காரைக்காடு, வில்லியநல்லூர், மணற்குடி என்ற ஊர்களின் பெயர்களும் இக்கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

இதில் குறிப்பிட்டுள்ள ஊர்கள் தற்போது ஆலப்பாக்கம், நெட்டப்பாக்கம், காரைக்காடு, வில்லியனூர், பட்டம்பாக்கம், கமுக்கலாம்பாக்கம், வானமாதேவி, திருவயிந்திரம் என அழைக்கப் படுகின்றன. 'வானவன் மாதேவி நகரம்' என்று குறிப்பிடும் ஊர். அப்போது வணிகர்கள் வாழ்ந்த பகுதியாக இருந்ததால் அதனை 'வானவன் மாதேவிபுரம்' என்று அழைத்தனர். தற்போது இவ்வூர் 'வானமாதேவி' என்று சிற்றூராக இவ்வூருக்கு அருகில் உள்ளது.

பிராமணர்களின் ஊரான தியாகவல்லி சருப்பேதி மங்கலம், பாலையூர் ராஜநாராயண சதுப்பேதி மங்கலம் எனும் ஊர்கள் பிராமணர்களுக்கு தானமாக வழங்கப்பட்ட ஊர்களாகும். தற்போது இவ்வூர்கள் 'தியாகவல்லி' என்றும், 'பாலூர்' என்றும் அழைக்கப் படுகின்றன. மற்ற ஊர்கள் அனைத்தும் விவசாய குடிகளைச் சார்ந்த விவசாயிகளின் ஊராக இருந்தன.

## கல்வெட்டில் இறைவன் பெயர்

இக்கோயில் கல்வெட்டுகள் மூலம் அப்போதைய இக்கோயிலின் இறைவன் பெயர் எப்படி அழைக்கப்பட்டன என்பதை அறியலாம். முதலாம் குலோத்துங்க சோழர் காலக் கல்வெட்டுகளில் இக்கோயில் இறைவன் 'திருமாணிகுழி மஹாதேவர்', 'உதவி திருமாணிகுழி மஹாதேவர்' என்று அழைக்கப்பட்டார்.

விக்கிரம சோழர் காலக் கல்வெட்டுகளில் இவ்விறைவனது பெயர் 'உதவி திருமாணிகுழி மஹாதேவர்' என்றும் 'உதவி திருமாணிக்குழி ஆளுடையார்' என்று அழைக்கப்படுகிறது. இரண்டாம் குலோத்துங்க சோழர் காலக் கல்வெட்டுகளில் 'உதவி திருமாணிகுழி உடைய நாயனார்' என்று இறைவனை குறிப்பிட்டுள்ளனர்.

மூன்றாம் குலோத்துங்க சோழர் காலக் கல்வெட்டுகளில் 'உதவி திருமாணிகுழி ஆளுடையார்', 'திருமாணிகுழி ஆளுடைய நாயனார்', 'உதவி திருமாணிக்குழி உடையார்' என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. மூன்றாம் ராஜராஜ சோழர் கால கல்வெட்டுகளில் 'திருமாணிகுழி ஆளுடையார்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ஸ்ரீபிராதாப தேவராயர் கல்வெட்டுகளில் 'ஊர் செறி உதவி நாயகர்' என்றும் 'உதவி ஆளுடைய நாயனார்' என்றும் இறைவன் அழைக்கபட்டுள்ளார்.

எனவே இக்கோயில் இறைவன் திருமாணிகுழி மஹாதேவர், உதவி திருமாணிகுழி மஹாதேவர், உதவி திருமாணிகுழி ஆளுடையார், திருமாணிகுழி ஆளுடைய நாயனார், ஊர் செறி உதவி நாயகர் என்று பல்வேறு பெயர்களில் இக்கோயில் இறைவனை

அழைத்துள்ளதை கல்வெட்டுகள் வாயிலாக அறியமுடிகிறது. கி.பி.7-ஆம் நூற்றாண்டு திருஞானசம்பந்த தேவாரப் பாடல்களும் பிற்கால சோழர் கல்வெட்டுகள் தொடங்கி விஜயநகர காலம் வரைக்கும் இவ்வூர் இறைவன் 'திருமாணிகுழி ஆளுடையார்' என ஊர் பெயர் சார்ந்தே இவ்விறைவன் அழைக்கப்பட்டுள்ளார். மேலும் வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் 'மாணிகுழி வாழ் மகத்துவமே' என்று இவ்வூர் இறைவனை போற்றுகிறார். ஆனால் தற்போது அழைக்கப்படும் 'வாமனபுரீசுவரர்' எனும் பெயர் அண்மைக்காலத்திலே பெயர் மாற்றம் பெற்றுள்ளது எனக் கூறலாம்.

## கல்வெட்டில் பிற தெய்வங்கள்

இக்கோயில் கல்வெட்டுகளில் கருவறை இறைவன் பெயர் மட்டுமல்லாமல் இக்கோயிலிலுள்ள மற்ற தெய்வங்கள் சிலவற்றின் பெயர்களும் இடம் பெற்றுள்ளன. இத்தெய்வங்களுக்கு வழிபாடு நடைபெற்றதையும் குறிப்பிடப்பட்டுள்ளன.

இக்கோயில் முதலாம் குலோத்துங்கனின் 35-ஆவது ஆட்சியாண்டு (கி.பி.1105) கல்வெட்டு ஒன்றில் சூரிய தேவர்க்கு ஒரு சந்திக்கு திருவமுது இரு நாழி அரிசியும் ஒரு சந்திவிளக்கும், சேத்ர பாலற்கு (பைரவர்) ஒரு சந்தி விளக்கும் வைத்துள்ளது பற்றி கூறுவதன் மூலம் சூரியன் மற்றும் பைரவர் வழிபாடும் அப்போது சிறப்புற நடந்துள்ளது. தற்போதுள்ள சூரியன், பைரவர் சிற்பங்கள் சோழர் கால அமைதியுடன் காணப்படுவதால் கல்வெட்டில் குறிப்பிட்டுள்ள சூரியன், பைரவர் சிற்பங்கள் இதுவே. எனவே இச்சிற்பங்களின் காலம் கி.பி.12-ஆம் நூற்றாண்டு என்று வரையறை செய்யலாம்.

மேலும் இக்கோயிலில் "திருக்காமக் கோட்டத்து பெரிய நாச்சியார்க்கு" ஒரு சந்தி விளக்கு வைக்கப்பட்டது என்று மூன்றாம் இராஜராஜனின் 5-ஆவது ஆட்சியாண்டு (கி.பி. 1221) கல்வெட்டின் மூலம் அறிவதால் தற்போதுள்ள அம்மன் கோயில் பிற்கால சோழர் காலத்தியது என உறுதியாக கூறலாம்.

## கல்வெட்டில் குறிக்கப்படும் அதிகாரிகள்

'திருமாளிகைக்கூறு இலக்கண தண்ணாயக்க வாணாதராயர்' திருமாளிகைக்கூறு என்பது கோயில் திருச்சுற்றில் அமைக்கப்படும்

பரிவார தெய்வங்களுக்குரிய அர்ச்சகர்கட்கு கோயில் நிர்வாகம் பங்கை பிரித்து அளிக்கும் செயலாகும். இதில் இலக்கண தண்ணாயக்க வாணதராயர் என்பவர் இதன் அதிகாரியாகச் செயல்பட்டிருக்கிறார் என்பதை அறிய முடிகிறது.

கோயிலுக்கு திருநாமத்துக்காணியாக அரசர் கொடுத்த நிலத்தை ஓலையில் எழுதி அதனை கையெழுத்திட்ட அதிகாரிகளின் பெயர்கள் "தொண்டைமான்", "வாணாதராயன்" மற்றும் "முனையதரையன்" என்று கல்வெட்டில் குறிப்பு காணப்படுகிறது. இவ்வதிகாரிகள் இப்பகுதி நிர்வாகப் பிரிவுகளில் அதிகாரிகளாக செயல்பட்டுள்ளனர் என்பதை அறியமுடிகிறது.

இக்கோயில் உதவி திருமாணிகுழி ஆளுடையார்க்கு "சாமந்தன் அதியமான் சாத்தின திருமேகலை எடைபொன் முப்பதின் கழஞ்சு" என்று கல்வெட்டில் குறிப்புள்ளது. இதில் குறிப்பிட்டுள்ள "சாமந்தன் அதியமான்" என்பவர் அதிகாரி. மற்றும் 'திருநிற்றுச்சோழ மூவேந்தவேளான்', 'கரிகால சோழமூவேந்த வேளான்', 'பல்லவராயன்', 'மாதவராயன்', 'பழந்தியராயன' போன்ற அதிகாரிகளின் பெயர்களும் இடம்பெற்றுள்ளன.

## கொடைகளும், கொடையாளர்களும்

இக்கோயில் கல்வெட்டு ஒன்றில் கழுக்களாம்பாக்கம் முடையானின் நூறு ஆட்டை வீராட்டானமுடையானார்க்குக் கொடுத்து பெற்ற ஐந்து காசுகள் வாயிலாக 2 சந்தி விளக்குகள் வைக்கப்பட்டுள்ளன. நெட்டைப்பாக்கத்தைச் சேர்ந்த் வணிகர் (மாயிலட்டி) அபிமாநசோழ மூவேந்தவேளான் வைத்த திருநந்தா விளக்கு ஒன்று.

திருவெண்காட்டு நங்கை என்பவள் இக்கோயில் சூரியதேவர்க்கு ஒரு சந்திக்கு திருவமுது இரு நாழி அரிசியும் ஒரு சந்தி விளக்கும் மேலும் சேஷத்ரபாலற்கு (பைரவர்) ஒரு சந்தி விளக்கும் வைத்துள்ளார். இக்கோயில் மடைவிளாகத்திலிருந்த சங்கரபாண்டியன் எடுத்தபாதம் வடவாயிலான எங்குமுளான் என்பவன் வைத்த சந்தி விளக்கு ஒன்றுக்கு விட்ட ஆடு பன்னிரெண்டினை மன்றாடி (ஆடு மேயப்பவர்) யிடம் கொடுத்து பன்னிரண்டு ஆட்டிற்கு பன்னிரண்டு நாழி நெய் மாதம் ஒன்றுக்கு அளக்க வேண்டும் என்று கல்வெட்டு கூறுகிறது.

'சாமந்தன் அதயமான்' என்ற அதிகாரி இறைவனுக்கு சாத்தின திருமேகலையின் எடை பொன் முப்பது கழஞ்சு என்று கல்வெட்டு கூறுகிறது. பாலையூரான (தற்போது பாலூர்) ராசநாராயணச் சதுர்பேதி மங்கலத்தில் இருக்கும் திருநட்டப்பெருமாள் வைத்த சந்தி விளக்கு ஒன்றுக்கு நான்கு பசுக்களைத் தானமாகக் கொடுத்துள்ளான்.

வெசாலிபாடி நாட்டு செயங்கொண்ட சோழச் சதுர்வேதி மங்கலத்து தென்பிடாகை மணற்குடியிலிருக்கும் ஊர் பறையன் மண்டை சோமனான எழிசை மொகப்படைச்சன் என்பவன் சந்திவிளக்கு ஒன்றுக்கு பால் எருமை ஒன்றும் இதன் ஆண் கன்று (பூணி) ஒன்றும் தானமளித்துள்ளான்.

## அரசு அதிகாரிகள்

அரசர்கள் தம் கீழுள்ள அதிகாரிகளுக்கு சிறந்த பட்டங்களை வழங்கி அவர்களைச் சிறப்பித்துள்ளனர் என்பதை பல கல்வெட்டுகளால் அறியப்படுகிறது. சோழ மன்னர்கள் தம் அரசியல் அதிகாரிகளுக்கு வழங்கிய பட்டங்கள் மாராயன், பேரரையன், அரையன் மூவேந்தவேளான், தொண்டைமான், பல்லவராயன், காலிங்கராயன், காடவராயன், கச்சிராயன், சேதிராயன், வாணகோவரையன், மாவலிவாணராயன், கேரளராசன், விழுப்பரையன், மழுவராயன், நாடான்வான், பிரமாதிராயன், பிரம்மாராயன், சோழ கோன் முதலியனவாகும். இப்பட்டங்கள் பெரும்பாலும் தம் இயற்பெயரை அல்லது சிறப்பு பெயர்களோடு இணைந்து சோழ மன்னர்கள் தம் அரசியல் தலைவர்க்கு அளித்து வந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

## அதிகாரிகளும் அவர்களுடைய கடமைகளும்

அரசனிடத்தில் இருந்த அரசாங்க அதிகாரிகள் திருமந்திர ஓலை, திருமந்திர ஓலை நாயகம், விடையில் அதிகாரி, அரசியற் கருமங்களை ஆராயும் அதிகாரிகள் என்போர் ஒவ்வோர் நாட்டின் தலைநகரிலும் நாடுகாவல் அதிகாரி ஒருவர் இருந்தனர். 'திருமந்திர ஓலை' என்பவன் அரசன் திருவாய் மொழிந்தருளிய உத்தரவுகளையும் செய்திகளையும் நேரில் கேட்டு வந்து அவ்வப்போது ஓலையில் எழுதும் ஓர் அதிகாரியாவான்.

'திருமந்திர ஓலை நாயகம்' என்பவர் திருஓலை வாயக் கேள்வியாலுணர்ந்து ஓலையில் எழுதியுள்ளவற்றை மேற்பார்த்துக் கையொப்பம் இடும் அதிகாரியாவான். அரசன் எந்தெந்த நேரங்களில் என்ன கருமங்கள் நிகழ்த்தல் வேண்டும் என்ற நிகழ்ச்சிக் குறிப்பினை நினைவூட்டி அவற்றைத் தவறாமல் நிறைவேற்றி வைப்பவனும் இவனே.

'விடையில் அதிகாரி' என்பான் அரசனுடைய 'திருமுகம் எனும் 'ஸ்ரீமுகம்' என்ற ஆவணத்தை உரியவர்களுக்கு சேர்ப்பதிலும் விடையளித்தலும் ஆகிய கடமைகளை மேற்கொள்பவன். மேலும் அரசாங்கத்திலுள்ள பல துறைகளிலும் நிகழும் நிகழ்ச்சிகளை அரசனது ஆணையின்படி ஆங்காங்குச் சென்று ஆராயும் அலுவல்களை மேற்கொள்பவர்கள் 'கருமம் ஆராயும் அதிகாரிகள்' ஆவர்.

### அரசு

சோழப் பேரரசு பல மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு மண்டலங்களும் பல வளநாடுகளாகப் பிரிக்கப்பட்டன. வளநாடுகள் பல நாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. நாடுகளுள் சில கூற்றங்கள் எனவும் வழங்கி வந்தன. ஒவ்வொரு நாடும் பல சதுர்வேதி மங்கலத்தையும் சில தனி ஊர்களையும் தன்னகத்தே உள்ளடக்கியதாகும்.

இராசராச சோழன் தன் ஆட்சிகாலத்தில் சோழ மண்டலத்தை ஒன்பது வளநாடுகளாகப் பிரிந்திருந்தான் அவை 'ராஜேந்திரச் சிங்க வளநாடு', 'இராசராசனாகிய வளநாடு', 'கேரளாந்தக வளநாடு', 'பாண்டிய குலாசனி வளநாடு', 'நித்த விநோத வளநாடு', 'உய்யக்கொண்டார் வளநாடு', 'சத்திரிய சிகாமணி வளநாடு', 'அருமொழிதேவ வளநாடு', 'இராசராச வளநாடு' என்பனவாம். ஒவ்வொரு வளநாடும் இரண்டு பேறாருகளுக்கு இடையில் அமைந்திருந்த நிலப்பரப்பாகப் பிரிக்கப்பட்டிருந்தன.

### அரசாணை

அரசு வெளியிடும் அரசாணைகள் அரசரின் வாய்மொழியின் படியோ அல்லது ஓலையின் மூலமாகவோ வெளியிட்டு அதனை கல்லிலும், செம்பிலும் வெட்டிக் கொள்ள வேண்டும் என அந்தந்தப் பகுதி அதிகாரிகளுக்கு உத்திரவிடப்படும். சில நேரங்களில் அந்தப்

பகுதி அதிகாரிகளும் அரசாணைகள் வெளியிடுவர். அரசாணையை மக்கள் அதிகாரியிடமிருந்து பெற்றுக்கொண்டு இராஜமரியாதையுடன் அதை தலையில் வைத்து ஊர்வலமாக வந்து அதனை குறிப்பிட்ட இடத்தில் கல்வெட்டிலும், செப்புப் பட்டயத்திலும் வெட்டிக்கொள்வர்.

சில சமயங்களில் அரசரது ஆணைகள் நேரடியாகவே செப்புப் பட்டயங்கள் மூலம் அரசாணைகளாக வெளியிடப்படும். இப்படி கிடைத்துள்ள செப்பேடுகள் வரலாற்றுக்கு மிகவும் உறுதுணையாகப் உள்ளன. அவ்வாறு சுந்தரசோழனின் (கி.பி. 957-970) அன்பில் செப்பேடுகள், முதலாம் இராசராச சோழனின் (கி.பி. 985-1014) ஆணைமங்கலச் செப்பேடுகள், முதலாம் இராஜேந்திர சோழனின் (கி.பி.1022-1044) திருவாலாங்காட்டுச் செப்பேடுகள், வீரராசேந்திர சோழனின் (கி.பி. 1063-1070) சாரலச் செப்பேடுகள், கரந்தைச் செப்பேடுகள் சில குறிப்பிடத்தக்கன.

இவ்வாறு இக்கோயிலுள்ள சில கல்வெட்டுகளிலும் அரசாணைகள் உள்ளன. இதில் ஸ்ரீபிராதாப தேவராய மகாராயற் ஆட்சியானது சகாப்தம் 1357 வருடத்தில் வெளியிட்ட அரசாணை ஒன்று "நம்முடைய ஓலையும் போகவிட்ட அளவுக்குக் கல்தச்சனைக் கொண்டு கல்லும் வெட்டி நடுவித்து அந்த ஊரும் நிலமும் தேவதானம் ஆக அனுபவித்துக் கொள்ளவும்" என்ற குறிப்பு காணப்படுகிறது.

மற்றொரு கல்வெட்டில் "திருமாணிகுழி உதவி ஆளுடைய நாயனாருக்கு குடுத்தயொலை" எனும் அரசு ஆணையில் இப்பகுதி அரசு அதிகாரியான தொண்டைமான் கையெழுத்திட்டுள்ளான்.

விக்கிரம சோழனின் 12-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டில் அரசனது ஆணை அவரது திருவாய்மொழிந்தருளினபடி பிறப்பிக்கப்பட்டுள்ளது. "ஸ்ரீவிக்கிரம சோழ தேவர்க்கு யாண்டு பன்னிரண்டாவது பெரும்பற்றப்புலியூர் கோயிலிலுள்ளாற் தியாக சமுத்திரக் கூடத்து பள்ளிச்சோட்டை சோழகோனிலிருந்து செய்யத் திருவாய் மொழிந்தருளினபடி" என்று குறிப்பு காணப்படுகிறது. இவ்வாணை அரசனது நேரடி ஆணை என்பது சிறப்புக்குரியதாகும்.

பாண்டிய மன்னன் ஸ்ரீவிக்கிரமபாண்டிய தேவர் கல்வெட்டில் "இறையிலி தேவதானமாகக் குடுத்தோம் இவ்வோலை பிடிபாடாகக்

கொண்டு சந்திராதித்த வரை செல்லுவதாக கல்லிலும் செம்பிலும் வெட்டிக் கொள்க" என்றும், குலோத்துங்க சோழனின் கல்வெட்டொன்றில் "இறையிலியாகத் தந்தோம் இப்படிக்கு இவ்வோலை பிடிபாடகக் கொண்டு சந்திராதித்தவரை செல்வதா கல்லிலும் செம்பிலும் வெட்டிக் கொள்க இவை செய்யானமுடையான் எழுத்து" இவ்வாறாக அரசாணைக் குறிப்புகள் இவ்வூர் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன.

## அரசரின் பேரில் விழாக்கள், சந்தி வழிபாடுகள்

இரண்டாம் குலோத்துங்க சோழனின் 8-ஆவது ஆட்சியாண்டு கல்வெட்டில் இம்மன்னனின் பிறந்த நட்சத்திரமான உத்திரட்டாதி நாளில் தீர்த்தம் ஆடுவதற்கும்(நீராடுதல்) மேலும் சித்திரைத் திருநாளில் விக்கிரம சோழன் சந்திக்கு அமுதுபடியும், தினம் உணவு படைப்பதற்கும் தானம் அளித்து கொண்டாடப்பட்டுள்ளது.

விக்கிரம பாண்டியன் கல்வெட்டில் "ஆனி மாதத்தில் அவர் பிறந்த நாளில் விக்ரமபாண்டியன் சந்தியின்போது அமுதுபடி சாத்துப்படி செய்யப்பட்டுள்ளன.

மூன்றாம் குலோத்துங்க சோழனின் கல்வெட்டு ஒன்றில் "நம்பேரால் கட்டின இராசக்கணாயகன் சந்திக்கும் இராசக்கணாயகன் திருநாளைக்கும் தேவர்கள் திருநாளைக்கும் அமுதுபடி சாத்துப்படி உள்ளிட்டு கொண்டும் நித்த நிவந்தங்களுக்கு" இதில் இராசக்கணாயகன் என்பது இம்மன்னன் 'இராசாக்கள் நாயகன்' எனும் சிறப்புப் பெயரில் அழைக்கப்பட்டுள்ளதை அறியமுடிகிறது.

## அரசதிகாரிகளின் ஒப்பங்கள்

ஸ்ரீபிரதாப தேவராய மகாராயர் கல்வெட்டில் தேவதானங்கள் சந்திராதித்தவரை தேவதானமாக அனுபவித்துக் கொள்ளவும் எனக்கூறி "தொண்டைமான் எழுத்து" என்று அவர் ஒப்பம் இடப்பட்டுள்ளதை காண்கிறோம். அரசின் சார்பில் கோயில்களுக்கு இறையிலி நிலமாகவோ, தானமாகவோ வழங்கப்படுவதற்கு ஆவணமாக வெளியிட்டு அதில் அப்பகுதி அதிகாரியின் ஒப்பம் இட்டு வெளியிடப்படுவது வழக்கமாகும்.

இரண்டாம் குலோத்துங்க சோழனின் கல்வெட்டில் "இறையிலி திருநாமத்துக் காணியாகத் தந்தோம் இப்படி நாற்பாற்கெல்லைக்கும்

திருச்சூலதாபாரமும் பண்ணி கல்லிலும் வெட்டிக் கொள்க திருநவமுத்து இவை தொண்டைமான் எழுத்து" இவை வாணதராயன் எழுத்து இதில் மூன்று அதிகாரிகளின் ஒப்பங்கள் இடப்பட்டுள்ளன.

விக்ரம பாண்டியன் கல்வெட்டில் "பாண்டி மண்டலத்து செம்பி நாட்டு மருங்கூருடையான் வடகோபுரமுடையான் கருமாணிக்கத் தாழ்வானான மாதவராயன் எழுத்து". பாண்டி மண்டலத்து செம்பி நாட்டு மருங்கூருடையான் வடகோபுரமுடையான் தேவன் பல்லவராயன் எழுத்து". என்று அதிகாரிகளின் ஒப்பங்கள் இடப்பட்டுள்ளதை காண்கிறோம்.

## நில வருவாய்த் துறை

பண்டைய காலத்தில் அரசின் மிக முக்கிய வருவாய் நிலத்தின் மூலம் கிடைக்கும் வரிகளாகும். அவ்வாறு நிலத்தின் மீது விதிக்கப்படும் வரிகள் முதலில் நிலத்தின் தரமறிந்து அதனை பல வகைகளாக பிரித்து அதற்கேற்ப நிலவரிகள் விதிக்கப்பட்டன. அவ்வாறு வசூலிக்கப்படும் வரிகள் நிலத்திலிருந்து கிடைக்கும் விலைபொருள்கள் மூலமாக பெறப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

நாட்டு வருவாய் மூலங்களில் வரி விதிப்பு தலையானதாகும். நிலங்கள், தொழில்கள், வணிகப் பொருள்கள் ஆகியன மீது முக்கியமாக வரி விதிக்கப்பட்டன. நாட்டுவருவாய் இனங்களில் நிலவரியே முதன்மையானது. இவ்வூர் பொதுவாக விளைநிலங்கள் மீதே விதிக்கப்பட்டது. நாட்டு நிலங்கள் யாவையும் அரசருக்கு உரிமையுடையன என்பதால் இந்நிலங்களின் பயனை நுகர்வோர் அரசருக்கு செலுத்த வேண்டிய கட்டணம், இந்நிலம் யாரும் நிலவரித் தீர்வை செய்வதற்கு முன்னால் நாட்டு நிலங்கள் யாவும் முறையாக அளக்கப்பட்டுப் பதிவு செய்யப்பட்டன. நிலங்களை அளக்க அளவு கோல்கள் வழக்கிலிருந்தன.

வரித்தீர்வையின் மற்றொரு சிறப்பான தன்மை விளை நிலங்களைத் தரப்படுத்துதலாகும். பொதுவாக நிலங்கள் நன்செய், புன்செய், தோட்ட நிலம் என்பன போன்று எளிதாக வகைப்படுத்தப்பட்டன. விக்கிரம சோழனின் மூன்றாவது கல்வெட்டில் 'இவ்வூர் நின்றும் பிறிந்த நிலத்துக்கு தரமறிந்தலாமையில் தரமறிந்து தரவே' என்றகுறிப்பின் வாயிலாக நிலத்தினை தரவாரியாக

பிரித்துள்ளதை விளங்கமுடிகிறது. மேலும் இதேபோன்று "நீர்நிலத்து கடைத்தரமாக மூன்றாந் தரத்திலே ஏறிடப்பண்ணி" என்ற மூன்றாம் குலோத்துங்கனின் 21-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டின் வாயிலாக நீர்நிலம் மூன்று தரமாகப் பிரித்துள்ளதையும் அறியமுடிகிறது.

திருமாணிகுழி கோயிலிலுள்ள விக்கிரம சோழனின் 11-வது ஆட்சியாண்டுக் கல்வெட்டில் "நீர் நிலத்துக்கும் இவ்வாண்டு முதல் ஊர்க்காவல் இருநூற்றுக் கலநெல் சந்திராதித்தவரை இருக்க கடவதாகவும்" என்று கூறி வரியிடப்பட்டுள்ளது. இம்மன்னனின் கல்வெட்டில் "புஞ்சை நிலம் ஐம்பத்தொன்றேகாலும் வேலி ஒன்றுக்கு நெல் முக்கலமாக நெல் நூற்றுயம்பத்து முக்கலன்" வரி விதிக்கபட்டுள்ளது. விக்கிரம சோழனின் 12-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டில் "நீர்நிலம் ஆறு வேலியானால் நிலவொபாதி பொன் எண்கழஞ்சரைய இரண்டு மஞ்சாடி" வரி விதிக்கப்பட்டுள்ளது.

### கோயில் வழிபாடு

கோயில்களில் இறைவனுக்கு வழிபடும் பிற தெய்வங்களுக்கு வழிபாடுகளும் நடத்துவது இயல்பு. வழிபாடு நிகழும் காலத்திற்கு சந்தி எனப்பெயர். 1 நாளைக்கு 60 நாழிகை 7½ நாழிகை 1 சந்தியாகும் எனவே ஒரு நாளைக்கு 12 சந்திகளாகும். இப்படி ஒரு சந்திக்கு அமுது செய்து வழிபாடு செய்வதற்கு நிலம் ஒதுக்கி அதன் வருவாயில் இருந்து வருவாயைக் கொண்டு செய்வது வழக்கம்.

ஸ்ரீபிரதாப தேவராய மகாராயர் கல்வெட்டில் இக்கோயில் நாயனாருக்கு நம்முடைய பேராலே ஒரு சந்தியும் அமுது செய்யப்பண்ணி அந்த சந்தியாலே அமுது செய்த சோறு என்று குறிப்பால் இவ்வூர் இறைவனுக்கு வழிபாடு செய்ய ஆணை இடப்பட்டுள்ளதை அறிகிறோம்.

இரண்டாம் குலோத்துங்க சோழன் காலக் கல்வெட்டில் இக்கோயில் நாயனாற்கு நீராடுவதற்கும், அமுதுப்படி சாத்துப்படி செய்வதற்கும் நிலம் ஒதுக்கி வழிபாடு செய்ய ஆணை இடப்பட்டுள்ளது.

"மகனார் திருநட்சத்திரமான உத்திரட்டாதி நாள் தீர்த்தம் பிரசாதிக்க (நீராடுதல்) எழுந்தருளுகிற திருநாளுக்கும் விக்கிரம சோழன் சந்திகளும் அமுதுபடி சாத்துப்படி உள்ளிட்டு வேண்டும் நித்த நிவந்தங்கள்" என்று வழிபாடு செய்ய ஆணையிடப்பட்டுள்ளது.

முதலாம் குலோத்துங்க சோழன் 35-ஆவது ஆட்சியாண்டில் திருவெண்காட்டு நங்கை ஒருத்தி சூர்ய தேவர்க்கு ஒரு சந்திக்கு திருவமுது இருநாழி அரிசியும் ஒரு சந்தி விளக்கும் சேத்ரபாலற்கு (பைரவர்) ஒரு சந்தி விளக்கும் வைத்து வழிபாடு நடைபெற வழிவகை செய்துள்ளான்.

## திருவிழாக்கள்

இரண்டாம் குலோத்துங்கன் திருநட்சத்திரமான உத்திரட்டாதி நாளில் தீர்த்தம் பிரசாதிக்க எழுந்தருளிய சித்திரை திருநாளில் திருவிழா நடைபெற்றுள்ளது. விக்கிரம பாண்டியன் ஆனி மாதத்தில் பிறந்த நாளில் தீர்த்தம் பிராஸாதிக்க எழுந்தருளுகிற விக்கிரம பாண்டியன் திருநாளில் திருவிழா நடைபெற்றுள்ளது. மூன்றாம் குலோத்துங்க சோழனாகிய இராசாக்களின் நாயகனான தம் பேரால் கட்டின சந்திக்கும் திருநாளைக்கும் தேவர்கள் திருநாளைக்கும் அமுதுபடி சாத்தப்பட்டது. இறைவனுக்கு திருவிழாக்கள் நடைபெற்றதை இக்கல்வெட்டுக் குறிப்புகளால் அறிய முடிகிறது. கல்வெட்டுகளில் திருநாள் என்று அழைக்கப்படுவது 'திருவிழா' எனும் பொருளில் கூறப்பட்டுள்ளது.

## கோயில் நிர்வாகம்

கோயிலுக்கு வழங்கப்பட்ட நிலத்திலிருந்து வரும் வருவாயை பெறுவதும், ஆடு, மாடுகளைக் கைக்கொண்டு இறைவனுக்கு விளக்கு எரிப்பதும், தானமாக தரும் காசுகளை இறைவனது காரியங்களுக்குச் செயல்படுத்தவும், கோயிலில் உள்ள பிராமணர்களுக்கு பங்குகளை பிரித்து அளிப்பதும், கோயிலின் நிலையான மற்றும் வரவு செலவுகளை செய்வதும், கோயில் நிலங்களையும், கொடுத்த ஆபரணங்களையும் காசுகளையும் பாதுகாப்பதும், முக்கிய நோக்கமாகக் கருதி நிர்வகித்து வந்தனர். கோயில் நிர்வாகத்தில் சிவ பிராமணர்கள், தேவகன்மிகள், தானத்தார்கள், கணக்கர் போன்றோர்கள் ஈடுபட்டனர் என்பது இவ்வூர் கல்வெட்டுகளின் வாயிலாக அறியமுடிகிறது.

## சிவப்பிராமணர்கள்

விக்கிரம சோழனின் 4-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டில் "உதவி திருமாணிகுழி ஆளுடையார்க்கு வைத்த சந்தி விளக்கு இரண்டுக்கும் உபையமாக கைக்கொண்ட காசு ஐந்து இக்காசு

ஐந்தையும் கைக்கொண்டு சந்திராதித்தவரை எரிக்க கடவோமாக இக்கோயில் சிவ பிராமணரோம் இது பன்மாஹேஸ்வர ரக்ஷை". இக்குறிப்பின் மூலம் இக்கோயிலில் உள்ள சிவப்பிராமணர்கள் ஐந்து காசுகள் பெற்றுக்கொண்டு இரண்டு சந்தி விளக்கு எரிக்க உறுதி அளித்துள்ளனர் என்பதை அறியமுடிகிறது.

முதலாம் குலோத்துங்க சோழன் 34-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டில் திருமாணிகுழி மஹாதேவர்க்கு நெட்டைபாக்கமுடையான் மாயிலட்டி செந்தனான அபிமான சொழ மூவேந்தவேளான் வைத்த திருநந்தா விளக்கு கொண்டு கடவ. . . . இக்கல்வெட்டில் உடைய இக்கோயிலில் சிவப்பிராமணரொம்" என்ற கல்வெட்டு வாசகங்களைக் கொண்டும் கோயில் நிர்வாகத்தில் சிவப்பிராமணர்கள் ஈடுபட்டுள்ளதை அறியமுடிகிறது.

### தானத்தார்கள்

மூன்றாம் குலோத்துங்க சோழர் கல்வெட்டு ஒன்றில் "உதவி திருமாணிகுழியில் உடையார் திருமாணிகுழி ஆளுடைய நாயனார் கோயில் தானத்தார்க்கு இறையிலியாக தந்தோம்."

இக்கல்வெட்டில் நிலத்தின் மூலம் வரும் வருவாயையும் மற்ற வகையில் வரும் தறியிறை, தட்டார் பாட்டம், சிற்றுவரி, துலாபார வரி, இனவரியைப் பெற்றுக் கொள்ளுமாறும் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே தானத்தார்கள் இக்கோயிலை நிர்வகித்து வந்தனர் என்பதை காண்கிறோம்.

### தேவகன்மிகள், கணக்கன்

மூன்றாம் குலோத்துங்க சோழன் 21-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டு "உதவி திருமாணிகுழி உடையார் கோயில் தேவகன்மியுங் கோயில் கணக்கனுங் கண்டு இக்கோயில் விஸ்வேஸ்வர தேவர்க்கு உலகுடைய நாயனார் திருமேனி கல்யாணத் திருமேனியாக இத்தேவர்க்கு பூசைக் குடலாத் திருநாமத்துக் காணியுங் ஊர்க்கீழ் இறையிலி ஆக நீர் வார்த்துக் குடுத்து". இதன் மூலம் இக்கோயிலில் உள்ள தேவகன்மிகள் மற்றும் கணக்கனிடமும் இறைவன் இறைவியின் செப்புத் திருமேனிகள் செய்து வைத்து அதற்கு

பூசைக்காக வேண்டி நிலங்களைத் தானமளித்து நிலத்தினை நீர்வார்த்துக் கொடுத்ததை தெரிவிக்கிறது. இதன் மூலம் வரும் வருவாயை கோயிலுக்காக வசூலித்து நிர்வாகம் செய்துள்ளனர்.

## திருவாரதநம்

மூன்றாம் குலோத்துங்க சோழனின் 21-ஆவது ஆட்சியாண்டின் மற்றொரு கல்வெட்டில் "உதவி திருமாணிகுழியுடையார் கோயில் விஸ்வேஸ்வர தேவர்க்கு பூசைக்கு வேண்டுவனவையிற்றுக்கு. . . . ஆக நிலம் பன்னிரண்டுமாகவும் இத்தேவர்க்கு திருநாமத்துக்காணியாக நீர்வார்த்துக் கொடுத்தோம். . . . .இப்பிராமண இசைவுதீட்டு (ஆவணம்) எழுதினேன் திரிபுவனமாதேவி சதுர்வேதி மங்கலத்து பிடாகை மொசுகுளத்தூரில் கருமாணிக்காழ்வார் கோயில் திருவாரதநம் பண்ணும் பாரத்வாஜி".

இக்கல்வெட்டின் வாயிலாக இக்கோயில் விஸ்வேஸ்வர தேவர் பூசைக்கு தேவையானவற்றை வாங்குவதற்கெனவே இந்நிலம் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த ஆவணத்தை எழுதியது கருமாணிக்காழ்வார் கோயிலை நிர்வாகம் செய்யும் திருவாரதநம் பண்ணும் பாரத்வாஜி. இதில் திருவாரதநம் என்பது நிர்வாகத்தையும், பாரத்வாஜி என்பது பிராமண குலத்தில் உள்ள ஒரு கோத்திரத்தையும் குறிக்கின்றது.

## அமுது படைத்தல்

கோயிலில் உள்ள இறைவனுக்கும் மற்ற தெய்வங்களுக்கும் ஒவ்வொரு சந்தியிலும் அமுதுபடைத்து பூசை செய்யப்படும். கோயில்களில் எட்டுகால பூசைகள், ஆறுகால பூசைகள், நான்கு கால பூசைகள், குறைவாக ஒரு கால பூசையாவது நடைபெறுவது வழக்கம். ஒவ்வொரு சந்திக்கும் ஒருவரின் பெயரையே சந்திக்கு வைத்துள்ளதை இக்கல்வெட்டுகள் வாயிலாக அறியமுடிகிறது.

விக்கிரம சோழன் சந்தி, விக்கிரம பாண்டியன் சந்தி, இராசக்கள் நாயகன் சந்தி என்ற பெயர்களால் சந்தி விளக்கும் அமுது படைப்பதற்காக நிலங்களை தானமளித்துள்ளதை கல்வெட்டுகளின் வழியாக அறிகின்றோம்.

அரசர்களின் பெயர்களை சந்திக்கு வைத்து அமுது படைத்துள்ளனர். அதுமட்டுமின்றி திருவெண்காட்டு மங்கை என்பவன் கொடுத்த காசில் இக்கோயிலில் உள்ள சூர்ய தேவர்க்கு ஒரு சந்திக்கும் திருவமுது இரு நாழி அரிசியும் பூசைக்காக வழங்கப்பட்டுள்ளதை அறியலாம்.

## விளக்கெரித்தல்

கோயிலில் தற்பொழுது போல் மின்சார விளக்குகள் இல்லாத காலமென்பதால் கோயிலின் ஒவ்வொரு சன்னதியின் வெளிச்சத்திற்காகவும் மற்றும் கோயிலின் வெளிச்சத்திற்காகவும் விளக்கு எரிப்பதற்கு நெய்யைப் பயன்படுத்தியுள்ளனர். அதற்காக பசுக்களையும், ஆடுகளையும், பால் எருமைகளையும் கோயிலுக்கு தானமாகக் கொடுத்தனர். இதன் மூலம் பெறப்படும் நெய்யை கோயிலில் விளக்கு எரிப்பதற்கு பயன்படுத்தினர். நந்தா விளக்கு என்பது அணையாமல் எப்பொழுதும் எரிந்து கொண்டிருக்கும் விளக்காகும். சந்தி விளக்கு என்பது சூரியன் மறையத் தொடங்கும் நேரத்தில் எரிக்கும் விளக்கு சந்தி விளக்கு எனப்படும். இரவு சந்தி விளக்கு இரவிலும், நடுபகல் சந்தி நடுபகலிலும் எரிப்பதாகும்.

கல்வெட்டுகளில் கழுக்களாம்பாக்கமுடையான் வைத்த இரண்டு சந்தி விளக்குகள், நெட்டைப்பாக்க முடையான் மாயிலட்டி சேந்தனான அபிமான சோழ மூவேந்த வேளான் வைத்த ஒரு திருநந்தா விளக்கு, திருவெண்காட்டு நங்கை சூரிய தேவர்க்கும் சேஷத்ரபாலற்கு (பைரவர்) வைத்த சந்தி விளக்கு தலா ஒன்று, பாலையூருடையான் துணைவன் திருநட்டப்பெருமாளன் இந்நாயனாற்கு வைத்த சந்தி விளக்கு ஒன்று, ஏழிசைமொகப்படைச்சன் வைத்த சந்தி விளக்கு ஒன்று ஆக இவைகள் கோயிலுக்கு விளக்கு எரிப்பதற்காக வைத்த சந்தி விளக்குகளாகும்.

## அணிகலன்கள்

இறைவனுக்கு தானமாக அளிக்கப்ட்ட அணிகலன் பற்றி மூன்றாம் குலோத்துங்கன் 19-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டில் சாமந்தன் அதயமான் என்கிற அதிகாரி இறைவனுக்கு திருமேகலை ஒன்றினை சாத்தியுள்ளான். இதனின் எடை பொன் முப்பதின் கழஞ்சு என்று கல்வெட்டு குறிப்பால் தெரியவருகிறது.

## திருப்பணி

உதவி திருமாணிகுழி ஆளுடையார்க்கு திருப்படி மாற்றுக்கும் திருவிளக்குகளுக்கும், திருப்பணிகளுக்கும் என்று தனியாக நிலம் ஒதுக்கப்பட்டுள்ளதை குலோத்துங்க சோழன் 3-வது ஆட்சியாண்டு கல்வெட்டு தெரிவிக்கிறது. எனவே கோயில் திருப்பணிகள் காலமுறை வாரியாக சிறப்பாக நடைபெற்றுள்ளன எனலாம்.

## சிறப்புத் தெய்வ வழிபாடுகள்

சூரிய தேவர் (சூரியன்), சேத்ரபாலர் (பைரவர்) ஆகிய தெய்வங்களுக்கு சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றுள்ளதின் மூலம் மூலவருக்கு மட்டுமின்றி மற்ற தெய்வங்களுக்கும் உரிய முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதை காணமுடிகிறது.

திருமாணிகுழி ஆளுடையார் கோயிலில் திருக்காமக் கோட்டத்து பெரிய நாச்சியார்க்கு வழிபாடு (அம்மன்) நடைபெற்றுள்ளதை மூன்றாம் இராசராசனின் ஐந்தாவது ஆட்சியாண்டு கல்வெட்டில் அம்மனுக்கு சந்தி விளக்கு வைக்க பால் எருமை ஒன்று தானம் கொடுத்த குறிப்பிலிருந்து அறிய முடிகிறது.

## சண்டேஸ்வரர்

சண்டேஸ்வரர் உருவம் எப்போதும் கோயிலின் வடபுறத்தில் தெற்கு நோக்கி அமைக்கப்பட்டிருக்கும். சண்டேஸ்வரன் சிவனின் முதல் தொண்டன் என்று கூறுவதால் இவரை 'ஆதிதாசர்' என்றழைப்பர். மற்றும் கோயில்களின் நிலங்களை விற்பதாக இருந்தாலும் தானமாக கொடுப்பதாக இருந்தாலும் ஆதிதாசரான சண்டேஸ்வரர் பெயரிலே ஆவணம் எழுதப்படும். ஆதலால் சண்டேஸ்வரரை சிவன் கோயிலின் கணக்கர் என்றும் அழைக்கப்படுவது வழக்கமாகும்.

இக்கோயில் கல்வெட்டுகளில் விக்கிரம சோழனின் மூன்றாவது ஆட்சியாண்டு மற்றும் 11-ஆவது ஆட்சியாண்டு கல்வெட்டுகள், முதலாம் குலோத்துங்க சோழனின் 49-ஆவது ஆட்சியாண்டு கல்வெட்டு ஆகியவற்றில் ஆதிசண்டேஸ்வரர் பெயரிலேயே ஆவணங்கள் எழுதப்பட்டுள்ளன என்ற விவரங்களிலிருந்து இதனை உறுதி செய்யலாம்.

## தேவரடியார்

திருக்கோயில்களில் கோயில் பணி செய்வதற்கும், நடன மங்கையாகவும், திருப்பாவை, திருவெம்பாவை பாடும் மகளிர்களாகவும் தேவரடியார்கள் இருந்துள்ளனர். இதனை முதலாம் குலோத்துங்க சோழனின் 49-ஆவது ஆட்சியாண்டு கல்வெட்டு இத்தன்மத்துக்கு விரோதம் வராமல் காத்துச் செலுத்த கடவோமாகவும் திருவிறையாக்கலி மறுத்தாரை தேவரடியாராயுள்ள ஆண்டார்களெய் தெண்டித்து திருவிரையாக்கலி நிலை நிறுத்துக்கடவர்களாகவும் என்ற இக்கல்வெட்டு வாசகத்தின் மூலம் 'தேவரடியார்கள்' சிறந்த நிலையில் இருந்துள்ளனர் என்பதை விளங்கலாம்.

## திருமடம்

உதவி திருமாணிகுழி உடையார் திருமடைவிளாகத்தில் 'ஸ்ரீகாழி நாடுடையான் திருமடம்' என்று ஒரு திருமடம் இருந்ததை முதற்குலோத்துங்க சோழனின் 40-ஆம் ஆட்சி ஆண்டு கல்வெட்டு குறிப்பிடுகின்றது. அந்த மடத்திற்கு மடப்புறமாக வானவன் மாதேவிநகரத்தார் நிலம் அளித்துள்ளனர். 'ஸ்ரீகாழிநாடுடையான் மடம்' என்பது திருஞானசம்பந்தர் பெயரில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## திருமடை விளாகம்

திருமடைவிளாகம் என்பது கோயிலை அடுத்து கோயிலின் சிவபிராமணர்கள், தேவரடியார்கள், கணக்கர், மணியம், வைராவி. மெய்க்காவலர், பணிப்பெண் ஆகியோருக்கு தனிதனியாக வீடுகள் அமைக்கப்பட்டிக்கும். மேலும் இப்பகுதியிலே திருமடம் ஒன்று இருந்துள்ளது.

இத்திருமடைவிளாகம் இருந்துள்ளது என்பதற்கு முதற் குலோத்துங்க சோழனின் 49-ஆம் ஆண்டு கல்வெட்டுகளும் மற்றும் 42-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டில் "கீழை நாடு காணி மலைக்கு வடக்கு கோயிலும், மடைவிளாகம், நீக்கி" என்ற குறிப்பால் விளங்கலாம்.

இந்த மட விளாகத்தில் இருந்த சங்கரன் பாண்டியன் எடுத்த பாதம் வடவாயிலான எங்குமுளான் என்பவன் சந்தி விளக்கு வைத்துள்ளது பற்றி விக்கிரம சோழனின் ஆறாவது ஆட்சியாண்டு கல்வெட்டொன்று கூறுகிறது.

# கல்வெட்டுகளில் வேளாண்மை

## நில வகைகள்

நில வகைகள் என்பது நிலத்தின் தன்மையையும், தரத்தினையும், நிலத்தில் பயிரிடப்படும் பயிர் வகைகளைப் பொறுத்தும் நிலத்தினை பிரிப்பதாகும்.

இக்கோயில் கல்வெட்டுகளின் வாயிலாக புன்செய், நீர்நிலம், கொல்லை நிலம், நாரைகாற்கழி, தரிசு நிலம், நவிரை என்று பல்வேறு நில வகைகளை காணமுடிகிறது.

## நிலப் பெயர்கள்

ஒரு குறிப்பிடப்பட்ட நிலத்திற்கென்று தனியாக பெயர்களும் வழங்கப்படுகின்றன. இக்கல்வெட்டுகளில் உள்ள சில நிலத்தின் பெயர்களாவன கங்கை கொண்டார் வெட்டி, எதிர் இலி சோழன் திருநாமத்துக்காணி, திருநந்தாவிளக்குப்புறம், ஆமைப்பள்ளம், பிடாகை எய்தலூர் நிலம், கழுதைப்பட்டு நிலம்.

## நிலஅளவுகள்

நிலத்தினை பல்வேறு அளவுகளால் குறிப்பிடப்பட்டுள்ளன. அவைகள், வேலி, மா, காணி, முந்திரி என்ற நில அளவுகளாலும் இதனை அளக்க பல அளவுகோல்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இக்கோயிலில் மூன்றாம் குலோத்துங்க சோழனின் 21-ஆவது ஆட்சியாண்டு கல்வெட்டில் நிலத்தின் அளவினையும், நில அளவு வாய்ப்பாடும் அறியமுடிகிறது.

"இராசேந்திர சோழ வாய்க்காலுக்கு வடக்கு நாலாங் கண்ணாற்று மூன்றாஞ் சதிரத்துண்டத்து கிழக்கடைய நிலம் இரண்டு மாவும் நாலஞ் சதிரத்துண்டத்து நிலம் எழுமா காணியையும் ஆக நிலம் ஒன்பது மாக்காணி . . . . இக்கண்ணாற்று மூன்றாஞ்சதிரத்து மேற்கடைய நிலம் எழுமா நீக்கி கிழக்கடைய நிலம் இரண்டு மா முக்காணியும் ஆக நிலம் பன்னிரண்டு மாகவும்,

முதலில் கூறிய இரண்டு மாவும் பிறகு ஏழு மா காணியும் மொத்தம் ஒன்பது மாக்காணியும் அடுத்து இரண்டு மா முக்காணியும் ஆக மொத்தம் பன்னிரெண்டு மா என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 2 மா | 2 |
| 7 மா காணி | 7 1/80 |
| 2 மா முக்காணி 2 1/240 | |
| | ------------- |
| | 11 +1 |
| = | 12 மா |

மூன்றாம் குலோத்துங்க சோழனின் 3 மற்றும் 21-ஆவது ஆட்சியாண்டு மற்றும் ஸ்ரீவிக்ரமபாண்டியன் கல்வெட்டில் 'மா' என்ற நில அளவு மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இரண்டாம் குலோத்துங்க சோழன் கல்வெட்டில் 'அறுபத்திரண்டு மா முக்காணி' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. விக்கிரம சோழனின் 3, 11-ஆவது ஆட்சியாண்டு கல்வெட்டில் 'மா'வும் 'காணி'யும் குறிப்பிடப்பட்டுள்ளது.

விக்கிரம சோழனின் 12-ஆவது ஆட்சியாண்டில் கல்வெட்டில் "வேலி" குறிப்பிடப்பட்டுள்ளன.

### நீர்ப்பாசன அமைப்புகள்

இக்கோயில் கல்வெட்டுகளின் மூலம் இப்பகுதி நிலங்களுக்கு நீர்ப்பாசனம் எவ்வாறு நடைபெற்றது என்பதை நன்கு அறிய முடிகிறது. கெடில ஆற்றிலிருந்து பல வாய்க்கால்களாகவும், ஓடைகளாகவும் பிரிந்து செல்கிறது. அவ்வாறு பல வாய்க்கால்களிலிருந்து பல பிரிவுகளாக இருபுறங்களிலும் பிரிகின்றன. அப்படி பிரிகின்ற பிரிவுகள் "கண்ணாற்று" என்று அழைக்கப்படுகிறது. முதல் பிரிவு முதல் கண்ணாற்று என்றும், இரண்டாவது பிரிவு இரண்டாம் கண்ணாற்று, மூன்றாங்கண்ணாற்று இவ்வாறு வரிசைப்படி அழைக்கப்படுகிறது. அதுபோல கண்ணாற்றுகளை பல பிரிவுகளாக பிரித்து அந்த பிரிவுகள் "சதுரம்" என்றழைக்கப்பட்டன. அவ்வரிசையின்படி முதல் சதுரம், இரண்டாம் சதுரம், மூன்றாம் சதுரம் என்று பிரிக்கப்படுகிறது. இப்படி ஆற்று நீர் வாய்க்கால்களில் பிரிந்து பின் கண்ணாற்றுகளின் வழியாக சதுரங்களை அடைந்து நீர்ப்பாசனம் பெற்றுள்ளதை கல்வெட்டுகள் தெளிவாக விளக்குகின்றன.

மூன்றாம் குலோத்துங்க சோழனின் 21-ஆவது ஆட்சியாண்டு கல்வெட்டில் வானவன் மாதேவிக்கு கிழக்கு இராசேந்திர சோழ வாய்க்காலுக்கு வடக்கு நாலாங் கண்ணாற்று மூன்றாஞ் சதிரத்துண்டத்துக் கிழக்கடைய நிலம் இரண்டு மாவும் நாலாஞ் சதிரத்துண்டத்து நிலம் எழுமாக் காணியும் ஆக நிலம் ஒன்பது மாக்காணியும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதுபோல் விக்கிரம சோழனின் 3,11,12 ஆட்சியாண்டுகள் முதலாம் குலோத்துங்கன் 42,49 ஆட்சியாண்டுகள் மூன்றாம் குலோத்துங்கனின் 3,21 ஆட்சியாண்டு கல்வெட்டுகளில் நீர்ப்பாசன முறையை அறியமுடிகிறது.

மேலும் வாய்மடை, ஏரிகரை, கீழைமடை, 'வஞ்சந்தம் பாடி ஏரிகீழ் கடைகொப்பு' என்று நீர் பாயும் பகுதி தொடர்பான விளக்கங்களும் கிடைக்கின்றன.

### ஆறுகள், வாய்க்கால்கள்

இக்கோயில் கல்வெட்டுகளின் மூலம் இப்பகுதி ஆறு, வாய்க்கால்கள், ஓடைகள் பற்றி அறியலாம். கெடில நீரோடுகால் (கெடில ஆறு), அரும்பொந்தைவாய்க்கால், மானகாந்தன் ஓடை. ஆலைப்பாக்கத்து அருகில் உள்ள ஊருணி வாய்க்கால், இராசேந்திர சோழ வாய்க்கால், முடிகொண்ட சோழ வாய்க்கால், வஞ்சந்தம் பாடி ஏரிகரை, இவைகளைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

### நிலத்தின் மீதான வரிகள்

நிலத்தின் தன்மைகளையும் தரத்தையும் அறிந்து அவற்றிற்கென்று தனித்தனியாக வரிகள் வசூலிக்கப்பட்ட விவரம் விக்கிரம சோழனின் 3-ஆவது ஆட்சியாண்டு கல்வெட்டு "புஞ்சை நிலம் ஐம்பத்தொன்றே காலுக்கு வேலி ஒன்றுக்கு நெல் முக்கலமாக நெல் நூற்றையம்பத்து முக்கலனே இரு தூணிக்கு குறுணியினால்" என்ற குறிப்பின் மூலம் அறியலாம்.

விக்கிரம சோழனின் 11-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டில் 'இந்நிலத்துக்கு இறை காவலாக. . . . . . இந்நெல்லு இருநூற்றுக் கலமும் இறுகக் கடவதாக நிச்சயித்துக் குடுத்தோம்' என குறிப்பிடப்பட்டுள்ளது.

முதலாம் குலோத்துங்க சோழனின் 42-ஆவது ஆட்சியாண்டு கல்வெட்டில் 'இந்நிலம் கைக்கொண்டு தான் வேண்டும் பயிர் செய்து

ஆளுடைய ஆண்டா சறுதியாக அன்தராயம் உதவினாயகன் தச்சுகாலாலெய் கடமை செலவு பெற ஆட்டு 150 கல நெல்லு அளக்க ஆடவதாகவும்' என்ற கல்வெட்டுக் குறிப்புகள் வாயிலாக நிலத்தின் மீதான வரிகள் விதிக்கப்பட்ட விதத்தை அறிந்துகொள்ள முடிகிறது.

## இறையிலி

கோயிலில் உள்ள இறைவனுக்கு அமுதுபடி, சாத்துப்படி மற்றும் நிவந்தக்களுக்காகவும், திருப்பணி, திருவிளக்குகளுக்காகவும் மற்றும் திருவிழாக்கள் போன்றவற்றிற்காகவும் அரசர்கள், அதிகாரிகள், ஊர்சபையினர் குறிப்பிட்ட இடத்தில் உள்ள நிலத்தின் மூலம் கிடைக்க வேண்டிய அரசு வரி வருவாயை கோயில் நிர்வாகத்திற்காக அளிக்க வேண்டி ஆணையிடப்பட்டுள்ள நிலங்களை இறையிலி நிலங்கள் என்றழைப்பர்.

அவ்வாறு விக்கிரம சோழனின் 12-ஆவது ஆட்சியாண்டு கல்வெட்டில் நாற்பது மா நிலத்தினை இறைவனுக்கு இறையிலியாக கொடுத்துள்ளார். மூன்றாம் குலோத்துங்கனின் கல்வெட்டுகளில் நிலமும், வரியின் மூலம் கிடைக்க வேண்டிய வருவாயை இறைவனுக்கு இறையிலியாக அளித்துள்ள செய்திகள் அவனது 21-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டுத் தெரிவிக்கிறது.

## நிலவுரிமை : ஜீவிதம்

அரசுப் பணியில் பணியாற்றிய உயர் அலுவலர்களுக்கு ஊதியமாக குறிப்பிட்ட அளவு நிலம் வழங்கப்பட்டது. இது ஜீவிதம் ஒரு ஊராகவோ அல்லது பல ஊர்களாகவோ வழங்கப்பட்டன. அவர்கள் மட்டுமே பணியில் இருக்கும் காலம் முழுவதும் அந்நிலத்தின் பயனைப் பெறும் உரிமை உண்டு. ஜீவிதங்கள் எல்லா மட்டத்திலும் உள்ள ஊழியர்களுக்குத் தரப்பட்டன. இவர்களின் வழி தோன்றல்களுக்கு இந்நிலத்தில் சிறிதும் உரிமை இல்லை.

விக்கிரம சோழனின் 3-ஆவது ஆட்சியாண்டு கல்வெட்டில் "இவ்வூர் காணியுடைய வெளியூருடையான் வீர நாராயண மூவேந்த வேளானும்" என்றும் "தொண்டைமானார் சீவிதத்துக்கு பதிற்று நடந்து வந்த நிலம் உள்ளதும் ஊர்செறி உதவிநாயகர்க்கு தேவதானமாக தொண்டைமானால் சமுத்திர யாத்திரை நிமித்தம் ஆக தாரை வார்த்துக் குடுத்து" என்று ஸ்ரீபிராதப தேவராயர் கல்வெட்டிலும்,

"நம்முடைய சிவிதமாய் பதிந்து வருகிற நிலம் உள்ளது" என்று மற்றொரு ஸ்ரீபிராதப தேவராயர் கல்வெட்டிலும் ஜீவிதம் பற்றிய குறிப்புகள் காணப்படுன்றன.

## நிலவரித் துறை பதிவேடுகள்

"இத்தேவர்க்குத் திருநாமத்துக் காணியும் ஊர்க்கீழ் இறையிலியுமாக ஒழுகிலும் பொத்தகத்திலும் நீர்நிலத்து கடைத்தரமான மூன்றாந்தரத்தில் ஏறிடப்பண்ணி விஸ்வேஸ்வர கோயிலில் திருமாளிகையிலே கல்வெட்டவும்" என மூன்றாங் குலோத்துங்க சோழனின் 21-வது ஆட்சியாண்டு கல்வெட்டில் நிலத்தை தரம்பிரித்து அதற்கு வரியிலிட்டு அதனை பதிவேடுகளில் பதிவு செய்துள்ள முறையினை அறிகிறோம்.

## வேறு பிரித்தல்

ஒரு குறிப்பிட்ட பகுதியில் உள்ள நிலத்தை கோயிலுக்கு மற்ற காரியங்களுக்காகவோ அல்லது அந்த நிலத்தில் ஒரு பகுதியை பிரித்து குறிப்பிட்ட காரியத்திற்காகவோ உபயோகப்படுத்த தனியாக அந்நிலத்திற்கு அரசனது பெயரில் அல்லது வேறு பெயர் இட்டு அந்நிலத்தினை ஒதுக்கி ஆணையிடுதல் அவ்வாறு பிரிப்பதற்கு 'வேறு பிரித்தல்' எனப்படும்.

விக்கிரம சோழனின் 3-ஆவது ஆட்சியாண்டு கல்வெட்டில் "விக்கிரம சோழ நல்லூரென்றும் திருனாமத்தால் யாண்டு மூன்றாவது முதல் வேறுபிரிந்த நீர் நிலம் பத்தேழுக்காலேகாணி புஞ்சை நிலம்" என்றும், இரண்டாம் குலோத்துங்க சோழனின் கல்வெட்டில் "இராசராச வளநாட்டு மேற்காநாட்டு தியாகவல்லிச் சருப்பேதி மங்கலத்து மேல் பிடாகை ஆலைப்பாக்கத்து வேறு பிரிந்து எதிரில் சோழநல்லூர்" என்றும் "நம் பேரால் வேறுபிரிந்த ஊருணி வாய்க்காலுக்கு வடக்கு" என்ற குறிப்புகள் காணப்படுகின்றன.

மேலே காணும் கல்வெட்டு குறிப்புகள் மூலம் அரசர்கள் தம் பெயரில் நிலத்தைப் பிரித்து பிற காரியத்திற்கு பயன்படுத்த ஆணையிட்டுள்ளனர்.

### நில எல்லை

நிலங்களை கோயிலுக்குத் தேவதானமாகவோ திருநாமத்துக் காணியாகவோ வழங்கப்பட்டாலோ அல்லது விற்பனை செய்யும் போதோ அந்நிலத்தைச் சுற்றியுள்ள நான்கு திசைகளில் உள்ள இடத்தையோ, நிலத்தையோ குறிப்பிடுவது நில எல்லை எனப்படும். இது இக்கோயில் கல்வெட்டுகள் பலவற்றிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. சில கல்வெட்டுகளில் நான்கு எல்லைகளின் நிலத்தையும் சில கல்வெட்டுகளில் திசையையும் அந்த நிலத்தின் பெயரையும் குறிப்பிட்டுள்ளனர்.

மூன்றாம் குலோத்துங்க சோழனின் 3-ஆவது ஆட்சியாண்டு கல்வெட்டில் "இத்தேவர் திருநாமத்துகாணி உள்ளூர் திருப்பேரம்பலம் பொந்மேய்ந்த பெருமாள் நல்லூர் வடபாற்கெல்லை திருக்கெடிலத்து நீரோடுகாலுக்கு தெற்கும் கீழ்பாற்கெல்லை திருவயிற்திபுரத்தாழ்வார் தேவதாநம் பிரகமென்று பேர் கூவப்பட்டு திருவரியிலிட்ட நிலத்துக்கு மேற்கும் தென்பாற்கெல்லை பஞ்சாங்க கண்ணாறென்று பேர் கூவப்பட்டு கண்ணாற்றுக்கு வடக்கும் மேல்பாற்கெல்லை மாநகாந்தன் என்று கூறப்பட்ட ஓடையில் மேலாசறுதிக்கு கிழக்கும் இந்நான்கெல்லை உட்பட்ட நிலத்தில்" என்று நிலத்திற்கு நான்கு திசைகளையும் நான்கு திசைகளில் உள்ள நிலத்தையும் குறிப்பிட்டு நான்கெல்லைகள் கூறப்பட்டுள்ளன.

இக்கோயிலில் முதலாம் குலோத்துங்கனின் 42,49-ஆவது ஆட்சியாண்டுகள், விக்கிரம சோழனின் 3,11,12-ஆம் ஆட்சியாண்டுகள், இரண்டாம் குலோத்துங்க சோழனின் கல்வெட்டிலும், மூன்றாவது குலோத்துங்க சோழனின் 3,21-ஆம் ஆட்சியாண்டுகள், ஸ்ரீவிக்ரம பாண்டியன் கல்வெட்டுகள் மூலமும் இந்நாற்பாற்கெல்லை குறிப்பிடப் பட்டுள்ளதை அறியலாம். அது மட்டுமின்றி இந்நாற்பாற்கெல்லையும் 'சூலத்தாபணம்' என்றும், 'சூல முத்திரையுடைய கற்களை நான்கு எல்லையிலும் நாட்ட வேண்டும் என்றும் கல்வெட்டுகள் விவரிக்கின்றன.

### பயிர் வகைகள்

ஸ்ரீவிக்ரமபாண்டியன், குலோத்துங்கன் கல்வெட்டுகளின் மூலம் அப்பகுதி நிலங்களில் நவிரை, புன்பயிரும், காரும், சித்திரைக்காரும், செங்கழுநீர், கமுகும்(பாக்கு), கரும்பும், இலைக்கொடியும்(வெற்றிலை), கொழுந்து, வாழை, மஞ்சள், இஞ்சி ஆகிய பயிர்கள் விளைந்துள்ளன என்பதை அறியமுடிகிறது.

# கல்வெட்டுகளில் சமுதாயம்

**பிராமணர் :** அக்காலச் சமுதாயத்தில் பிராமணர்கள் முக்கிய இடம் வகுத்துள்ளனர். அவர்கள் கோயில் நிர்வாகத்தில் பங்கெடுத்து கோயிலின் நிலத்தையும் மற்றும் ஆடு, மாடுகள் கைக்கொண்டு விளக்கு எரிப்பதும் போன்ற செயல்களில் ஈடுபட்டுள்ளதை கல்வெட்டுகளின் மூலம் அறியலாம். சிவன் கோயில்களில் பணியாற்றிய பிராமணர்கள் 'சிவப்பிராமணர்கள்' என்று அழைக்கப்பட்டனர். அவர்களில் பல பிரிவுகள் அவர்கள் குலத்தின் அடிப்படையின் பெயரிலே அழைக்கப்பட்டனர். இவ்வூர் கல்வெட்டுகளில் குறிப்பிட்டுள்ள அவர்களின் கோத்திரங்களாவன காஸ்யப கோத்திரம், காத்யாயான கோத்திரம், பாரத்வாஜ் கோத்திரம், கௌண்டிய கோத்திரம் ஆகியவைகளாகும்.

**காஸ்யப கோத்திரம் :** காஸ்யப முனிவர் என்பவரது வழியில் வந்தவர்கள் காஸ்யபகோத்திரத்தினர் என்றழைக்கப்பட்டனர்.

**காத்யாயன கோத்திரம் :** இது சுக்லயஜீர் வேதத்திற்கு உரியது. இதைப் பின்பற்றி நடப்பவர் வடக்கே இருந்து தென்னாட்டில் வாழ்கின்றவர்களாக கருதப்படுகிறது. காத்யாயனர் என்பவரது தவத்தால் பிறந்த பார்வதி தேவிக்குக் காத்யாயணி என்று பெயர்.

**பாரத்வாஜ் கோத்திரம் :** பாரத்வாஜ முனிவர் வழியில் தோன்றியவர்கள் பாரத்வாஜ் கோத்திரத்தினர் ஆவர். இலக்கண உரையாசிரியர் நச்சினார்க்கினியர் பாரத்வாஜ் கோத்திரர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**கௌண்டிய கோத்திரம்**

கௌண்டின்யர் என்பதைத் தமிழில் கௌனியர் என்று வழங்கினர். திருஞானசம்பந்தர் அக்கோத்திரத்தில் தோன்றியமையினை "கௌவியர்க்குப் பால் சுரந்த . . . ." என்ற குறிப்பால் விளங்கலாம்.

**நகரம்**

வணிகர்கள் பெருமளவில் வாழும் ஊர்கள் நகரம் எனப்பட்டது. பொதுவாக இவ்வூர்கள் 'புரம்' என்ற பின்னொட்டால் குறிக்கப்படும். இவ்வூர்களில் உள்ள வணிகர்கள் தனி நிர்வாகக்குழு அமைத்து நிர்வாகம் செய்தனர். நகரத்திற்குள் வணிகக் குடியிருப்புகளை ஏற்படுத்துதல் மற்றும் கடை வீதிகளை அமைத்தல் போன்ற பணிகளையும் செய்தனர். கடை வீதிகளில் வரித்தண்டலும் இவர்களாலே நடத்தப்பட்டது. நகர கணக்கு என 'அலுவலர்' ஒருவரும் நகர மத்தியஸ்தன் என்பவரும் இருந்துள்ளனர் என்பதை கல்வெட்டுகள் வாயிலாக அறிகிறோம்.

இந்நகரத்தில் வியாபாரிகள், வெள்ளாளர் சங்கரபாடியான், சாலியர் மற்றும் பட்டினவர் என்பவர்கள் இருந்துள்ளனர்.

சோழ மண்டலம் என்பது வளநாடுகளாகப் பிரிக்கப்பெற்றுள்ளது. வளநாடுகள் பல நாடுகளாகப் பிரிக்கப்பெற்று நாட்டில் பல ஊர்களும் சில நகரங்களும் அமையப்பெற்றிருந்தன. நகரம் என்பது வணிகர்களின் குடியிருப்பு பகுதியாகும்.

திருமாணிகுழி அருகில் 'வானவன் மதேவிபுர நகரம்' இருந்துள்ளதை பல்வேறு கல்வெட்டுகளின் வழியாக அறியமுடிகிறது. கோயில் நிலத்தினை ஆதிசண்டேஸ்வரர் பெயரில் விற்று கொடுத்துள்ளனர் என்பதனை "மேற்காநாட்டு வானவர் மாதேவிபுரத்து நகரத்தோம் நிலவினை ஆவணம் எங்களூர் திருமாணிகுழி மஹாதேவர்க்கு நாங்கள் விற்றுக்குடுத்த நிலமாவது" என்ற சொற்றொடர் மூலம் இதனை அறியலாம். மற்றும் அவர்கள் ஆவணச் செலவுகளுக்கென காசு பெற்றுக் கொண்டு செய்துள்ளனர் என்பதை "இக்காசு பதினொன்று கொண்டு விலையற விற்றுப் பொருளறக் கொண்டு இத்தேவர்க்கு இந்நிலம் விற்று விலையாவணம் செய்து குடுத்தோம் வானவன் மாதேவிபுர நகரத்தோம்" என்ற குறிப்பிலிருந்து விளங்கமுடிகிறது.

நகரத்தில் ஏற்படும் பிரச்சினைகளுக்காகவோ அல்லது மற்ற செயல்களுக்கு மத்யஸ்தம் செய்வதற்கு என்று ஒரு தனிநபர் இருந்துள்ளார் என்பதை "வானவன் மாதேவிபுரத்து நகரத்தோம் நகரம் பணிக்க எழுதினேனன் மத்தியஸ்தன் வீடுருடையான் வீடூர்நாதனேன்

எழுத்து" என்ற குறிப்பால் உய்த்துணரலாம். மேலும் வணிகர்களான குதிரை மனித்தர், மாயிலட்டி, சங்கரபாடியான் போன்றோர்கள் பற்றிய செய்தியும் இவ்வூர் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

### ஊர்

நாடுகள் பல சிற்றூர்களாக பிரிக்கப்பட்டன. நாடுகள் என்பது தற்போதைய குறுவட்டத்தினை ஒத்ததாகும். வேளாண்மை தொழிலை மேற்கொண்டிருந்த பகுதிகள் ஊர் என அழைக்கப்பட்டது. ஆகவே ஊர் என்பது விவசாய நிலப்பகுதியை உள்ளடக்கிய பகுதி என்பதாகும். இப்படி பல விவசாய நிலங்களைக் கொண்ட ஊர்களைக் கொண்டது நாடு என்பதாகும். நிலத்தின் மூலம் கிடைக்கும் வரி வருவாயை வசூலிப்பதற்கென்று நிர்வாக வசதிக்காக பல நாடுகளாக பிரித்து ஆட்சி செய்துள்ளனர்.

இவ்வாறு ஊர்களில் உள்ள விவசாய பெருமக்கள் தங்கள் பெயர்களில் வேளான் என்று சேர்த்துக் குறிப்பிட்டுள்ளனர் என்பதை இக்கோயில் கல்வெட்டுகளில் உள்ள ஆட்களின் பெயர்களின் மூலம் அறியமுடிகிறது. ஊர்களை நிர்வகித்து 'தானத்தார்' என்பவர்கள் நிர்வாகிகளாக இருந்தனர். மேலும் கணக்கர் என்பவர் ஒருவரை தனியாக நியமித்து கணக்குகளை கவனித்து வந்துள்ளனர்.

### மன்றாடி

மன்றாடி என்பவர் ஆடு, மாடு, எருமைகளை மேய்த்து வரும் இடையர் குலத்தைச் சேர்ந்தவர்களை 'மன்றாடி' என்று அழைத்துள்ளனர். இவர்கள் கோயிலுக்கு தானமாக தருகின்ற ஆடு, மாடு, எருமைகள் போன்றவற்றைப் பெற்றுக் கொண்டு அதனை மேய்த்தும், தானமாக அளித்தவர்கள் கூறிய அளவுக்கு நெய்யை கோயிலுக்கு வழங்குவதும் அவர்களது கடமையாகும். விக்கிரம சோழனின் 13-ஆவது மற்றும் மூன்றாம் இராசராச சோழனின் கல்வெட்டுகளில் மன்றாடிகளின் பெயர்களைத் தெரிவிக்கின்றன. மன்றாடியான கடவமன்றாடி, சாத்தன், அரங்கனான், சொற்கேளாக் கோன், மன்றாடி நாராயணனான குலோத்துங்க சோழன்கோன் போன்ற பெயர்கள் இடம்பெற்றுள்ளன.

### தச்சன்

இச்சமுதாயத்தில் கல்தச்சர், மரத்தச்சர் என்று இரு பிரிவினர் இருந்துள்ளனர். மரத்தச்சன் மரவேலைகளின் மூலம் செய்யப்படும்

பொருள்களையும், கல்தச்சன் என்பவன் கட்டடப் பணிகளையும், கல்வெட்டுகளை வெட்டுபவனாகவும் இருந்துள்ளான் என்பதனை "கல்லு வெட்டி நாட்டும்படியும் கட்டளை பண்ணி அந்த ஊரவற்கும் கல்தச்சனுக்கு நம்முடைய ஓலையும் போகவிட்ட அளவுக்கு கல்தச்சனைக் கொண்ட கல்லுவெட்டி நட்டுவித்து அந்த ஊரும் நிலமும் தேவதானமாக அனுபவித்துக் கொள்ளவும்" என்று ஸ்ரீபிரதாப தேவராயர் கல்வெட்டின் மூலம் அறியமுடிகிறது.

### பறையன்

சமுதாயத்தில் பறையன் என்ற பிரிவினரும் இறைவனுக்கு தானம் கொடுத்துள்ளனர் என்பதை மூன்றாம் இராசராசன் கல்வெட்டில் "வெசாலிப்பாடி நாட்டு ஜயங்கொண்ட சோழச் சதுர்வேதி மங்கலத்து தென்பிடாகை மணற்குடியிலிருக்கும் ஊர் பறையன் மண்டை சோமனான ஏழிசைமொகப்படைச்சன் பங்குனி மாசம் முதல் வைத்த சந்தி விளக்கு ஒன்றுக்கு விட்டபால் எருமை ஒன்றும் இதன் கன்று பூணி ஒன்றும்" என்பதின் மூலம் சந்திவிளக்கு ஒன்றுக்கு பால் எருமையும் அதன் கன்று ஒன்றும் 'பறையர்' இனத்தைச் சேர்ந்தவர் வழங்கியுள்ளதை அறியமுடிகிறது.

### ஆட்பெயர்கள்

இக்கோயில் கல்வெட்டுகளில் வரும் ஆட்பெயர்கள் வருமாறு: முடிகொண்ட சோழ மூவேந்த வேளாண், தில்லைநாயக மூவேந்தவேளாண், வீரநாராயண மூவேந்த வேளாண், நாராயணன், பந்தணன் பெரியோர், கழுக்குளாம் பாக்கமுடையான், வீடூர் நாதன், இலக்கண தெண்ணாய்க்க உடையார், குலோத்துங்க சோழ காடவராயன், சங்கரன் பாடியான் சாத்தன், அரங்கண்ணான், இராசநாராயண மூவேந்த வேளாண், விக்கிரம நாராயண மூவேந்த வேளாண், நாயறுகிழான், குளத்தூர் கிழான், மாதவராயன், பழந்திராயன், கெடிலவாணன், குமரவிச்சாதிர மூவேந்த வேளான், திருநீற்றுச்சோழ மூவேந்த வேளாண், திருவேங்கடபட்டன். தரணிவிச்சாதிர மூவேந்த வேளாண், கண்ணன், சோலையாழ்வார், அழகியமணவாளன், பெரியான் சிபாததூளி வடசேரியுடையான், பந்தணன் பெரியாண், திருவெண்காட்டு நங்கை.

# கல்வெட்டுகளில் பொருளியல்

## நாணயங்கள்

நாணயங்களின் பெயர்கள் பற்றி கல்வெட்டுகளில் காணலாம்.

காசுகளின் எடையைப் பற்றிக் கல்வெட்டுகள் கூறுவதைக் கொண்டு கீழ்கண்ட அளவு முறை மேற்கொள்ளப்பட்டது.

| | | |
|---|---|---|
| 2 குன்றிமணிகள் | - | 1 மஞ்சாடி |
| 20 மஞ்சாடிகள் | - | 1 கழஞ்சு (மாடை) |
| 2 காசுகள் | - | 1 மாடை |
| 1 காசு (20 குன்றிமணிகள்) | - | அரை கழஞ்சு |

காசுகளில் பல வகைகள் காணப்பட்டன அவைகளாவன:

| | | |
|---|---|---|
| அன்றாடு நற்காசு | - | மன்னரின் ஆட்சியில் வழக்கிலிருந்த காசு |
| பழங்காசு | - | முன்னர் ஆட்சி செய்த மன்னர் காசு |
| அன்றாடு நற்பழங்காசு | - | வழக்கத்திலிருந்த பழங்காசு |
| ஈழக்காசு | - | ஈழத்தில் வெளியிட்ட பொன் காசு |
| சோழ நாராயணன் | - | முதல் இராஜராஜன் கால வெள்ளி நாணயம் |
| அக்கம் | - | கல்வெட்டுகளில் காணப்படும் ஒரு வகை காசு |
| காணம் | - | ஒரு வகை காசு |

இவ்வூர் விக்கிரம சோழனின் 3-ஆவது ஆட்சியாண்டு கல்வெட்டில் அன்று புழக்கத்திலிருந்த காசு 'மாடை' என்றழைக்கப் பட்டதும், 717 1/2 மாகாணி நிலத்தினை விற்றதினால் 1035 கழஞ்சு 4 மாவரை பொன் பெறபட்டிருப்பதும் தெரியவருகிறது. இதனை "வாய்மடைப்படி நிலம் எழுநூற்று ஒரு பத்தெழரையே மாகாணியினால் பொன் ஆயிரத்து முப்பத்தைங் கழஞ்சே நான் மாவரை ஏழாவது செலவான மாடை ஆயிரத்தெழு நூற்று எண்பத்திரண்டு" இதனை இக்கல்வெட்டுக் குறிப்பால் அறிகிறோம்.

மேலும் இதே கல்வெட்டில் "ஆகப் புன்செய் உட்பட நிலம் அறுபத்திரண்டே காணியினால் நிலவோபாதி பொன் பதிற்றுங்கழஞ்சரை ஏழாவது செலவோபாதி மாடை நூற்றம்பத்திரண்டரையே மும்மாவரைக்கு" என்பதன் மூலமும் அறியமுடிகிறது.

முதலாம் குலோத்துங்க சோழனின் 42-ஆவது ஆட்சியாண்டு கல்வெட்டில் 'காசு' என்பது அன்றாடு நற்காசு என்று வழங்கப்பட்டதை "எம்மிலிசைந்த விலைபொருள் அன்றாடு நற்காசு இக்காசு பதினொன்றும்" என்ற கல்வெட்டு வரிகள் வெளிக்கொணர்கிறது.

மற்றும் முதலாம் குலோத்துங்கனின் 49-ஆவது ஆட்சியாண்டு கல்வெட்டில் 'காசு' என்றும், விக்கிரம சோழனின் 12-ஆவது ஆட்சியாண்டு கல்வெட்டில் 'மாடை' என்றும் குறிக்கப் பெற்றுள்ளன.

**பொன் அளவு**

விக்கிரம சோழனின் 12-ஆவது ஆட்சியாண்டு கல்வெட்டில் குறிக்கப்பட்டப் பொன் அளவானது "நீர்நிலம் ஆறு வேலியினால் நிலம் ஒரு பாதி பொன் எண் கழஞ்சரையே இரண்டு மஞ்சாடியும் நாலுமாவுக்கு ஏறின வாண்டைச் செலவோபாதி மாடை பதிநாலே முக்காலே மூன்று மாவும் இவ்வூரிற்". இப்பொன் நிறுத்தும் அளவுகளான 'கழஞ்சு', 'மஞ்சாடி' போன்றவை வழக்கத்திலிருந்ததை அறியமுடிகிறது.

**வட்டி**

போர்க்காலங்களிலும், பஞ்சக் காலங்களிலும் வணிகம் செய்யும் பொருட்டு மக்கள் வட்டிக்கு கடன் வாங்கினர். அவ்வட்டியை பொலிசை, பலிசை, தர்ம பொலிசை என்று கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. ஆனால் இக்கோயில் குலோத்துங்க சோழன் 49-ஆவது ஆட்சியாண்டு கல்வெட்டில் நிலத்தை விற்ற காசில் காசு ஒன்றுக்கு கால் திரமம் கோயிலுக்கு வழங்கப்பட்டு வந்திருப்பதை அறியமுடிகிறது. இதனை "சண்டேஸ்வரதேவர் திருநாமத்திலே நாங்கள் விற்றுக் குடுத்து கொள்வதாக எம் மிலிசைந்த விலைபொருள் அன்றாடு நற்காசு பத்து இக்காசு பத்தும் இந்நிலத்துக்கு விலையாவதாகவும் இந்நிலத்துக்கு நாங்கள் இறையிறுத்து இறையிலி மடப்புறமாக செலுத்துகைக்கு நாங்கள் கொண்டு காசு இருபதும் இக்காசு இருபதுங் கைக்கொண்ட பரிசாவது

இவ்வாண்டு முதல் காசு ஒன்றுக்கு திங்கள் கால் திரமம் பலிசையாக இக்காசு இருபதாலும் இத்திங்கள் ஐஞ்சு திரமம் பலிசை பொலிவாதாகவும்'' என்ற இக்கல்வெட்டுப்பகுதியின் மூலம் அறியலாம்.

## வரிகள்

அரசாங்கம் பொருள் வருவாயின்றி நடைபெற முடியாது என்பதால் குடிமக்களிடம் வரி வசூலிப்பது இன்றியமையாததாகும். ஒரு நாட்டில் உழவுத்தொழில் புரியும் நிலவுரிமையாளராகிய காணியாளர்களும், வணிகத் தொழிலை மேற்கொண்ட வணிகர்களும் பல வேறுபட்ட பிற தொழில்களை கைக்கொண்டவர்களும் இருந்தனர். இவர்கள் எல்லோரிடத்திலும் நடுநிலை குன்றாமல் நியாய முறையில் அரசன் வரி வாங்க வேண்டியது அவனுடைய கடமையும் உரிமையும் ஆகும்.

நிலவரியானது விளை நிலங்களுக்கு அவற்றில் விளையும் நெல்லின் ஒரு பகுதியாகவோ அல்லது வேறு விளை பொருட்களாகவோ பொன்னும் காசாகவோ வசூலிக்கப்பட்டு வந்தன. இதனை ஊர் தோறும் அமைக்கப்பெற்றிருந்த ஊர்ச்சபையார், மகாசபையார், பஞ்சாரவாரியம் மூலமாக காணிக்கடன் செலத்த வேண்டிய குடிமக்களிடமிருந்து ஆண்டு தோறும் வாங்கி சேர்த்து தலைநகருக்கும் அரசாங்கப் பொருள் நிலையங்களிலிருந்து பிற இடங்களுக்கும் அனுப்பிவைத்துள்ளனர்.

## நிலவரி

அரசின் வருவாய் இனங்களில் தலையாயது நிலவரியே. இது இறை, கடமை, காணிக்கடன், பேறு எனப்பட்டது. நன்செய் கடமை, புன்செய் கடமை என்றும் குறிப்பிடப்பெறும். பஞ்சவாரம், இறைக்கடமை, புரவு நெல் என்றும் அழைக்கப்பட்டன. நிலவரியில் எச்சோறு, வெட்டி, பேதிகை என்ற இந்நால்வகை வரி இனங்கள் சோழராட்சியில் காணப்படுகின்றன. இதில் இறை என்பது அரசருக்கு செலுத்த வேண்டிய நிலவரியாகும்.

## பிற வரிகள்

நிலவரியில்லாத பிற வரிகள் குடிமை என்றும் கூறப்பட்டன. சில்லறை, சிலவரி, சிற்றாயம், சிற்றிறை என்று குறிப்பிட்டுள்ளன. ஒவ்வொரு தொழிலுக்கும் உரிய சிறப்பு பெயரால் தொழில் வரியை குறிப்பிட்டு அழைத்தனர்.

இக்கோயில் கல்வெட்டுகளில் வரும் வரியினை கீழே காணலாம்.

**வாசல் விநியோகம் :** அரண்மனைத் திருமுற்றத்தில் கொண்டு செலுத்தும் காணிக்கைகள்.

**துலாபார வரி :** அரசன் துலாக்கோற்றட்டிலமர்ந்து தனி எடையுள்ள பொன் பை பிராமணர்க்குத் தானமாக வழங்கும் சிறப்பு விழாவின் பொருட்டு மக்களிடம் பெறப்படும் வரி.

**கூற்றிலக்கை :** ஊர் பொதுவிடத்தில் செயல் நிகழ்த்துவதற்குரியதாக இடங்கொள்ளுகைக்கு செலுத்தும் காணிக்கை வரி.

**கடைக்கட்டு இலக்கை :** அங்காடிக் கடைகள் அமைத்துக் கொள்வதற்குரிய இடத்திற்குச் செலுத்தும் வரி.

**கார்த்திகை பொன் வரி :** கார்த்திகை மாதம் இறைவனுக்கு திருவிழா எடுப்பதற்கென்று வசூலிக்கப்படும் வரி.

**விடைப்பேர் :** கால்நடைகளை வைத்து அதன் வழி வருமானம் பெற்று வாழ்வோர் அத்தொழிலுக்குரியதாகத் தம் பெயர்ப் பதிவு செய்து கொள்ளுவதற்கமைந்த வரி. இதனை அரசனின் அனுமதி, உத்தரவு பெறுவதற்கு அளிக்கும் வரியென்று கூறுவர்.

**தறியிறை :** நெசவாளர் ஆடை நெய்யும் தறி ஒன்றிற்கு இந்த அளவென்று அதிகாரிகள் இட்டுப்பெறும் வரித்தொகை.

**தட்டார் பாட்டம் :** பொற்கொல்லர் பட்டறை அமைத்துக் கம்மாளத் தொழில் செய்வதற்கு ஆண்டொன்றிற்கு அமைந்த வரித் தொகைளைப் பங்கீடாக செலுத்துவது.

**கடமை :** அரசு ஊர் நிலங்களை அளந்து அதன் விளைச்சலுக்கேற்ப உரிமையாளரிடம் வசூலிக்கும் வரி கடமை.

**சிற்றுவரி :** அரசு பெறும் மிகச்சிறிய அளவிலமைந்த வரிகள்.

**செட்டிவரி :** வணிகரான செட்டிகளிடம் அரசு பெறும் வரி.

**இனவரி :** அந்தந்த சாதியர் செலுத்தும் வரி.

**மாவடை :** கிராமத்தில் கால்நடைகள் அடையும் இடம் இதற்கென்று வசூலிக்கப்படும் வரி.

**குளவடை :** ஏரி, குளம் ஆகியவற்றைப் பாசனத்திற்கும் மக்களுக்கும் பயன்படுத்திக் கொள்ளுவதற்காகச் செலுத்தும் பொது வரி.

**பட்டிறை :** விளைபயிர்களை அழிவு செய்யும் கால்நடைகளை அடைக்கும்பட்டி என்னும் காப்பகத்திற்காக வசூலிக்கப்படும் வரி.

**எச்சோறு :** கூடவும் குறைக்கவும் செலுத்தவும் பெறும் வரிப்பாடு எத்தகைய தேவைகளுக்கும் ஏற்றவாறு அவ்வப்போது விதிக்கப்படும் வரி வகைகள்.

**வெட்டி முட்டையாள் :** நாள் கூலிக்கு ஆள் அமைத்து கொள்ளுவதற்குரியதாக அரசு பெறும் வரி இதனை வரிவகையுள் விநியோகம் என்றும் கூறுவர்.

**ஓலை எழுத்து விநியோகம் :** அரசனின் ஆணைகளை ஓலைகளில் எழுதுபவர்களுக்கு வசூலிக்கப்படும் தொகை.

**காரியப்பேறு :** ஊரில் நடைபெறும் காரியங்களை செய்யும் நிர்வாகிகளுக்காக வசூலிக்கப்படும் தொகை.

**ஊர்க் கணக்குப் பேறு :** ஊரின் வரவு செலவுகளை எழுதும் ஊர்க்கணக்கனுக்காக வசூலிக்கப்படும் தொகை அல்லது வரி.

**பாடிகாவல் :** நாடு காவல் அதிகாரி என்பவன் தன் நாட்டிலுள்ள ஊர்களில் களவு, கலகம் முதலான தீயச்செயல்கள் நிகழாமல் காத்து, உள்நாட்டில் அமைதி நிலவுமாறு கண்காணித்து வந்த ஒரு தலைவன் ஆவான். அச்செயலுக்காகப் பொது மக்களிடம் நாட்டு காவல் அல்லது பாடிகாவல் என்ற வரி ஒன்று நெல்லாக வாங்கப்பட்டு வந்தது.

**காணியாள் பேறு :** காணியாட்சி பெற்ற நிலங்களுக்குரிய நிலவரி.

## அளவைகள்

நீட்டல், முகத்தல். எண்ணல், நிறுத்தல் அளவுமுறைகள் சோழர், பாண்டியர், விஜயநகரர் காலத்தில் வழக்கத்திலிருந்தன.

## நீட்டலளவை

நீட்டலளவைகள் தோரை. விரல், சாண், முழம், கோல் என அழைக்கபட்டன.

| | | |
|---|---|---|
| 8 தோரை | - | 1 விரல் |
| 12 விரல் | - | 1 சாண் |
| 2 சாண் | - | 1 முழம் |

## நிறுத்தலளவை

பொன்னும். மணியும், வெள்ளியும். மிக நுண்ணிய அளவுகளான குன்றி, மஞ்சாடி. கழஞ்சு என்பனவற்றால் நிறுக்கப்பட்டன.

| | | |
|---|---|---|
| 2 குன்றி | - | 1 மஞ்சாடி |
| 20 மஞ்சாடி | - | 1 கழஞ்சு (மாடை) |
| 2 காசுகள் | - | 1 மாடை |
| 1 காசு (20 குன்றிமணி) | - | அரை கழஞ்சு |

## முகத்தலளவை

| | | |
|---|---|---|
| 5 செவிடு | - | 1 ஆழாக்கு |
| 2 ஆழாக்கு | - | 1 உழக்கு |
| 2 உழக்கு | - | 1 உரி |
| 2 உரி | - | 1 நாழி |
| 8 நாழி | - | 1 குறுமணி |
| 2 குறுமணி | - | 1 பதக்கு |
| 2 பதக்கு | - | 1 தூணி |
| 3 தூணி | - | 1 கலம் |

## கால அளவுகள்

| | | |
|---|---|---|
| 7 1/2 நாழிகை | - | 1 சாமம் |
| 8 சாமம் | - | 1 நாள் |
| 7 நாள் | - | 1 வாரம் |

| | | |
|---|---|---|
| 15 நாள் | - | 1 பக்கம் |
| 2 பக்கம் | - | 1 மாதம் |
| 6 மாதம் | - | 1 அயனம் |
| 2 அயனம் | - | 1 ஆண்டு |
| 7 1/2 நாழிகை | - | 1 சந்தி |
| 60 நாழிகை | - | 1 நாள் |
| 12 சந்தி | - | 1 நாள் |

### நிலஅளவுகள்

| | | |
|---|---|---|
| 16 சாண் | - | 1 கோல் |
| 18 கோல் | - | 1 குழி |
| 100 குழி | - | 1 மா |
| 240 குழி | - | 1 பாடகம் |
| 20 மா | - | 1 வேலி |

இக்கோயில் கல்வெட்டுகளில் நில அளவுகளான குழி, மா, வேலி போன்ற அளவுகள் காணப்படுகின்றன. கால அளவுகளில் நாழிகை, சந்தி, நாள், மாதம், ஆண்டு ஆகியவனவும் குறிப்பிடப்பட்டுள்ளன.

### நிலஅளவுகள்

விக்கிரம சோழனின் 3-ஆவது ஆட்சியாண்டு கல்வெட்டில் "நிலம் ஒன்றேகால் நீக்கி நிலம் ஐம்பத்தொன்றே கால் ஆகப் புன்செய் உட்பட நிலம் அறுபத்திரண்டே காணியினால்" என்பதினாலும், மூன்றாம் குலோத்துங்க சோழனின் 3-ஆவது ஆட்சியாண்டு கல்வெட்டில் "குலோத்துங்க சோழ நல்லூரெல்லை உட்பட்ட நிலம் நாற்பதுமாவும், ஆலப்பாக்கத்தில் பிரிந்த நிலம் எதிரிலி சோழ நல்லூர் நிலம் அறுபத்து இரண்டுமா முக்காணியும" என்பதின் மூலமும் நில அளவுகளை காண முடிகிறது.

### கால அளவுகள்

"நம்முடைய பேராலே ஒரு சந்தியும் அமுதுபண்ணி" என்று ஸ்ரீபிரதாப தேவராயர் கல்வெட்டாலும், "உதவி திருமாணிகுழி மகாதேவர் கோயிலில் சூர்ய தேவர்க்கு ஒரு சந்திக்கு திருவமுது" என்று முதல் குலோத்துங்கனின் 35-ஆவது ஆட்சியாண்டு கல்வெட்டின் மூலமும் அறியலாம்.

### முகத்தலளவை

முதல் குலோத்துங்க சோழனின் 35-ஆவது ஆட்சியாண்டு கல்வெட்டில் "சூரிய தேவர்க்கு ஒரு சந்திக்கு இரு நாழி அரிசியும்" இதில் 'நாழி' என்ற முகத்தலளவை குறிப்பிடப்பட்டுள்ளது.

விக்கிரம சோழனின் 11-ஆவது ஆட்சியாண்டு கல்வெட்டில் "எல்லாப் பயிர்கள் செய்து கொண்டும் ஆட்டைக்கடன் ஊர்க்காலால் இன்நெல்லு இருநூற்றுக் கலமும் கொள்ளக் கடவதாகவும்", இதில் 'கலம்' என்ற முகத்தலளவை குறிப்பிடப்பட்டுள்ளது.

### நிறுத்தலளவை

"பொன் ஆயிரத்து முப்பத்தைந்தே கழஞ்சே நான்மாவரை" என்று விக்கிரம சோழனின் 3-ஆவது ஆட்சியாண்டு கல்வெட்டின் மூலம் 'கழஞ்சு' அளவை அறிய முடிகிறது.

"இறைகட்டின ஒபாதி பொன் முப்பத்திரு கழஞ்சரையே மூன்று மஞ்சாடியும் ஏழு மாவரை" என்று 'கழஞ்சு', 'மஞ்சாடி', 'மாவரை' என்ற நிறுத்தலளவ்வகளும் குறிப்பிடப்பட்டுள்ளன.

# சிறப்புச் செய்திகள்

### சிவப்பிராமணர் பட்டியல்

முதற்குலோத்துங்க சோழனின் 34-ஆவது ஆட்சியாண்டு கல்வெட்டில் ஆதித்ரயந் திருமூலன் சிவதேவபட்டன், இவன் தம்பி ஏகநாயகனும் கௌசிகன் சூர்யன் ஜயங்கொண்ட சோழபட்டன், சூர்யஞ் சிவஞ்ஞானபட்டன், காஸ்யபன் மலை திருவண்ணாமலை உடையான், சந்திரவிடங்கன் மலையும், வெண்ணையன் சூர்யதேவன், காஸ்யபன் வீதிவிடங்கன் திருச்சிற்றம்பலமுடையான். இவன் தம்பி எடுத்தபாதங் கூத்தாடிபட்டன் ஆகிய இவர்கள் அனைவரும் இக்கோயிலில் சிவப்பிராமணராக இருந்துள்ளனர்.

விக்கிரம சோழனின் 4-ஆவது ஆட்சியாண்டு கல்வெட்டில் உள்ள சிவப்பிராமணர்கள் காஸ்யபன் எடுத்தபாதங் கூத்தாடிபட்டன், கவிசியந்மலை சிலம்பு சிவஞ்ஞானபட்டன், புத்தநடிகன் பூவத்தபட்டன், ஆத்ரயன் வாநவரீசன் மார்கண்டையன், திருவண்ணாமலை திருவெத்தக்கா உடையான்.

மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்தில் உள்ள சிவப்பிராமணரில் சிலர்; காஸ்யபந் கூத்தன் திருசிற்றம்பலபட்டன் இவன் தம்பி உதவி நாயகன்பட்டன், கௌசிகன் பூவத்தன் பெரியாழ்வாந் குலோத்துங்க சோழபட்டன், ஆத்திரயன் மார்கண்டேயன் சூரிதேவன் சிவதேவபட்டன் ஆகிய நால்வரும் இக்கோயிலில் சிவப்பிராமணர்களாக இருந்துள்ளனர்.

### திருவாணை, அவநிமுழுதுடையாராணை, திருவிரையாக்கலி

திருவிரையாக்கலி என்பதற்கு முன்னருள்ள திருவாணை எனும் தொடர் மொழி அது என்ன பொருளினைக் குறிக்கிறது என்பதை அறியமுடிகிறது. சிவபெருமானது ஆணையே 'திருவிரையாக்கலி' எனும் பெயரில் இருத்தல் வேண்டும். எனவே விரையாக்கலி

என்பது சிவபெருமானது ஆணையே என்று திரு. தி. வை. சதாசிவ பண்டாரத்தார் தனது நூலில் கூறியுள்ளார்.

இச்செய்தி பட்டினத்து பிள்ளையார் அருளிய கோயில் நான்மணி மாலையில் சிவபெருமானுக்கு தசாங்கம், ஹசந்த அடிகள், பொய்நீர் விரையாக்கலியெனும் ஆணையும் என்று தீஞ்சுவையொழுகும் அவ்வாசிரியப்பாவில் அவ்விறைவனது ஆணையின் திருப்பெயரைக் குறித்திருப்பது அறிந்துகொள்ள வேண்டியதாகும்.

இது போன்று முதற்குலோத்துங்க சோழனின் 42-ஆவது ஆட்சியாண்டு கல்வெட்டில் "இப்பிராமணத்தில் பேசின கடமை அல்லது ஏற்றம் சொல்லோம் திருவாணை, அவநிமுழுதுடையாராணை திருவிரையாக்கலியாணை" என்றும், மற்றும் 49-ஆவது ஆட்சியாண்டு கல்வெட்டில் "கோக்குற்றக் குடிக்குற்றக்கால் விரோதம் புகுதில் விரோதஞ் செய்தாரை ஸ்ரீயாஞ்ஞை திருவாணை மறுத்தாரைச் செய்வது செய்து இத்தன்மத்துக்கு விரோதம் வராமல் காத்துச் செலுத்த கடவோமாகவும் திருவிரையாக்கலி மறுத்தாரை தேவரடியாராயுள்ள ஆண்டார்கள் தெண்டித்து திருவிரையாக்கலி நிலை நிறுத்தக் கடவர்களாகவும், திருவாணை மறுத்தாரை நகரத்தோமெய் தெண்டித்து சந்திராதித்தவரை நிலை நிறுத்தக் கடவோமாகவும்".

இதன் மூலம் திருவிரையாக்கலி எனும் சிவபெருமானது ஆணையை மீறுபவர்களை தேவரடியார் ஆண்டார்கள் தெண்டிப்பதும் திருவாணை என்றும் அரசனது ஆணையை நகரத்தோர் தெண்டிப்பதின் மூலம் திருவிரையாக்கலி சிவனது ஆணையே என்று அறிய முடிகிறது.

## தில்லைத் திருநகர் சிறப்பு

இக்கோயில் 'பூமாலை மிடைந்து' என்று தொடங்கும் விக்கிரம சோழனின் மெய்க்கீர்த்தி மட்டும் அடங்கிய கல்வெட்டில் சோழ மன்னர்களுக்கு தில்லைச் சிற்றம்பலத்து இறைவன் குல தெய்வம் என்ற குறிப்பு காணப்படுகிறது.

"தந்குல நாயகன் தாண்டவம் புரியும் செம்பொன் அம்பலஞ் சூழ் திருமாளிகையும் கோபுர வாசலில் கூடகசாலமும் உலகு

வலங்கொண்டொளி விறங்கு நெமி குலவரை உதைய குன்றமொரு நின்றெனப் பசும்பொன் மெய்ந்து" என்பது இதை உணர்த்தும் கல்வெட்டுப் பகுதியாகும்.

தில்லையம்பதி சோழ மன்னர்களுக்கு முடிசூட்டும் பதிகளுள் ஒன்றாகும். இங்கு இரண்டாம் குலோத்துங்க சோழன் முடிசூட்டிக் கொண்டான் என்பதை இவ்வூரிலுள்ள அம்மன்னனுடைய கல்வெட்டு தெரிவிக்கின்றது. சோழ மன்னர்கள் தில்லையில் முடிசூட்டிக் கொள்வதற்கு ஆதாரமாய் உள்ள இக்கல்வெட்டு மிக முக்கியமானதாகும்.

இக்கல்வெட்டு வாசகமாவது "ஸ்வஸ்திஸ்ரீ ராசகேசரிபன்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள் தில்லைநகர் சிறப்புடையதாக திருமுடி சூடிய ஸ்ரீகுலோத்துங்க சோழ தேவர்க்கு யாண்டு அ (எட்டு) வது ஜயங்கொண்ட சோழ வளநாட்டு உதவி திருமாணிகுழி உடையநாயனார் கோயில் தானத்தார்க்கு மகனார் திருநட்சத்திரமான உருத்திரட்டாதி நாள் தீர்த்தம் பிரசாதிக்க எழுந்தருளியுள்ள சித்திரை திருநாளைக்கும் விக்கிரம சோழன் சந்திக்கும் அமுதுபடி சாத்தப்படி உள்ளிட்டு வேண்டும் நித்த நிவந்தங்களுக்கு விட்ட"

மேலும் இக்கல்வெட்டினால் இரண்டாம் குலோத்துங்க சோழனின் மகனாகிய இரண்டாம் இராசராசனின் பிறந்த நட்சத்திரம் உருத்திரட்டாதி என்று அறியமுடிகிறது.

### தியாக சமுத்திரக் கூடம்

இப்பெயருள்ள கூடம் பெரும்பற்றப்புலியூர்க் கோயிலினுள் (தில்லைநகர் எனும் சிதம்பரம்) இருந்ததை விக்கிரம சோழனின் 12-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டு உணர்த்துகிறது. இக்கூடத்தில் பள்ளிச்சோட்டை சோழகோனிலிருந்து ஆறு வேலி நிலத்தினை திருமாணிகுழி கோயிலில் இம்மன்னன் எழுந்தருளிவித்த விக்கிரம சோழச்சுரமுடையார்க்கு வேண்டும் நிவந்தங்களுக்கு அளிக்கும்படி விக்கிரம சோழன் கட்டளையிட்டுள்ளார் என்பதினை இக்கல்வெட்டின் வாயிலாக அறியமுடிகிறது.

### மூன்றாம் குலோத்துங்க சோழனின் வேறு பெயர்கள்

இக்கோயில் கல்வெட்டில் மூன்றாம் குலோத்துங்க சோழன் திரிபுவன சக்கரவர்த்தி வீரராசேந்திர சோழதேவன், இராசாக்கள் நாயகன் என்ற பெயர்களாலும் குறிக்கப்பெற்றுள்ளான் என்பது குறிப்பிடத்தக்கது.

### நடுவில் மண்டலம்

வீரபாண்டியன் கல்வெட்டு இவ்வூரை 'நடுவில் மண்டலத்து திருமாணிகுழி' என்றும், மூன்றாம் குலோத்துங்கனின் 21-ஆவது ஆட்சியாண்டு கல்வெட்டு 'நடுவில் நாடான ராஜராஜ வளநாடு' என்றும், மூன்றாம் இராசராச கல்வெட்டு 'நடுவில் மண்டலத்து ராசராச வளநாட்டு' என்றும், குறிப்பிட்டுள்ளன. சோழ மண்டலத்திற்கும் தொண்டை மண்டலத்திற்கும், நடுவில் உள்ளதால் இது 'நடுவில் மண்டலம்' என பெயர் பெற்றது. அதற்கு ஒரு சான்றாக இம்மூன்று கல்வெட்டுகளும் அமைந்துள்ளன.

### பூணி

மூன்றாம் இராசராசன் கல்வெட்டில் "சந்தி விளக்கு ஒன்றுக்கு விட்ட பால் எருமை ஒன்றும் இதன் கன்று பூணி ஒன்றும", என்ற குறிப்பினால் ஆண் கன்று எருமையை பூணி என்று அழைத்திருப்பது அக்கால வழக்கத்தினை அறியமுடிகிறது.

# நாள் வழிபாடும், திருவிழாக்களும்

திருமாணிகுழி வாமனபுரீஸ்வரர் கோயிலில் நடைபெறும் வழிபாடும் திருவிழாக்களும் பற்றி இப்பகுதியில் காணலாம். இக்கோயிலில் நான்கு கால பூசைகள் நடைபெறுகின்றன. இதற்கு காலசந்தி பூசை தொடங்கி இரவு அர்த்தசாம பூசை வரை இறைவனுக்கு நடைபெறும் நித்திய வழிபாடு நாள் வழிபாடு எனப்படுகிறது. இக்கோயிலில் நடைபெறும் நான்கு கால வழிபாடுகளாவன:

| | | | |
|---|---|---|---|
| காலசந்தி | காலை 8.30 மணி | - | 9.00 மணி |
| உச்சிக்காலம் | காலை 11.30 மணி | - | 12.00 மணி |
| சாயரட்சை | மாலை 6.00 மணி | - | 6.30 மணி |
| அர்த்தசாமம் | இரவு 7.45 மணி | - | 8.15 மணி |

இக்கோயிலில் சோழர் காலம் முதல் இன்று வரை நடந்து வருகின்ற திருவிழாக்கள் 'கார்த்திகை மாத தீபத் திருவிழா' மற்றும் 'கார்த்திகை சோமவாரத் திருவிழா' ஆகியவை சிறப்பானதாகும். இத்திருவிழாவைப்பற்றி இவ்வூர் கல்வெட்டுகளில் குறிப்புகள் உள்ளன இவ்விழாவிற்கென்று கார்த்திகை பொன் வரி என்ற வரி வசூலிக்கப்பட்டதின் மூலம் அறியலாம். திருவண்ணாமலை மலையில் கார்த்திகை தீபம் ஏற்றுவது போல் இங்குள்ள கோயிலின் முன் உள்ள மலையில் கார்த்திகை தீபம் ஏற்றப்பட்டு சிறப்பாக இத்திருவிழா தற்போதும் கொண்டாடப்படுகிறது.

அமாவாசை, பௌர்ணமி ஆகிய நாளிலிருந்து பதிமூன்றாம் நாள் நடைபெறும் பிரதோஷத்தன்று பிரதோஷ கால பூசை நடத்தி பிரதோஷ நாயகரை இரண்டாம் பிரகாரத்தில் வலமாக உலா எடுத்து வருகின்றனர்.

இக்கோயில் வாயிற் கோபுரத்தின் வடகிழக்கில் சுவாமியை தேரில் ஏற்றும் மண்டபம் சிதிலமடைந்து உபயோகிக்க முடியாத நிலையில் உள்ளது. மேலும் இத்தேரின் நான்கு மிகப்பெரிய சக்கரங்கள் கோயில் மண்டபத்தில் இருப்பதின் மூலம் இங்கு தேர்த்திருவிழா சிறப்பாக நடந்துள்ளதையும் அறியமுடிகிறது.

# நூற்பட்டியல்


நீலகண்ட சாஸ்திரி கே.எ. : சோழர்கள்

சதாசிவ பண்டாரத்தார் தி.வை : பிற்கால சோழர் வரலாறு

சுவாமி நாதன் அ. : சோழர் கால வரலாறு

Balasubramaniam S.R. : Later Chola Temples

தமிழ்நாட்டு வரலாற்று ஆசிரியர் குழு : தமிழ் நாட்டு வரலாறு சோழ பெருவேந்தர் காலம்

தமிழ்நாட்டு வரலாற்று ஆசிரியர் குழு : தமிழ்நாட்டு வரலாறு, பல்லவ, பாண்டியர் காலம்.

சேதுராமன். என் : பாண்டியர் வரலாறு

தருமபுர ஆதீனம் : தேவாரபதிகங்கள் மூன்றாம் திருமுறை

சத்தியமூர்த்தி அ.மா(பதிப்பு) : சதாசிவப்பண்டாரத்தார் ஆய்வு கட்டுரைகள்

சந்திரமூர்த்தி. மா : சூரக்குடி கோயில்

எத்திராசன், முத்து, சந்திரமூர்த்தி. மா : குந்தவையின் கலைக் கோயில்கள்

காசிநாதன். நடன : தமிழர் காசு இயல்.

திருமாணிகுழி மகாகும்பாபிஷேக சிறப்பு மலர் - 1988.

பாலசாரநாதன். சு : 'திருத்தலங்கள் வரலாறு'.

மத்திய தொல்லியல் துறை :தென்னிந்திய கல்வெட்டுகள் தொகுதி-7

மத்திய தொல்லியல் துறை : இந்திய கல்வெட்டு ஆண்டறிக்கை-1902

# நிழற்படங்கள்



திருமாணிகுழி கோயில் வடக்குப்புற தோற்றம்



கோயில் முதல் திருச்சுற்று



கோயில் இரண்டாம் திருச்சுற்று



அம்மன் சன்னதி



மடப்பள்ளி



தேவகோட்டம் - விநாயகர் சிற்பம்



தேவகோட்டம் - தட்சணாமூர்த்தி சிற்பம்



தேவகோட்டம் - அண்ணாமலையார் (லிங்கோத்பவர்)



தேவகோட்டம் - நான்முகன் (பிரம்மா)



தேவகோட்டம் -துர்கை



பைரவர்



சண்டிகேஸ்வரர்



திருச்சுற்று மதிலிலுள்ள கல்வெட்டுகள்



சூரியன்



சந்திரன்



நவக்கிரகம்



ஏழு கன்னியர்கள் (சப்தமாதர்கள்)



கஜலட்சுமி



பாலதண்டாயுதபாணி



சாஸ்தா (அய்யனார்)



உருத்திரர் திரை உருவம்



அறுபத்து மூவர் சிற்பங்கள்



திருச்சுற்று மாளிகை லிங்கங்கள்



விஷ்ணு லிங்கம் சன்னதி



திருச்சுற்று தூண்



கொடி மரம்



விநாயகர் சன்னதி



சுப்ரமணியர் சன்னதி



அம்மன் சன்னதி
தேவகோட்டம் - இந்திராணி



அம்மன் சன்னதி
தேவகோட்டம் - வைஷ்ணவி



அம்மன் சன்னதி
தேவகோட்டம் - பிராமி



அம்மன் சன்னதி
தேவகோட்டம் - துர்கை

கோயில் வாகனங்கள்







  

சோமாஸ்கந்தர் தொகுதி
(18-ஆம் நூற்றாண்டு)



விநாயகர்



அம்மன்

(18-ஆம் நூற்றாண்டு)



வள்ளி



சுப்ரமணியர்



தெய்வானை

(15-ஆம் நூற்றாண்டு)



தண்டாயுதபாணி



வேல்

(18-ஆம் நூற்றாண்டு)




நடராஜர் சிவகாமி அம்மன்
(16-ஆம் நூற்றாண்டு)




சந்திரசேகரர் அம்மன்
(18-ஆம் நூற்றாண்டு)



சண்டேஸ்வரர்
(16-ஆம் நூற்றாண்டு)



ஆதிபராசக்தி
(18-ஆம் நூற்றாண்டு)



ஸ்ரீ பிரதோஷ
நாயகர் - நாயகி



திருஞானசம்பந்தர்
நடன கோலம்



